(ALL RIGHTS RESERVED.
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

# PRACTICAL LIFE

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி.எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. | ப்ரமாதீசஹூ ஆடி மீ—JULY 1913. | ஸஞ்சிகை 7. No. 7.

பொருளடக்கம்.

| | பக்கம். |
|---|---|
| வ்யாஸங்களுக்கு வேதமதிகள் | ... 338 |
| விசேஷ வ்யாஸங்கள்.— | |
| விதைக்கரும்பு தேரிந்தெடுத்தல் | ... 338 |
| பாடசாலைத் தோட்டங்கள். —எம். எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யர் | ... 341 |
| மாஸுலை விற்பனை செய்தல் | ... 345 |
| விலைவாசி ஏற்ற விசாரணை | ... 347 |
| கதையும் ஜீவ்ய சரித்ரமும்.— | |
| முத்துமாலையின் மாயம் —எம். எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யர் | ... 349 |
| விசேஷத்திரட்டு.— | |
| தென்னிந்தியாவில் சரிகைத்தொழில் | ... 353 |
| பிடரல் பாங்கின்கீழ் கோவாபரேடிவ் யூனியன்கள் | ... 354 |
| நிலம் | ... 357 |
| எந்த ராகத்தை முதலில் அப்பியாஸிப்பது. | 360 |
| மடித்து உழுதல் | ... 360 |
| பத்ரிகை ஆராய்ச்சி. | ... 361 |
| பையன்கள் பகுதி. | ... 365 |
| ஸ்த்ரீகள் பகுதி. | ... 367 |
| பகுதிக்குறிப்புகள்.— | |
| விவஸாயம்—வ்யாபாரம்—கைத்தொழில்—பொருளாதாரம் — கோவாபரேஷன்—பாங்கி வ்யாபாரம் — இன்ஷ்யூரென்ஸ்—வித்யாவிஷயம்—விலையுள்ளபொருள்கள்—வ்யாபார முறைகள்—சாஸ்த்ரமும், யந்த்ரங்களும், நூதன கற்பிதமும்—சட்டம்—வைத்யம்—வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்—விநோதங்கள்—யுக்திகளும் முறைகளும்—தமிழ்க் கல்வி | ...369—386 |
| மாஸ வர்த்தமானம். | ... 387 |
| காலஸ்திதி. | ... 391 |
| பஞ்சாங்கம். | ... 392 |

CONTENTS.

| | PAGE. |
|---|---|
| Prize Essay Competition | ... 338 |
| Special Articles— | |
| SELECTION OF SUGAR-CANE | ... 338 |
| SCHOOL GARDENS —M. S. Krishnaswami Aiyar | ... 341 |
| SALE OF FARM PRODUCE | ... 345 |
| HIGH PRICES ENQUIRY | ... 347 |
| Story and Biography— | |
| THE MYSTERY OF THE PEARL NECKLACE —M. S. Krishnaswami Aiyar | ... 349 |
| Selections— | |
| Lace Industry in South India | ... 353 |
| Co-operative Unions under Federal Banks | ... 354 |
| Soil | ... 357 |
| Which Ragam should be Practised first? | ... 360 |
| Ploughing in | ... 360 |
| Review of the Press | ... 361 |
| Boys' Section | ... 365 |
| Ladies' Section | ... 367 |
| Departmental Notes— | |
| Agriculture | ... 369 |
| Commerce | ... 371 |
| Industry | ... 372 |
| Economics | ... 373 |
| Co-operation | ... 374 |
| Banking | ... 375 |
| Insurance | ... 376 |
| Education | ... 377 |
| Economic Products | ... 378 |
| Business Methods | ... 379 |
| Science, Machinery and Invention | ... 380 |
| Law | ... 381 |
| Medicine | ... 382 |
| Fun and Anecdote | ... 383 |
| Curiosities | ... 384 |
| Hints and Recipes | ... 385 |
| Tamil Literature | ... 386 |
| Diary of the Month | ... 387 |
| Season | ... 391 |
| Calendar | |

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunku...

# வைத்யர்களுக்குள் அபிப்ராய பேதமில்லை.

"வைத்யர்களுடைய அபிப்ராயங்கள் பலவாறுயிருக்கின்றன" என்னும் வாக்யம் ரொம்ப ஸாமான்யமானது. ஆனால் அதை எத்தனைதடவை திருப்பிச் சொன்னாலும் தகும். இந்த பூமியில் உள்ள எந்த வ்யாதியைப்பற்றியும் வைத்யர்கள் ஒரேவிதமான அபிப்ராயங் கொடுக்கவில்லை. ஆனால் உஷ்ண ப்ரதேசங்களில் உடுத்திக்கொள்வதற்கேற்ற துணி என்னவென்பதைப்பற்றி மாத்ரம் அவர்களுடைய அபிப்ராயம் ஒரேவிதமாயிருக்கிறது. ஒருவர் பாக்கியில்லாமல் எல்லா வைத்யர்களும் உஷ்ண ப்ரதேசத்தில் உடுத்திக்கொள்ள ரொம்பவும் ஏற்ற உடை கலப்பில்லாத கம்பளிதான் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால் நீங்கள் உடுத்திக்கொள்வதற்கு வாங்கும் கலப்பில்லாத கம்பளித்துணியாகிய லாலிம்லியை வாங்கவேண்டுவது அவச்யமாகும்.

மாதிரித் துணிகளுக்கும், விலை விவரங்களுக்கும் எழுதிக் கேளுங்கள். அவை இனாமாக அனுப்பப்படும்.

கான்பூர் உல்லன் மில்ஸ் கம்பெனி, லிமிடெட், கான்பூர்.

**CAWNPORE WOOLLEN MILLS Co., Ld.**

**Cawnpore.**

# சாஸ்திரீய உரங்கள்.

எங்கள் ராணிப்பேட்டை உரக்கிடங்கு.

## விசேஷ உரங்கள்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

பேஸிக் ஸூப்பர் பாஸ்பேட் (Basic Superphosphate) இதுவும் எங்கள் கிடங்கில் தயாரிக்கப்படுகிறது. இந்த தேசத்தில் அனேக விடங்களில் இந்திய விவசாயிகளால் முதல்தரமென்று சொல்லப்பட்ட நிலங்களில் எவ்வளவு சத்துள்ள உரங்களை உபயோகித்தபோதிலும், பூரா தானியம் கிடைக்கிறதில்லை. பயிர் நன்றாய்த்தான் வளர்கிறது. அறுவடையில் சரியான தானியம் கண்டு முதலாகிறதில்லையென்கிற குறைகளை தெரிந்து இந்த உரம் தயாரிக்கப் பட்டிருக்கிறது. இப்படி சம்பவிப்பதற்கு காரணம் நிலத்தில் சுண்ணும்புக் குறைவே. இதை நிவர்த்திசெய்ய இம்மாதிரி நிலங்களுக்கு பேஸிக் ஸூப்பர்பாஸ்பேட், முதல்தரமான உரம். மணிலாக் கொட்டைக்கு இது தக்க உரமென்பதில் சந்தேகமில்லை. இதில் 100-ல் 12-முதல் 13-வரையில் ஸிட்ரிக் ஆஸிட் உள்ள தண்ணீரில் கரையக்கூடிய பாஸ்பாரிக் ஆஸிட்டும், 14-முதல் 15-வரையில் மொத்த பாஸ்பாரிக் ஆஸிட்டும், 35-முதல் 40 வரையில் சுண்ணும்பும், உத்திரவாதம் செய்யப்படுகிறது.

பேஸிக் ஸ்லாக் (Basic Slag). இது முதல்தரமான சீமை சரக்கு. இதில் 100-ல் 17-முதல் 20-வரையில் பாஸ்பாரிக் ஆஸிட் அடங்கியுள்ள தென்று உத்திரவாதம் செய்யப்படுகிறது.

**The Presidency Manure Works, Ltd.,**

**Ranipet.**

**Managing Agents: Parry & Co., Madras.**

**இராஜதானி ரஸாயன உரக்கிடங்கு, இராணிப்பேட்டை.**

மானேஜிங் ஏஜண்டுகள்:—


பாரி ஆண்டு கம்பெனி,

மதராஸ்.

# KHADER AND YOUSUFF BROS

Watch Dealers, P. L., MADRAS, E. C.

## “ஸிர்தார்”




இது மேல் சாவியுள்ளதும், கனத்த கண்ணுடியால் மூடிபோட்டதும் மிகவும் சரியான காலத்தைக் காட்டக் கூடியதும்வெகு நாளைக்கு ஓடக்கூடியது மான வெகு நேர்த்தியான கை கடியாரம். இதன் இந்தியா ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்கு ஸப்ளை செய்யப்படுகிறது. மிகவும் சிறந்த “லீவர்” கடியாரம்.

விலை ரூ. 12.


## “உத்தியோகஸ்தர்”

இது உத்யோகஸ்தர்களுக்குஸ்பெஷலாக செய்யப்பட்ட கடியாரம். மேல்சாவியுள்ளது. ஒருபக்கம் கனத்த கண்ணுடியால் மூடியுள்ளது. சரியான காலம் காட்டும். முரட்டுத்தனமாயுபயோகித்தாலும்கெட்டுப்போகாது. கொஞ்சம் சிறிய சயிஸ். அழகாயும் திருப்திகரமாயு மிருக்கும்.



தபாற்கூலியுள்பட விலை ரூ. 10

## கோல்ட் மெடல் “யாங்கீ” ஸர்க்யூட் கட்டில்.



இது மிகவும் சிறந்த அமெரிக்கன் மரத்தினுல் செய்யப்பட்டடு, வெளியே போகிறவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இது $6\frac{1}{2}$ அடி நீளம் $2\frac{1}{2}$ அடி அகலம் $1\frac{1}{2}$ அடி உயரம். அதனுடைய நிறை 15 பவுண்டுதான். 1000 பவுண்டு எடை தாங்கும், கோடை காலத்தில் நிலா வெளிச்சத்தில் மிகவும் லகுவாய்த் தூக்கிக்கொண்டுபோய், வேண்டுமான இடத்தில் போட்டுக்கொண்டு தூங்கலாம். சொசுவலை யுள்பட ரூ. 20 இதற்கு எழுதும்போது, சமீபத்திலுள்ளரயில் ஸ்டேஷனை எழுதுவதுடன் ரூ.5 அட்வான்ஸ் அனுப்பவேணும்.

# காதர் அண்டு யூஸப் பிரதர்ஸ்,

கடியார வர்த்தகர்கள், கவர்மெண்டு ஸப்ளையர்கள்,

பி. எல். சென்னை, E. C.


MADRAS: Printed by Thompson & Co. at the Minerva Press

Published by G. A. VAIDYARAMAN & Co., Sunkurama Chetty Street, Georgetown, Madras.

SUPPLEMENT TO "THE PRACTICAL LIFE."

"பிழைக்கும் வழி" க்கு அனுபந்தம்.



மதராஸ் ஹைகோர்ட்டு ஜட்ஜுகள்.

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர் — G. A. VaidyaRaman, B.A. EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. — ப்ரமாதீசஸ்ரு ஆடிமீ, JULY 1913. — ஸஞ்சிகை 7. No. 7.

## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | Foreign. Rs. A. P. |
|---|---|---|
| Per annum ... | 4 0 0 ... | ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 ... | ... 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 ... | ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | அந்ய நாடு. |
|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 0 0 ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 2 0 ... | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |

வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன், மதராஸ்,

## PRIZE ESSAY COMPETITION.
## வ்யாஸங்களுக்கு வெகுமதிகள்.

1913-ம் வருஷம் ஜுலைமாஸம் முதல் நமது பத்ரிகையில் ஒரு வ்யாஸப் போட்டி நடத்தப்படும். எந்த விஷயத்தைப் பற்றி வ்யாஸம் எழுதவேண்டும் என்பதை ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் குறிப்பிடுவோம். சந்தாதாரர்கள் மட்டும் இந்தப் போட்டியில் சேரலாம். வ்யாஸங்களை ஸுலபமானதும் தெளிவானதுமான தமிழ் நடையில் எழுத வேண்டும்.

ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். ஒவ்வொரு வ்யாஸமும், நமது பத்ரிகையில் $2\frac{1}{2}$-பக்கம் அதாவது 4000 எழுத்துகளுக்கு மேல்போகக்கூடாது. ஒப்புக்கொள்ளப்பட்ட வ்யாஸங்களில் முதல்தரமானதை எழுதியவருக்கு ஐந்து ரூபாய் பரிசு கொடுக்கப்படும்.

ஒப்புக்கொள்ளப்பட்ட மற்ற வ்யாஸங்களில் எவைகளையாவது ப்ரசுரிக்கும் பக்ஷத்தில் அவைகளுக்கும் நமது பத்ரிகையில் வெளியாகும் மற்ற வ்யாஸங்களைப்போல் வழக்கப்படி பக்கம் ஒன்றுக்கு ஒரு ரூபாயாக ஸம்பாவனை செய்யப்படும். வ்யாஸங்களைத் தராதரம் பார்ப்பதில் பத்ராதிபருடைய தீர்மானம் முடிவானது.

ஸெப்டம்பர் மாஸத்துக்கு வ்யாஸம் எழுதுவதற்கு விஷயம்.

க்ராமங்களிலுள்ள ஸுகாதாரக் குறைவுகளும் அவைகளை நிவர்த்திக்க வழிகளும்.

வ்யாஸங்களை ஸெப்டம்பர்மீ 30உக்குள் அனுப்பிவிடவேண்டும். அந்தத் தேதிக்குப்பின் அனுப்பப்படும் வ்யாஸங்கள் வ்யாஸப் போட்டிக்கு அங்கீகரிக்கப்படமாட்டா.

பத்ராதிபர்.

## SPECIAL ARTICLES.
## விசேஷ வ்யாஸங்கள்.

### SELECTION OF SUGAR CANE.
### விதைக்கரும்பு தெரிந்தெடுத்தல்.

இந்தியாவில் கரும்பு ஸாகுபடி செய்வதற்கு மேலான ஸௌகர்யங்கள் ரொம்ப இருந்தும், ஜாவா மொரிஷஸ் முதலிய வெளிநாடுகளிலிருந்து ரொம்ப சர்க்கரை நமது தேசத்துக்கு வருவது மிகவும் விஸனகரமானதே. இப்படி இந்தியாவின் வ்யாபாரம் பரிதாபமான நிலைமையில் இருப்பதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று விதைக்கரும்பு தெரிந்தெடுப்பதற்குவேண்டியஞானமும்,ச்ரத்தையும் இல்லாமையே. விதைக் கரும்பு தெரிந்தெடுப்பற்றி மொரிஷஸ் தீவில் ப்ரசுரமாகும் விவஸாயப் பத்ரிகை ஒன்றில் மிஸ்டர் மார்ஷல் என்ற ஒருவர் எழுதியிருப்பதின் ஸாராம்சத்தை இங்கே தருகிறோம். விதைக் கரும்பு எடுப்பதற்கு, முதலில், கரும்பு வெட்டுங்காலத்தில் பார்வைக்கு நல்லவளர்ச்சியுள்ளவும் நோயில்லாதவுமான கரும்புகளைத் தெரிந்தெடுக்க வேண்டும். வ்யாதி யிருப்பதாகக்கொஞ்சம் சின்னம் இருந்தாலும்ஸரி, அல்லது இயல்பாயுள்ள தன்மையில்லாமல் மாறுபாடுகள் இருந்தாலும் ஸரி, அவைகளை விதைக் கரும்புக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது. இப்படிப்பொறுக்கி எடுத்த கரும்புகளின் தோகைகளை ஒவ்வொன்றிலும் 10 அல்லது 12 கணுக்கள் வரையில் இருக்கும்படி வெட்டி, அவைகளை ஒரு கொட்டகையில்

கொண்டு போய் வைத்துக்கொள்ள வேண்டும். இவைகளிலிருந்து தாய்க்கழிகளையும், அவைகளிலிருந்து முளைத்த கிளைக்கழிகளையும் பிரித்தெடுக்க வேண்டும். இந்தவேலை அனுபோகமுள்ளவர்கள் தான் செய்யவேண்டும். அவர்களுக்கும் சிலஸமயம் தவறுதல்கள் ஏற்படுவதுண்டு. இரண்டும் ஒரேமாதிரியாயிருந்து இது தாய்க்கழி, இதுகிளைக்கழி என்று நிச்சயிப்பது முடியாமல் ஸந்தேகம் உண்டானால், இரண்டையும் ஒரே ஜாதியாக எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால் இவை இரண்டும் வளருவதற்கு பூமிமுதலியவைகளின் நிலைமை ஒரே மாதிரியாக இருந்திருக்கின்றனவென்றும், ஆகையால் அவை இரண்டும் அமைப்பில் ஒரே விதமாயிருக்கும் என்றும் சொல்லலாம்.

பிற்பாடு கழிகளிலிருந்து இலையைக்கழித்து விடவேண்டும். நுனிப்பக்கத்தில் இலையைப்பிரித்தெடுப்பது கொஞ்சம் கஷ்டமாயிருக்குமிடத்தில் நிறுத்திக்கொண்டு, இலையைப் பிரிக்காமல் விட்டு விட்டு மறுபடியும் நறுக்கி விடவேண்டும். இலையை ஸுலபமாய் எடுத்து விடமுடியாதபோது கஷ்டப்பட்டு எடுத்தால் கணுவில் இலையால்மூடப்பட்டிருக்கும்கண்ணுக்கு சேதம் உண்டாகும். இந்தவேலையை அனுபோகமுள்ளவர்கள் தான் செய்யவேண்டும். அவர்களும் ரொம்ப ஜாக்ரதையெடுத்துக் கொள்ளவேண்டும். வெட்டானது, ரொம்ப நர்வுசாய் விழுவதோடு வெட்டுப்பட்ட இடம் நொறுங்கிப்போகக்கூடாதாகையால் வெட்டுப்பட்ட இடத்துக்கும் கணுக்கும் நடுவிலுள்ள பாகத்துக்கும் யாதொரு கெடுதலும் நேரிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். இந்த வெட்டுவாயைத்தான் ரொம்ப ஜாக்ரதையாய் கவனிக்கவேண்டும். ஸரியாய்நறுக்காவிட்டால் வெட்டுவாய் வழியாய் நோய்க்கிடமான க்ருமிகளும் பூச்சிகளும் புகுந்து கரும்பைக்கெடுத்து விட ஹேதுவாகும். ஒழுங்காய் நறுக்காவிட்டால் கணுக்கரும்பில் ஒருவித மாறுபாடு உண்டாகி, முளைக்கண்வரையில்போய் அது முளைக்காதபடி நாசமாக்கிவிடும்.

கழிகளைப்பிரித்தெடுக்கும் கொட்டகையில் இரண்டு பாகம்உண்டு. ஒன்றில்தாய்க்கழிகளையும், மற்றொன்றில் கிளைக்கழிகளையும் பிரித்தெடுப்பார்கள். அனுஷ்டிக்கும்முறை இரண்டிலும் ஒன்று தான்.

ஒவ்வொரு பாகத்திலும் மூன்று தொட்டிகள் உண்டு. அவைகளில் ஜலம் விட்டுக் கரைத்த மொலாஸஸ் என்று சொல்லப்படும் தேன்பாகு விடப்பட்டிருக்கும். முதல் தொட்டியில் தேன்பாகு அதிகமாயும் ஜலம்குறைவாயும், இரண்டாவது தொட்டியில் தேன்பாகு முதல்தொட்டி யிலுள்ளதைவிட கொஞ்சம் குறைவாயும், மூன்றாவது தொட்டியில் தேன்பாகு இன்னம் குறைவாயும், இருக்கும். இதனால் முதல் தொட்டியில் ஜலத்தில் அதிகத்தேன்பாகு இருப்பதனால் அதிக "டென்ஸிடி" யும், ("டென்ஸிடி" என்பதுஇன்னதென்று நன்றாயறிவதற்கு பிழைக்கும்வழி 4-வதுவால்யும், 436-ம் பக்கம் பார்க்க) இரண்டாவது தொட்டியில் டென்ஸிடி குறைவாயும், மூன்றாவது தொட்டியில் டென்ஸிடி இன்னம் குறைவாயும் இருக்கும்.

வெட்டிக்கொண்டு வந்த நுனிக்கழிகளை தேன்பாகு ஜலத்தில் அமிழ்த்துவதனால், எநத நுனிக்கழிகள் கனமுள்ளவை, எவை லேசானவை என்று ஸுலபமாய்த்தெரிந்து கொள்ளலாம். லேசானவை மிதக்கும், கனமானவை அமிழ்ந்துவிடும். இப்படிச்செய்வதின் நோக்கம் என்னவென்றால், கரும்பு ஸரியான நிலைமையிலிருக்கும்போது அதில் எவ்வளவு சர்க்கரைபாகம் இருக்கிறதோ அதற்குத்தகுந்தபடியே கரும்பும் கனமாயோ லேசாயோ இருக்குமாதலால் இந்தமுறையால் எந்த விதைக்கரும்பில் சர்க்கரைபாகம் அதிகம்

இருக்கிறது, எதில் குறைவாய் இருக்கிறது, என்று அறிந்து கொள்ளலாம் என்பதே. மேலும், கரும்புத்தோகைகள் நல்லஸ்திதியிலிருக்கின்றனவா என்றும் அறிந்து கொள்ளலாம். ஏனென்றால் கரும்பில் நோயிருந்தால் அதன் நிறைகுறைந்து விடும். நோயில்லாமல் நல்லதாயிருந்தால் கனமாக இருக்கும்.

முன் சொன்னபடி முதல் தொட்டியிலுள்ள பாகு ஜலந்தான் ரொம்ப அதிக டென்ஸிடியுள்ளது. அதில் நுனிக்கழிகளைப் போட்டால், இந்த அதிக டென்ஸிடியுள்ள பாகு ஜலத்தைக்காட்டிலும் கனமான கழிகள் அதில் அமிழ்ந்துவிடும். லேசானவை மிதக்கும். கனமானவைகளை 1-ம் நம்பர் கனமானவை என்று பெயரிடுவோம். அவைகளை நடுவதற்கென்று தனியாய் எடுத்து வைத்து விடவேண்டும். முதல் தொட்டியில் மிதந்தவைகளைத்தனியாய்எடுத்து முதல்தொட்டி தேன்பாகைவிட டென்ஸிடி கொஞ்சம் குறைவாயுள்ள இரண்டாம் தொட்டி தேன்பாகில் போட்டால், டென்ஸிடி குறைவாயுள்ள இரண்டாம் தொட்டி தேன்பாகைவிட கனமாயுள்ள கழிகள் அமிழ்ந்துவிடும். லேசானவைகள் மிதக்கும். இரண்டாம் தொட்டியில் அமிழ்ந்தவைகளை (2-ம் நம்பர் கனமானவைகளை) எடுத்து முதல் நம்பரோடுகலக்காமல் ப்ரத்யேகமாய் நடுவதற்கென்று வைத்துவிடவும். இரண்டாந்தொட்டித் தேன்பாகில் மிதந்தவைகளை டென்ஸிடி ரொம்பவும் குறைவாயுள்ள மூன்றும் தொட்டி தேன்பாகில் போடவும். இதில் அமிழ்பவைகளை (3-நம்பர் கனமானவை) மற்றகனமானவைகளோடு கலக்காமல் தனியாய் நடுவதற்கென்று வைத்துக்கொள்ளவும். இந்த மூன்று தொட்டியிலும் மிதப்பவைகள் நடுவதற்கு உபயோகமில்லை. ஆகையால் அவற்றை கரும்பாலைக்கு சாறுபிழிய அனுப்பி விடவேண்டும்.

மூன்றுவிதத் தொட்டிகளிலும் எவ்வளவு டென்ஸிடி இருக்கவேண்டும் என்பது தோட்டத்தின் நிலைமைக்குத் தக்கப்படியும், கிடைக்கக்கூடிய கொழுந்தாடையின் அளவுக்குத் தக்கபடிப்பும் வித்யாஸப்படும். உதாரணமாக, கொழுந்தாடைகள் அதிகமாகக் கிடைக்காத தோட்டத்தில் விதைக்கரும்பு தெரிந்தெடுக்கும் போது அதிக டென்ஸிடியுள்ள பாகை கடைசித்தொட்டியில் உபயோகப்படுத்தினால், ஸ்வல்ப விதைக்கரும்புகளே கிடைக்கும். அப்படிப்பட்ட தோட்டங்களில் குறைந்த டென்ஸிடியுள்ள ஜலத்தைத்தான் மூன்றாவது தொட்டியில் உபயோகிப்பார்கள். இப்படிச்செய்யாவிட்டால் விதைக்கரும்பு வெளியில் வாங்க வேண்டியதாக நேரிடும். மூன்றாவது தொட்டியிலுள்ள பாகின் டென்ஸிடிக்குத் தகுந்தபடி மற்ற இரண்டாவது முதல் தொட்டிகளிலும் ஒரு குறித்தஅளவில் டென்ஸிடி அதிகப்படும். அதாவது பாகின்பாகம் அதிகமாயிருக்கும்.

கிளைக்கழிகளை தாய்க்கழிகளைப்போலவே தொட்டிகளில் பரீக்ஷித்துப் பார்ப்பார்கள். ஆனால் இவை தாய்க்கழிகளுடன் கலக்காமல் கொட்டகையின் வேறு இடத்தில் பரீக்ஷிக்கப்படும்.

இனி மேலே சொன்னபடி தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று விதமான கொழுந்தாடைகளில் நடுவதற்கு வேண்டியதை விட அதிகமாக கண்கள் (அதாவது மூளைகள்) இருக்குமாதலால், எத்தனைகண்கள் வேண்டுமோ அத்தனையை வைத்து கரும்பைத்துண்டுகளாக வெட்ட வேண்டும். ஜாவாத்தீவில் சில இடங்களில் துண்டுகளுக்கு 5 கண்களும், சில இடங்களில் 3 கண்களும் உபயோகப்படுத்துவதுவழக்கம். இந்த விதைக்கரும்புகளை நடுவதற்குமுன் "போர்டோமிக்ஸ்சர்" என்னும் மருந்தில் நனைக்க வேண்டும். அந்தமருந்து செய்யும் விதம் பின்வருமாறு:—

3 ராத்தல் சுத்தமான மயில் துத்தத்தை ஒரு முரட்டுப்பையில் போட்டு, ஒரு பீப்பாயில் 20 காலன் ஜலத்தைக்கொட்டி அந்தப்பையை ஜலத்தில் தொங்கவிடவேண்டும். துத்தம் ஜலத்தில் கரைந்து போகும். இன்னொரு பாத்ரத்தில் ஒரு ராத்தல் சுண்ணும்புக் கல்லைத்தாளித்து சல்லடையின் வழியாக மயில் துத்தம் உள்ள பீப்பாயில் போட்டுவிடவும். எல்லாவற்றையும் நன்ருய்க்கலக்கவும்.

கரும்பை தோட்டத்திலிருந்து வெட்டினது முதல் கொட்டகையிலிருந்து நடுவதற்கு அனுப்பப்படும் வரையில் ஏற்படும் காலம் 48 மணி முதல் 60 மணிக்கு மேல் போகக்கூடாது. துண்டுகளை நடுவதில் ஒரு முக்யவிஷயம் கவனிக்கத்தக்கது. தாய்க்கழிகள் கிளைக்கழிகள் ஆகிய இவை ஒவ்வொன்றிலும் மூன்றுவிதமான விதைக்கரும்புகள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைக்கலந்து நடுவது நல்லதல்ல. முதல் நம்பர் விதைக்கரும்பு, மூன்ரும்நம்பர் விதைக்கரும்பைவிட அதிகதிடமும் உறுதியுள்ளதாகையால் இரண்டையும் சேர்த்து நட்டால் முதல் நம்பரானது மூன்ரும் பக்கத்திலுள்ள நம்பரின் உணவை சீக்ரம் க்ரகித்து மூன்ரும்நம்பர் கரும்பின் வளர்ச்சியைக் கெடுத்துவிடும். ஒவ்வொரு வித விதைக்கரும்பையும் தனித்தனி இடங்களில் நட்டு ஸகல ஸௌகர்யத்தோடும் வளரும்படி செய்ய வேண்டும்.

---

## SCHOOL GARDENS,

BY

M. S. KRISHNASWAMI AIYAR.

### பாடசாலைத் தோட்டங்கள்.

சிலகாலமாக எலிமென்டரி பாடசாலைகளிலும், ஸெகெண்டரி பாடசாலைகளின் கீழ்வகுப்புக்களிலும் பற்பல சீர்திருத்தங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. அவைகளில் பாடசாலைத்தோட்டம் வைத்தல் ஒன்ருகும்.

பாடசாலைத் தோட்டமென்பது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் உபயோகத்துக்காக, அவர்கள் கற்கும் கல்விக்கு அனுஸரணையாக, அமைக்கப்படும் ஒரு தோட்டமாகும். இதற்கும் ஸாதாரண தோட்டங்களுக்கும் வித்யாஸமுண்டு. ஸாதாரணத்தோட்டத்தில் தோட்டத்துக்குடையவர்களுடைய விருப்பத்துக்கும் மனோபாவத்துக்கும் ஏற்றதாக தோட்டம் அமைக்கப்படும். அவருடைய இஷ்டத்துக்கேற்ற செடி கொடிகளும் வளர்க்கப்படும். பாடசாலைத்தோட்டத்திலோ, பாடசாலையில் பயிலும் மாணவர்களுடைய கல்விக்கு ஸாதகமாக இருக்கும்படியே செடிகொடிகள் வளர்க்கப்படும். பாடசாலைத் தோட்டம் கூடியமட்டும் பாடசாலைக்கு ஸமீபத்திலே இருப்பது நல்லது. கூடுமானல் பாடசாலையின் காம்பவுண்டுக்குள் உள்ள காலிநிலத்தில் அமைப்பது மேலானது. தோட்டம் எவ்வளவுக்கு ஸமீபத்தில் இருக்கிறதோ அவ்வளவுக்கு ரொம்பவும் ஸௌகர்யமானது என்று சொல்லலாம்.

நோக்கம்.

(1) பள்ளிக்கூடங்களில் மாணுக்கர்களுக்குக் கல்வி கற்பிப்பதில் ஸாதனமாயிருப்பதே தோட்டத்தின் முக்ய நோக்கமாகும். மாணவர்களுக்குக் கற்பிக்கும் பற்பலபாடங்களுக்கு மிகவும் உபயோகப்படும்படி தோட்டம் அமைக்கவேண்டும்.

(2) மாணுக்கர்கள் தோட்டத்தில் வேலை செய்வதால் அவர்களுடைய தேகமும், அவயவங்களும் பயிற்சியடைகின்றன. தோட்டவேலை முதலியவைகளால் மாணுக்கர்கள் கைப்பயிற்சிவேலைகளில் வெறுப்புக்கொள்ளாமல் அவைகளைச் செய்வதில் ப்ரியங்கொள்வார்கள்.

(3) மாணுக்கர்களுக்கு உற்றுப் பார்க்கும் தன்மையும், வஸ்துக்களின் குணகுணங்களை ஆராயும் தன்மையும், வ்ருத்தியடையும். தோட்டவேலையை பாடங்களுக்கு ஸாதனமான

ஒரு தொழிலாகச்செய்வதால் மாணவர்களுக்கு மனோசக்திகள் வ்ருத்தியடைகின்றன.

(4) தோட்டத்திலுள்ள பலவகைச் செடிகளையும் புஷ்பங்களையும் கண்டு மகிழ்ந்து, இவைகளின் மூலமாகவும், வெளியே உள்ள செடி கொடிகளைக்கண்டு அவைகளின் மூலமாகவும், இயற்கை அழகைக்கண்டு ஆனந்தித்தல் நான்காவது நோக்கம்.

(5) விவஸாயத்திற்கு ஒரு ஸாதனமாக ஏற்படுதல்.

(6) தோட்டவேலையே ஒரு தொழிலாகக் கருதப்படுவது.

மேற்கூறிய நோக்கங்களில் முதல் நான்கு நோக்கங்களும் எல்லா பாடசாலைகளுக்கும் இன்றியமையாதவை. பாடங்களில் வந்துள்ள செடிகள் முதலியவற்றைப் பயிரிட்டு அவைகளைக்கொண்டு பாடங்களைக் கற்பித்தால் பாடங்கள் மாணவர்களுக்கு எளிதில் விளங்குமென்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். இயற்கைப் பாடம் (நேச்சர் ஸ்டடி) போன்ற பாடங்களில் இது மிகவும் ப்ரயோஜனமானது என்பதில் யாதொரு ஸந்தேகமும் இல்லை. இயற்கைப்பாடத்தில், வெளியிடங்களில் இயற்கையாய் வளர்ந்துள்ள செடி கொடிகள் மரங்கள் ஆகிய இவைகளை ஆராய்ந்தறிவதேயல்லாமல், அப்படி வெளிப்புறங்களுக்குச் சென்று ஆராய்வது கஷ்டமான விஷயங்களைப் பாடசாலைத் தோட்டங்களின் உதவியால் ஆராய்ந்தறிய வேண்டும். கூடியமட்டும் மாணவர்கள் தாங்களே தோட்டங்களில் செடி கொடிகள் நட்டுப்பயிர் செய்யவேண்டும். இதனால் அவர்களுடைய தேகத்துக்கும் அவயவங்களுக்கும் பயிற்சி ஏற்படுகிறது. பொதுவாக, சிறுவர்கள் வேலைசெய்ய இஷ்டப்படுகிறவர்கள். தோட்டவேலை, ஒழுங்குபடுத்தின விளையாட்டுப் போன்றதாகையால், விளையாட்டுப்போக்கில் அவர்களுக்கு அநேக விஷயங்களைக் கற்றுக் கொடுத்துவிடலாம்.

மாணவர்களுடைய உற்றுப்பார்க்கும் சக்தியையும், பொருள்களின் குணகுணங்களை ஆராயும் தன்மையையும், பொதுவாய் அவர்களுடைய மனோசக்திகளையும் வ்ருத்திசெய்வது எல்லாபள்ளிக்கூடங்களினுடையவும் நோக்கமாயிருக்கவேண்டும்.

மாணவர்களை இயற்கையழகைக் கண்டானந்திக்கும்படி தூண்டுவதால் அவர்களுடைய மனம் விசாலமடைந்து அவர்கள் பின்னால் ஸந்தோஷமாகக் காலங்கழிக்கவும் ஸாதகமாகிறது.

அடுத்தபடியான நோக்கம் எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் ஏற்றதாகாது. பட்டணங்களிலுள்ள பாடசாலைகளில் படிக்கும் மாணாக்கர்கள் பிற்காலத்தில் வெகுவாய் உத்யோகத்தை நாடுபவர்களாகவாவது, அல்லது விவஸாயம் ஒழிந்தவேறு தொழில்களைச் செய்து ஜீவிக்கப் போகிறவர்களாகவாவது இருப்பார்களாகையால், அவர்களுக்கு விவஸாயத்தை முக்ய நோக்கமாகக் கொண்ட தோட்டங்கள் அதிகம் பயன்படா. அதாவது, அவர்களுக்கு விவஸாயசாஸ்த்ரத்தின் ப்ரதம அம்சங்கள் கற்பிப்பதற்கேற்ற ஒரு ஸாதனமாகத் தோட்டத்தை யமைக்கக்கூடாது.

மேலும் சில இடங்களில் தோட்டவேலையே ஒரு தொழிலாகக் கொள்வதும் சிறுபான்மை நோக்கமாக ஆகலாம். இங்க்லண்டில் தோட்டக்காரர்களின் சிறுவர்களுக்குத் தோட்டவேலையை ஒரு தொழிலாகக் கற்பிக்கிறார்களாம். ஆனால் இந்தியாவில் அப்படி பாடசாலைகளில் பயிற்சிபெற்ற தோட்டக்காரர்கள் இனி தேவையாயிருக்குமென்றாலும், எல்லாமாணவர்களையும் தோட்டக்காரர்களாக்க முயலுவது தவறான நோக்கமாகும். ஆனால் இங்க்லீஷ்காரர்களைப்போல் மாணவர்கள் தங்கள் வாழ்நாட்களில் தங்கள் வீடுகளில் புஷ்பச் செடிகளையும் கொடிகளையும் வைத்துப் பயிர்செய்து

வீடுகளை அலங்காரமாகச் செய்து வைத்துக் கொள்ள இதை ஒரு ஸாதகமாகக் கொள்ள லாம். இப்படிச் செய்பவர்கள் இயற்கை யழ கைக்கண்டு ஆனந்திப்பவர்கள். இது மேலே சொன்ன இயற்கையழகைக்கொண்டு ஆனந் திப்பதாகிய நோக்கத்துள் அடங்கும்.

தோட்டங்களின் உபயோகம்.

(1) பாஷா பாடங்களில் வரும் அநேக செடி கொடிகளைப்பற்றி பாடங்கள் கற்பிக்கை யில் அநேக உபாத்யாயர்கள் வர்ணப்படங்க ளைக்கொண்டும், கருப்புப் பலகையில் எழுதும் ஸாதாரணப்படங்களைக் கொண்டும், சிலர் ஒரு ஸாதனமுமே யில்லாமலும், கற்பிக்கிறார்கள். அப்படிக் கற்பிக்காமல் செடி கொடிகளை நேரில் காட்டி கற்பித்தால் பாடங்கள் நட த்துவது உபாத்யாயர்களுக்கு எளிதாயிருப்ப தோடு மாணாக்கர்களுக்கு பாடங்களும் எளி தில் விளங்கும்.

பாஷைப்பாடத்தில் வந்துள்ளவும், தோட்ட த்தில் பயிரிட்டு வளர்க்கக் கூடியவையுமான, செடிகொடிகளைப் பயிரிட்டு, பாடம் நடக்கும் போது பிள்ளைகளைக்கொண்டு அவைகளை உற் றுநோக்கச் செய்து, விஷயங்களை அவர்களைக் கொண்டே வருவித்தால், பிள்ளைகள் பாடத்தி லுள்ளவற்றை நெட்டுருச் செய்யாமல் விஷய த்தை நன்றாய் க்ரகித்தவர்களாவார்கள்.

(2) இயற்கைப் பாடத்தில் பெரும்பாகம் வெளியேபோய்க் கற்கவேண்டியதாகும். குன் று, மலை, ஏரி, குளம், அருவி, கால்வாய், ஆறு, நீர்நிலைகளில் உள்ள மீன்கள், தவளைகள், நீர்ப் பூண்டுகள், மரங்களின் வளர்ச்சி, அவைகளின் பட்டையின் லக்ஷணங்கள், பருவங்களின் தன் மை, தானுகப்படுகைகளில் வளர்ந்திருக்கும் செடி கொடிகளின் லக்ஷணங்கள், பூமியின் தன்மை, ஆகாயத்தில் உள்ளமேகம், ஸூர் யன், சந்த்ரன் முதலியவைகளைப் பற்றிய விஷ யங்களைக் கற்பதற்கு வெளிப் புறங்களே ஏற் றவை. என்றாலும், செடி கொடிகளின் விதை களைப்போட்டு, அவைகள் எப்படி வளருகின் றன; அவைகளின் வேர்களின் அமைப்பு எப் படியிருக்கிறது; முளைகள் எப்படி மாறுகின் றன, என்பவைமுதலாக வுள்ள பல விஷயங் களை பாடசாலைத் தோட்டத்தில் ஆராய்வது தான் ஸுலபமாயிருக்கும். மேலும், ஒவ்வொ ருநாளும் வெளியே சென்று அவைகளைப்பற் றி ஆராய்வது கஷ்டமாகையால் நாம் கற்கவே ண்டியவைகளில் கூடியவற்றை தோட்டத்தில் பயிராக்கி அவைகளைப் பற்றிக் கற்பது மிகவும் நல்லது.

மாணவர்கள் செடிகளைப் பயிரிட்டு அவைக ளைக் கவனித்து வருவதோடு தாங்கள் கவனி த்தவைகளைஒரு புஸ்தகத்தில்(டைரியில்)குறிப் பிட்டுக் கொள்ளவேண்டும். பொதுவாய் சிறிய மாணவர்கள் தாங்கள் கவனித்தவைகளைக்குறி ப்பிடும் போது ஒருவர்க்கொருவர் கொஞ்சம் பேத மிருப்பதுண்டு. விஷயபேத மேற்பட்டா ல் மாத்ரம் உபாத்யாயர் அவைகளைத் திருத்த வேண்டுமேயொழிய வாக்யங்களின் அமைப்பு எல்லா மாணவர்களினுடைய டைரியிலும் ஒன் றாயிருக்கவேண்டுமென்று எண்ணக்கூடாது. மாணவர்கள் தாங்கள் குறிக்குக் கொள்ளும் செடிகளின் வேர், முளை, இலை, பூ, காய் முத லியவைகளின் படங்களையும் டைரியில் எழு தும்படி செய்யவேண்டும். முதலில் அவர்களில் எழுதும் படங்கள் நன்றாயிரா. பின்னால் போ கப்போகத்தான் அவர்கள் நன்றாயெழுதக் கற் றுக்கொள்வார்கள். "சித்திரமும் கைப்பழக் கம்" என்பதை இங்கு உண்மையாகக்காண லாம். இந்தப் படங்களை எப்படி எழுதுவது என்பதைப்பற்றி சித்ரபாடத்தில் (ட்ராயிங்கில்) கவனித்துக்கொள்ளலாம்.

சிலபாடசாலைகளில் டைரி எழுதுவதென் றால் உபாத்யாயராவது,ஒருகெட்டிக்கார மாண வராவது ஒரு விஷயத்தைச் சொல்வதும், அல்

லது கருப்புப் பலகையில் எழுதுவதும், மற்ற மாணவர்கள் அதை அப்படியே தங்கள் டைரியில் குறித்துக் கொள்வதுமாக இருக்கிறதென்று தெரியவருகிறது. அப்படிச் செய்வது பாடத்தின் நோக்கத்தைக் கெடுத்துவிடுவதாகும்.

3. பாஷைப் பாடத்தைப் போலவே பூகோளப்பாடத்திலும் வரும் செடிகளைப் பயிரிட்டு அவைகளைக் கொண்டு கற்பிப்பது நல்லது. இந்தியாபடம், ராஜதானிபடம், ஜில்லாபடம், தாலூக்காபடம் முதலியவைகளில் எது தேவையோ அதைத் தோட்டத்தின் ஒரு மூலையில் கூழாங்கற்களால் போட்டு இன்னின்ன இடங்களில் இன்னின்ன விளைபொருள்கள் விளைகின்றன என்பதைக் காட்ட அவ்வவ்விடங்களில் அந்தந்தப் பயிர்களைப் பயிரிடலாம். உதாரணமாக, ராஜதானிப்படத்தில் திருநெல்வேலி ஜில்லாவுள்ள பக்கத்தில்பருத்திச்செடியையும், தஞ்சாவூர் பக்கத்தில் நெல்லும், திண்டுக்கல் பக்கத்தில் புகையிலைச் செடியையும் பயிரிட்டுக் காட்டலாம். ஆனால் படம் போட்டுள்ள இடத்தில் தென்னை முதலிய மரங்களை வளர்க்க முயல்வது முடியாத கார்யமென்பது நாம் சொல்ல வேண்டியது அனாவச்யம்.

4. மேலே சொன்ன பாடங்களில் கற்பித்த விஷயங்களைப் பற்றி மாணவர்களை வ்யாஸம் எழுதும்படி சொல்லலாம். இதனால் மாணவர்கள் கற்பித்த விஷயங்களை ஸரிவர க்ரஹித்திருக்கிறார்களா என்பதை ஸுலபமாய் அறியலாம். இப்படி வ்யாஸம் எழுதப் பழகுவதால் பிள்ளைகள் தாங்கள் அறிந்தவைகளை வ்யாஸமூலமாய் வெளியிடவும் பயிலுகிறார்கள். இதிலும் மாணவர்கள் பிறருடைய உதவியின்றித்தாங்களே எழுதப்பழகவேண்டுமேயன்றி ஒருவர் சொல்ல அதை யப்படியே எழுதி நெட்டுருச் செய்வது ஸரியான வழியல்ல.

5. எந்த பாடசாலைத் தோட்டத்திலும் அழகிய புஷ்பச்செடிகள் வைத்து வளர்க்க வேண்டும். புஷ்பங்கள் இல்லாத தோட்டம் கண்ணுக்கும் மனஸுக்கும் இன்பம் தராது.

6. இவைகளேயன்றி வைத்யத்தில் உதவும் ஸாதாரண பச்சிலைகளில் சிலவும், கூடுமானால் வைத்துப் பயிரிடலாம்.

7. பூஜைக் கெடுத்த செடிகள், புஷ்பங்கள் ஆகிய இவைகளும் தோட்டத்தில் வைத்துப் பயிரிடலாம். இவைகளைப்பற்றிய விஷயங்களையும் கூடுமானால் பாடங்களில் சேர்த்துக் கொள்ளலாம்.

இடத்தையடைப்பவும், பூச்சி பூட்டுகள் வலிப்பதற்கேது வாயிருப்பவும், தோட்டத்தின் லக்ஷணத்தைக் கெடுப்பதாயிருப்பவுமான செடி கொடிகளை, பாடசாலைத் தோட்டத்தில் பயிரிடக்கூடாது. உதாரணம், பரங்கி, பூசணி, சுரை, அவரை முதலியவைகள். ஆனால் இடத்தை யடைக்காமல், லக்ஷணமான புஷ்பங்கள் உள்ள கொடிகளைப் பயிரிட்டு வேலிகளிலும், பந்தல்களிலும் படரவிடலாம். இவைகள் அடர்த்தியாய் வளர்ந்து விட்டாலும் இவைகளின் சில கொடிகளை நறுக்கி விட்டுவிடலாம்.

### தோட்டம் வைத்தல்.

தோட்டங்கள் இவ்வளவு பெரியவையாக இருக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனையும் ஏற்படுத்த முடியாது. இது, பள்ளிக்கூடத்தைச்சுற்றி காம்பவுண்டுக்குள் இருக்கும் நிலத்தில் எவ்வளவு காலியான இடம் தோட்டம் வைக்கக்கிடைக்கும் என்பதையும், தனியான இடத்தில் தோட்டம் அமைப்பதாயிருந்தால் எவ்வளவு விஸ்தீரணமுள்ள நிலம் கிடைக்கும் என்பதையும் பொறுத்ததா யிருக்கிறது. இன்ன விதமாகத் தோட்டம் அமைந்திருக்க வேண்டும் என்பதும் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கும் பாடங்களைப் பொறுத்ததா

யிருக்கிறது. அதிக விஸ்தீரணமுள்ள தோட்டத்தில் எல்லாப் பாடத்துக்கும் உபயோகப் படக்கூடிய செடி கொடிகளேயும் பயிரிட்டு, படங்களேப் போடுவதோடு, அவைகளே அலங்காரமாகவும் நெருக்கமில்லாமலும்ஒழுங்குடன் அமைக்கலாம். விஸ்தீரணக் குறைவாயிருக்கும் தோட்டத்தில் சில அம்சங்களே விட்டு விடவேண்டியதாயிருக்கும். என்றாலும்,தோட்டத்திலுள்ள செடி கொடிகளே அழகு பெற அமைத்து பார்ப்போர் மனஸுக்கு இன்பம் தரும்படி ஒழுங்காக வைத்திருக்க்வேண்டு மென்பதை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். புஷ்பச் செடிகளுச்கும் மற்ற செடிகளுக்கும் தனித்தனியாக இடம் ஏற்படுத்தி பாத்தி பாத்தியாகக்கட்டி அவைகளில் செடிகளேப் பயிரிடவேண்டும். பிள்ளேகள் பயிரிடுவதற்காக சில பாத்திகளும், உபாத்யாயர் செய்து காட்டுவதற்காக சில பாத்திகளும் பிரித்து வைக்கவேண்டும். பாத்திகளின் இடையில் நடந்து போவதற்காகப் போதுமான இடம் பாதையாக விடவேண்டும். கொடிகளே வேலிப் பக்கமாக வளரவிட வேண்டும்.

காலி நிலம் இல்லாத பள்ளிக்கூடங்களில், பூந்தொட்டிகளேயும், கிரோஸின் தகரங்களேயும்உபயோகப்படுத்தலாம். அவைகளில்தகுந்த மண்ணேப் போட்டு வேண்டிய செடி கொடிகளேப் பயிரிட்டு வெயிலுள்ளபக்கமாக வைக்கவேண்டும். புஷ்பச் செடிகளுக்கு ரொம்ப வெயில் வேண்டும் மற்ற செடிகளுக்கு வெயில் அதிகம் வேண்டியதில்லே.

எம். எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யர்.

---

## SALE OF FARM PRODUCE.

மாஸுலே விற்பனே செய்தல்.

நம்முடைய தேசத்து விவஸாயிகள் விவஸாயமுறைகளே சீர்திருத்தி அதிக மாஸுல் எடுக்கவேண்டியதொரு பக்கமிருக்க, விளேந்த மாஸுலே நல்ல விலேக்கு விற்று லாபமடைய முயற்சியும் செய்யவேண்டும். தற்போது, மிராசுதார்கள் அனேகமாய் அக்கம் பக்கத்து க்ராமங்களிலுள்ள வ்யாபாரிகளுக்கே தங்கள் மாஸுலே விற்கிருர்கள். இது அவ்வளவு ச்லாக்யமான முறையாகத் தோன்றவில்லே. உதாரணமாக, நமது அனுபவத்தில் ஏற்பட்ட ஒரு விஷயத்தை இங்கே சொல்வோம். கும்பகோணத்துக்கு அடுத்த ஒரு க்ராமத்தில் ஒரு மிராசுதாரின் மனேவி 60 வயஸுக்குமேலுள்ள பெரியவளாய் சீக்காய்விழுந்தாள். கொஞ்ச நாள் கிடந்த பிறகு, ஜீவதசைக்கு ஹேதுவில்லே யென்று தெரிந்த பொழுது, அவளுடைய புருஷன் அவளுடைய உத்தரக்ரியைகளுக்கு வேண்டிய செலவுகளுக்கு நெல்லே விற்க எண்ணி அவர் வழக்கமாய் விற்கும் அண்டை க்ராமத்து வ்யாபாரிக்குச்சொல்லி அனுப்பினுர். இந்த வ்யாபாரி மேற்படி மிராசுதாரின் மனேவி சாகக்கிடப்பதை அறிந்துகொண்டு, நெல்லுக்கு க்ராக்கி இல்லேயென்பதாகவும்,விற்கிற விலேக்கு கலத்துக்கு ஒரு அணு தணித்துப் போட்டால் வாங்கிக் கொள்வதாகவும் சொன்ஞன். இதற்கு அந்த மிராசுதார் ஸம்மதியாமல் ஸங்கடப்பட்டுக்கொண்டிருந்து, பிறகு 10-நாளானதும் மனேவி இறக்கவே, கையில் செலவுக்குப்பணமில்லாமல் அந்த வ்யாபாரி கேட்ட விலேக்குகிட்டத்தட்டவே நெல்லே விற்கவேண்டியதாயிற்று. இப்படி அக்கம் பக்கத்து வ்யாபாரியையே நம்பியிருந்து தணிந்த விலேக்கு மாஸுலே விற்கும் மிராஸ்தார்கள் அனேகர் என்று எண்ணுகிறேம். விவஸாயிகள் மாஸுலேவிற்பனே செய்வதில் அனேக விஷயங்களேக் கவனித்து நடந்து கொள்ளவேண்டும். இவைகளில் சில அம்சங்களே இங்கிலாந்தில் ப்ரசுரமாகும் ஒரு விவஸா[illegible]ப்பத்ரிகையில் ஒருவர் எடுத்துக்காண்பித்திருக்கிருர்.

விவஸாயம் செய்து நல்ல மாஸூல் எடுப்பது ஒருவித ஸாமர்த்யம், விளைந்த மாஸூலை விற்பனை செய்வது இன்னொருவித ஸாமர்த்யம். இரண்டுவித ஸாமர்த்யமும் உள்ளவர்கள் சிலர்தான் இருக்கலாம். ஆனாலும் விற்பனை விஷயமாக சில நுட்பங்களை விவஸாயிகள் அறிந்து கொள்வார்களானால் அதனாலுண்டாகும் நஷ்டங்களை ஒருவாறு நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

முதலாவது, ஸ்வல்ப மாஸூலுள்ளவன் செய்யும் பெரும்பிழை தன் கைவசத்துள்ளதெல்லாவற்றையும் ஒரே தடவையில் விற்றுவிடுதலாம். அவன் தன் ஸ்வல்ப சரக்கைக் கொஞ்சம் கொஞ்சமாக நல்ல ஆதாயம் வரும்படியாச விற்கவேண்டும். இதிலும் வ்யாபாரிக்கு விற்பதில் இவனுக்கு ஆதாயமில்லை. ஏனெனில் வ்யாபாரி விலை வாசியை கவனித்துத் தன் லாபத்தைக் கழித்துக் கொண்டே விலை பேசுவான். ஆகையால், சரக்கை வாங்கி தாமே உபயோகிப்பவரைக் கண்டு விற்கக்கூடுமானால் ஆதாயமதிகம். உதாரணமாக, ஸ்வல்பமாய் நெல்லிருக்கிறவர்கள் சாப்பாட்டுக்கு வாங்குகிறவர்களைப் பார்த்து விற்கவேண்டும். இப்படிச் செய்தால் விற்கிறவனுக்கும் விலை கொஞ்சம் கூடவருவதோடு வாங்குகிறவருக்கும் வ்யாபாரியிடத்திலிருந்து வாங்குவதை விட மலிவாயும் நல்ல சரக்காயும் கிடைக்கும். இந்த விஷயத்தில் ஸ்வல்பமாஸூல்காரனின் நிலைமை பெரிய மாஸூல் காரனதைவிட மேலானது. அதிக மாஸூலையுடையவன் வ்யாபாரிகளுக்குத்தான் விற்றுத்தீரவேண்டும். அவனுடைய சரக்குகளைப் பூராவும் வாங்கித் தாமே உபயோகிப்பவர்கள் அரிது.

இரண்டாவது, பெரும் மாஸூலையுடையவர்கள் மாஸூல் கைக்கு வந்த பின்னே வ்யாபாரிகளைத்தேட ஆரம்பிக்கிறார்கள். இது பிசகு. ஏன் முன்னாலேயே முயன்று ஆஸாமிகளுடன் பேசித்தயாராயிருக்கக்கூடாது? இந்த அச்ரத்தையால் எல்லாரும் ஒரே காலத்தில் மாஸூலை விற்கமுயல்வதால் க்ராக்கியில்லாமல் விலை குறைந்து போகிறது. உதாரணமாக கிஸ்து காலங்களில் மாஸூலின் விலை தணிந்திருப்பதைப் பார்த்து கொள்ளலாம்.

விவஸாயியாயில்லாமல், மில்வைத்து சரக்குகள் செய்யும் முதலாளி ஒருவனை எடுத்துக் கொள்வோம். அவன் வ்யாபாரிகளை நிச்சயம் செய்து கொள்ளாமல் சரக்குகளை மேலும் மேலும் செய்துஅடுக்கிக் கொண்டிருப்பானாகில், அவனைப் பித்தனென்போமல்லவா? அம்மாதிரிதானே விவஸாயியையும் தன் மாஸூலை வாங்க ஆஸாமிகளை முன்னாடியே பேசிவைக்காமலிருந்தால் நாம் கூறவேண்டும்? என்கிறார் ஒரு நிருபர். ஆனால் சொல்லலாம், ஒப்பந்தம் செய்து கொண்டபடி கொடுக்கமுடியாமல் மாஸூல் குறைந்து போனாலும் காணவிட்டாலும் என்ன செய்கிறதென்று கேட்கலாம். இது ஒரு ப்ரமாதமான விஷயமல்ல மில் ஸொந்தக்காரர்கள், கூலிகள் வேலை நிறுத்தத்தாலும், யந்த்ரப் பிசகுகளாலும் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட சரக்குகளை 'டெலிவரி' செய்ய சக்தியற்றவராயிருப்பது ஸகஜம். ஆயினும், இதை உத்தேசித்து அவர்கள் வ்யாபாரிகளைத்தேடி பேரம்பேசாமல், சரக்குத் தயாராவதற்காகச் சும்மா விருப்பதில்லை. இம்மாதிரியே, மாஸூலில் நிச்சயமாயிருக்க முடியாத விவஸாயியும் வ்யாபாரிகளைப் பேசிவைத்துக்கொள்ளவேண்டும். மாஸூல் கைக்கு வந்ததும் உடனே விற்றுவிடலாமல்லவா? போதாக் குறைக்குப் பக்கத்துள்ளவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டால் போகிறது.

மூன்றாவது, விற்கவேண்டிய மாஸூல் எலுமிச்சம்பழம் என்று வைத்துக்கொள்வோம். அது முதல்தரமானதாயிருக்கலாம். இருந்தாலும், அதை ஜாக்ரதையாயும் பார்ப்பவர்

களுக்குப் பிடிக்கும்படியாயும் ஒரே பருமனுள்ளதாயும் பிரித்து வைத்திராவிட்டால் அதனுடைய மதிப்புக் குறைந்துபோகும். பலாப்பழத்துக்கு ஈப்பிடித்து விடவேண்டுமோ? நல்ல சரக்கு எப்படியிருந்தாலென்ன என்று சொல்வதுண்டு. இது தவறாகும். விலை உயர்ந்தவைரக்கல்லிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். இதை நல்ல கட்டிடத்தில் அமைத்து வியாபாரத்துக்கு வெளியிலனுப்புவதற்கும், ஸாதாரணமான கட்டிடங்கட்டி அனுப்புவதற்கும் வித்யாஸமிருக்கிறதல்லவா? அப்படித்தான் எந்த விலைப் பொருளுக்கும். கெட்டிக்காரன் தன்சரக்கை ரம்யமாயும் அழகாயும் 'பாக்' செய்வதிலேயே வ்யாபாரிகளுடையவும் வாங்குவோருடையவும் ஆசையையுண்டு பண்ணி நல்ல விலைக்கு விற்றுவிடுகிறான்.

நாலாவது, சிறு விவஸாயிகள் கறிகாய்கள் போன்ற பண்டங்களை விற்பதில் முதலில் மலிவாக விற்பதுபோல் காண்பித்து பின்னால் விலையை உயர்த்துவது ஸரியல்ல. முன்னால் மலிவாக வாங்கி ருசிகண்டவர்கள் எப்பொழுதும் அந்த மாதிரியே மலிவாகக் கொடுக்கச் சொல்வார்கள். ஆரம்பம் முதல் ந்யாயமான விலைக்கேவிற்கவேண்டும். இப்படிச்செய்வதால் ஒரு முறைபேரம் செய்பவர்கள் ஸ்திரமான வாடிக்கைகாரர்களாய் விடுவார்கள். தவிர, முதலில் கொஞ்சமாய் வாங்குகிறவர்களானாலும் ஒரு குறித்த அளவுக்குக் குறைந்து விற்பதில்லை யென்று சொல்லாமல் எவ்வளவு கேட்கிறார்களோ அவ்வளவு கொடுத்து வாடிக்கையை ஏற்படுத்திக்கொள்வது நலம்.

---

## HIGH PRICES ENQUIRY.

### விலைவாசி ஏற்ற விசாரணை.

விலைவாசி ஏற்றத்தைப்பற்றி ஸமீபத்தில் விசாரணை செய்துவந்த கமிட்டியார் தங்களுடைய ரிபோர்ட்டை கவர்ன்மெண்டாருக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. அந்தக்கமிட்டியில் மெம்பராயிருந்த மிஸ்டர் கே. எல். டட்டாவை ஒருபத்ரிகை நிருபர் போய்ப்பார்த்து விலைவாசி ஏற்றத்தைப் பற்றி அவருடைய அபிப்ராயம் என்னவென்று கேட்டார். அதற்கு அவர் பின் வருமாறு பதில் சொன்னார்.

"உலகம் முழுமையும் விலைவாசி உயர்ந்திருக்கிறது. ஆனால் இந்தியாவிலோ, ஜப்பானைத் தவிர மற்றெல்லா தேசத்தையும் விட விலைவாசி ரொம்ப அதிகமாக உயர்ந்திருக்கிறது. ஜப்பானைப்பற்றிய கணக்கு விவரங்கள் திட்டமாய் எனக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தெரிந்தவரையில், இந்தியாவில் விலைவாசி உயர்ந்திருப்பதைவிட ஜப்பானில் அதிகமாக உயர்ந்திருக்கிறதென்று சொல்வேன். இந்தியாவின் மற்ற பாகங்களைவிட சென்னை ராஜதானியில் விலைவாசி ஏற்றம் குறைவாகவே இருக்கிறது" என்றார்.

"விலைவாசி உயர்ந்திருப்பதில், இந்தியர்களில் பெரும்பாலார்க்கு, பலவிதங்களில் ஸௌகர்யம் ஏற்பட்டிருக்கிறது. ரயத்துகள், விவஸாய வேலையாட்கள், இன்னம் விவஸாயத்தில் ஸம்பந்தமுள்ளவர்கள் ஆகிய இவர்களுக்கு, விவஸாயத்தினால் அதிக வரும்படி கிடைத்துவருகிறது. முக்யமாய் விவஸாயம் பரவிவரும் இடங்களிலும், கைத்தொழில் கம்பெனிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடங்களிலும் வேலையாட்கள் அகப்படுவது ச்ரமமாயிருப்பதால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி ரொம்பவும் அதிகமாகிவருகிறது. ஆனால் கூலியாட்கள் குறைவாயிருப்பது விலைவாசி ஏற்றத்துக்கு ஒரு முக்யகாரணமாகாது. கூலிவேலை செய்கிறவர்கள் அயல்நாடுகளுக்குப் போவதால் விலைவாசி ஏற்றம் ரொம்பவும் மாறுபடவில்லை" என்கிறார். இதற்குக்காரணம் அவர் சொல்லுவது என்னவென்றால்;

"கூலியாட்கள் குறைந்து போயிருப்பது ரொம்ப அதிகமாயிருக்கிறதா அல்லது நாம் கவனிக்கவேண்டிய அளவுக்கு முக்யமானதா என்பதை யறிவதற்கு, கூலிவேலைக்காரர்கள் குறைவாயிருப்பதால் நிலங்கள் ஸாகுபடி யாகாமல் தரிசாய் இருக்கின்றனவா என்பதை யறிய வேண்டும்; இதுவரையில், இந்தக் காரணத்தைக்கொண்டு ஒரு நிலமும் ஸாகுபடியாகாமல் தரிசாய்க்கிடப்பதாகத் தெரியவில்லை. அப்படியில்லாமல் விவஸாயம் ரொம்ப அதிகரித்துவருகிறது. இதனால் வேலையாட்கள் குறைந்துவருவது விலைவாசி ஏற்றத்துக்கு ஒரு முக்ய காரணம் என்பது உண்மையானதல்ல."

தற்காலம் நமது தேசத்தில் பருத்தி ஸாகுபடியதிகமாகி, உணவுப்பொருள்கள் பயிரிடப்படும் நிலம் குறைந்துபோய், இதனால் விலைவாசி யதிகமாகிவருகிற தென்கிறார்கள். ஆனால் மிஸ்டர் டட்டா இதை ஒப்புக்கொள்ளவில்லை.

"நமது தேசத்தில் பயிரடப்படும் நிலவிஸ்தீரணத்தை உத்தேசிக்கையில், பருத்தி ஸாகுபடியாகும் நிலங்களின் விஸ்தீரணம் ரொம்ப குறைச்சல் என்றே சொல்லவேண்டும். பருத்தி ஸாகுபடி யதிகமாயிருப்பதாலாவது, அல்லது விளைபொருள்கள் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுவதினாலாவது, விலைவாசி அதிகமாகியிருக்கிறது என்று சொல்வதற்கில்லை. விலைவாசி ஏற்றத்தின் உண்மையான காரணம் என்னவென்றால், முன்னால் விலைகள் அந்தந்த ப்ரதேசத்தின் விலையாக இருந்தன. இப்பொழுதோ விலைகள் உலகத்தில் எல்லா நாடுகளையும் அனுஸரித்த விலைகளாக இருக்கின்றன. ஒவ்வொரு தேசத்துக்கும் போக்குவரத்துக்கு உரிய ஸாதனங்களாகிய புகைக்கப்பல்களும், ரெயில்வேக்களும் ரொம்பப் பரவியிருக்கின்றன. ஒரு தேசத்திலுள்ள சரக்குகள் மற்றொரு தேசத்தில் க்ராக்கியாக விற்றால், க்ராக்கியாக விற்கும் தேசத்துக்கு ஸுலபமாய் கொண்டுபோய் லாபகரமாக விற்று விடலாம். இப்படி ஒரு தேசத்துப் பொருள்கள் மற்ற தேசங்களுக்கு ஸுலபமாய்ப்போவதனால் விலைகள் எங்கும் ஒரேவிலையாக இருக்கின்றன. மின்ஸாரத் தந்தி ஏற்பட்ட பிறகு சரக்குகள் விற்பவர்களும் வாங்குகிறவர்களும் உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலும் சரக்குகள் என்ன விலைக்கு விற்கின்றன என்பதை நிமிஷத்தில் தெரிந்துகொண்டு எந்தத் தேசத்தில் லாபகரமாக விற்கலாமோ அங்கே கொண்டுபோய் விற்று லாபமடைகிறார்கள். சரக்கு உற்பத்தியாகும் இடத்துக்கும் விற்கும் இடத்துக்கும் எவ்வளவுதூரமிருந்தாலும் பாதகமில்லை. விஷயங்கள் இப்படியிருப்பதனால்தான், விலைவாசி அதிகரித்திருக்கிறதே ஒழிய அந்தந்த ப்ரதேசத்தில் ஏற்படும், கூலிவேலையாட்கள் போதாமை, அந்த ப்ரதேசத்தில் சரக்குக்கு க்ராக்கி ஏற்படுவது முதலிய காரணங்களால் விலைவாசி யதிகரிக்கவில்லை-" என்றார்.

இன்னம், பெரிய பட்டணங்களிலும், நகரங்களிலும் வீட்டுவாடகை உயர்ந்திருப்பதைப்பற்றியும், ஜனங்கள் தற்காலம் அதிகமாகச் செலவு செய்து ஜீவித்து வருவதைப்பற்றியும், இவைகள் விலைவாசி ஏற்றத்துக்குக் காரணமாயிருப்பதைப் பற்றியும் மிஸ்டர் டட்டா பேசினார்.

# STORY AND BIOGRAPHY.

## கதையும் ஜீவ்ய சரித்ரமும்.

### THE MYSTERY OF THE PEARL NECKLACE

BY

M. S. KRISHNASWAMI AIYAR.

முத்துமாலையின் மாயம்.

(296-ம் பக்கம் தொடர்ச்சி).

"வேறு ந்யாயமிருந்தால் சொல் கேட்போம்."

"நான் வேறு ந்யாயம் சொன்னாலும் அது கேட்கக்கூடியதாயில்லை. ஏனென்றால் அதற்கு ருசு கிடையாது. முதலாவது, எனது கைக்குட்டை ஒரு வாரமாகக் காணமல் போயிருக்கிறது. ஆனால், அதைப்பற்றி நான் ஒருவரிடமும் ப்ரஸ்தாபம் செய்யவில்லை. நாடக விஷயமோ என்றால், என்னை திடீரென்று இந்த விஷயமாய்க் கேட்கவே நான் பொய் சொல்ல நேர்ந்தது. உங்களிடம் மறைப்பானேன்? நான் அன்றைய தினம் இரவு அந்தப் பெண் வீட்டுக்குப் போயிருந்தேன். நான் அடிக்கடி அவள் வீட்டுக்குப் போவதுண்டு. இன்னம் கல்யாணம் நடக்க சில வாரங்கள் செல்லும். நாங்கள் வெகு நாளாகவே அன்யோன்யமாய் இருக்கிறோம். விடியற்காலையில் அவள் வீட்டை விட்டு ஒருவரும் அறியாமல் வெளியே வந்தேன். அவளுக்கு நகை போடுவதாகச் சொன்னது வாஸ்தவமே. அவளுக்குக் கல்லிழைத்த மோதிரமொன்று முதனாள்தான் போட்டேன். அது 580 ரூபாய்க்கு நான் வாங்கினது ——— தெரு கந்தன் செட்டியிடம் தான் பணம் கடன் வாங்கினேன். வேண்டுமானால் கேட்டுக் கொள்ளுங்கள்

"நீ சொல்லுவதெல்லாம் ஸரிதான்; என்றாலும் வேறு ஏதாவது ஆதார மில்லாவிட்டால் நான் என்ன செய்ய முடியும்?"

"என்னவோ உங்களால் ஆகாதது ஒன்றுமில்லை. நீங்கள் மனம் வைத்தால் நான் தப்புவேன். இல்லாவிட்டால் நான் அந்யாயமாய் தண்டனை யடையவேண்டியதுதான்" என்று சொல்லி அவரைப் பலவாறு வேண்டிக்கொண்டான். அவரும் தம்மாலானதைச் செய்வதாக ஒப்புக்கொண்டார்.

சிறைச்சாலையை விட்டுப் புறப்பட்டு ஸுந்தரமய்யர், கோவிந்தன் காதலித்த பெண் வஸித்து வந்த வீட்டுக்குச்சென்று அவளை விசாரித்தார். கோவிந்தன் சொன்னவற்றையே அவளும் சொன்னாள். கோவிந்தனை எப்படியாவது குற்றவாளி யல்லவென்று ரூபித்துவிட்டால் தகுந்த ஸன்மானம் செய்வதாக அந்தப் பெண்ணின் தகப்பனார் வாக்களித்தார். அந்தப் பெண் தன் காதலனை விடுவிக்காவிட்டால் தான் உயிர்வாழ முடியாதென்றும், கோவிந்தன் தன்னுடைய ரகஸ்யமெல்லாம் இவளிடம் சொல்பவனாதலால் அவன் திருடியிருக்கமாட்டான் என்று நிச்சயமாகச் சொல்லக்கூடுமென்றும் சொன்னாள்.

### IV.

ஸுமார் 7-வயஸுள்ள ஒரு பையன் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தான். அந்தப் பக்கம் போய்க்கொண்டிருந்த ஒருவர் அந்தப் பையனைப்பார்த்து "அடே, தம்பி, இங்கேவா," என்று கூப்பிட்டார்.

"ஏன், மாமா, கூப்பிடுகிறீர்கள்?"

"இங்கே வா, சங்கரய்யர் மாமா உனக்குத் தெரியாது. அவர் கோவிலிலே இருக்கிறார். சுண்டல், வடை, பாயஸம் எல்லாம் கொடுக்கிறார். நீ வரவில்லையா? உன்னைக் கூட்டிக் கொண்டு வரச்சொன்னார். போகலாம் வா,"

"இதோ, வருகிறேன்" என்று சொல்லி, பையன் விளையாட்டை விட்டு விட்டு அவருடன் சென்றான்.

அவர்கள் இருவரும் சற்று தூரத்தில் உள்ள கோவிலுக்குச் சென்றார்கள். கோவிலில் ஒரு தனிமையான இடத்துக்குப் போய் இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள்.

"சங்கரய்யர் மாமா, எங்கே?"

"வெளியில் போயிருக்கிறார். சற்று நேரத்துக்கெல்லாம் வந்துவிடுவார். நீ அவாத்துக் கல்யாணம், அதுதான், ஆண்டு நிறைவுக் போயிருந்தாயோ?"

"போனேனே!"

"நீயாகப்போனாயோ, உன் அம்மா கூட்டிக் கொண்டு போனாளோ?"

"அம்மாதான் கூட்டிக்கொண்டு போனாள். நீங்கள் வந்திருந்தேளோ, மாமா, மத்யானம் பக்ஷணம் எல்லாம் போட்டார்களே; எனக்கு சங்கரமாமா ரொம்ப பக்ஷணம் போட்டார். ராத்ரிதான் அம்மா சாப்பிடப் போகப் படாதென்று சொல்லி விட்டாள்."

"ஏன் போகப்படா தென்று சொன்னாள்."

"எனக்குக் காய்ச்சலென்று சொன்னாள்."

"யார் சொன்னாள்?"

"எங்கம்மாள் தான் சொன்னாள்."

"உன்னம்மாள்தான் போனாளோ?"

"அம்மா மாத்ரந்தான் போனாள்."

"நீ அகத்திலே ஒண்டியா யிருந்திருப்பாயே! பயமாயில்லை?"

"முதலிலே பயமாயில்லை. அப்புறம் பக்கத்தகத்துப்பூனை கத்திற்று. ரொம்ப பயமா யிருந்தது. அழுதேன், வெளிக்கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டு போய்விட்டாள். அப்புறம் ரொம்பநாழி கழித்து வந்தாள். அந்த சூத்ர மாமாவும் வந்தார். எனக்குக் கல்கண்டும், த்ராக்ஷைப் பழமும் கொண்டுவந்து கொடுத்தார். அப்புறம் பயமெல்லாம் போய்விட்டது."

"சூத்ரமாமா யார்?"

"அவர்தான் நித்யம் வருவாரே."

"அவர் எங்கே யிருக்கிறார் தெரியுமா?"

"உங்களுக்கு——தெரு தெரியுமா"

"தெரியும்."

"அங்கே ஒரு பெரியவீட்டு வாசலிலே பூச்செடியெல்லாம் வைத்து வாசல்தட்டிமேலே பூச்செடி படரவிட்டிருக்கிறதே, அதற்கடுத்த தற்கு அடுத்த வீடு. 73-ம் நெம்பர் வீடு."

பையன் பிறகு கோயிலைப்பற்றி சில கேள்விகள் கேட்டான். அவர் அவைகளுக்குப் பதில் சொன்னார்.

"மாமா, சங்கரய்யர் மாமா ஏன் இன்னம் வரவில்லை?"

"போய் விசாரிப்போம், வா."

அவர் கோவிலில் இரண்டொருவரோடு இரண்டொருவார்த்தை பேசிவிட்டுப் பையனிடம், "பையா, சங்கரய்யர் மாமா வீட்டுக்குப்போய் விட்டாராம். நாம் காபி ஹோட்டலுக்குப்போய் பக்ஷணம் தின்போம் வா". என்று சொல்லி யவனை ஒரு காபிஹோட்டலுக்குக் கூட்டிக்கொண்டுபோய் வேண்டியவற்றை வாங்கிக்கொடுத்துத் தின்னச்சொல்லி மறுபடியும்,

"பையா, பக்ஷணம் வாங்கித் தின்னதாக உன் அம்மாவினிடம் சொல்லாதே." என்று சொன்னார்.

"ஏன், மாமா, சொல்லக்கூடாது?"

"உனக்குக் காய்ச்சலல்லவா? ஏன் பக்ஷணம் தின்றாய் என்று உன் அம்மா கோபித்துக் கொள்வாள். நான் வாங்கிக் கொடுத்தேன் என்று கூடச்சொல்லாதே. எங்கே போனாய் என்றால், சும்மா கோவிலுக்குப்போனேன் என்று சொல்" என்று எச்சரிக்கை செய்து அவனை அனுப்பினார்.

V.

ராத்ரி ஸுமார் 12-மணியிருக்கும் ஓர்விதவை தெருவில் நடந்துபோய்கொண்டிருந்தாள். அவளுக்குக் கொஞ்ச தூரத்துக்குப் பின்னால் ஒருகிழவன் தளர்ந்த நடையுடன் நடந்து கொண்டிருந்தான். இருவரும் இரண்டொரு தெருக்களைக்கடந்து சென்றார்கள். விதவை தனக்குப்பின்னால் வருபவரை கவனிக்கவில்லை ஒரு சிறிய ஓட்டுவில்லை வீடு வந்ததும் விதவை நின்று கதவண்டைபோய்க் கதவைத்தட்டினாள். அப்பொழுது ரொம்ப இருட்டாயிருந்தது கிழவனும் அவளுடன் சென்று அவளறியாதபடி ஒருபக்கம் நின்றான் இரண்டொரு நிமிஷங்களுக்கெல்லாம் கதவு திறக்கப்பட்டது. கதவைத்திறந்தவர் கையில் வெளிச்சம் கொண்டுவரவில்லை.

"யார், சின்னம்மாளா?"

"ஆமாம், பழனியாண்டி;"

"ஏன் இந்நேரம்?"

"பையன் தூங்க நேரமாயிற்று?"

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டே உள்ளே சென்றார்கள். கிழவர் மெதுவாய் அவர்கள் அறியாமல் உள்ளே சென்று ஓரமாய் நின்று கொண்டார்.

"வாயிற் கதவைத்தாளிடு" என்றான் பழனியாண்டி.

சின்னம்மாளும் கதவைத் தாளிட்டாள். அவள் கிழவர் இருப்பதைக் கவனிக்கவில்லை.

உள் பக்கத்தில் ஒரு சிறிய விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவர்கள் பேசத் தொடங்கினார்கள்.

"அவைகளை என்னசெய்வது? நோட்டுகளை மாற்றுவது கஷ்டம். நல்லவேளையாய் அவர் நோட்டுகளின் நம்பரைக் குறித்துக் கொள்ளவில்லை. ஆனல் இங்கே அவைகளை மாற்றினால் அகப்பட்டு விடுவோம்."

"முத்துமாலையை என்னசெய்வது? இவ்வளவு கலவரம் ஏற்பட்ட பிறகு இந்த ஊரில் மாற்றினால் அகப்பட்டு விடவேண்டியதுதான். மேலும் கோவிந்தன் தகப்பனர் இந்தத் திருட்டைக்கண்டு பிடிப்பதற்காக ஒருதுப்பறியும் உத்யோகஸ்தனை அமர்த்தியிருக்கிறார். அவர் ரொம்ப ஸாமர்த்யசாலியாம்."

"யாராயிருந்தா லென்ன? நான் எங்கே அவைகளை வைத்திருக்கிறேன் என்பது அவர்களுக்குத் தெரியாது. நாளைக்கு அவன் வீட்டில் போய் அந்தப் பெட்டியை எடுத்து வந்து விடுகிறேன். ஸாயந்திரம் ரங்கூனுக்குக் கப்பலேறிப்போய் விடுவோம். அங்கே போய் விட்டால் நம்மை இன்னாரென்று கூட ஒருவரும் அறியார். நாம் அங்கே ஸுகமாய் இருக்கலாம். ஒவ்வொரு முத்தாக விற்றாலும் போயிற்று."

"அவனுக்கு ஏதாவது கொடுக்க வேண்டாமா?"

"யாருக்கு?"

"அவன்தான் திறவு கோல்செய்து கொடுக்க வில்லையா? அதற்கும், பெட்டியை காப்பாற்றிவைத்திருக்கிறானே! அதற்கும் கொடுக்க வேண்டாமா?"

"ஆம், ஏதாவது கொடுக்க வேண்டும்."

"நாளைக்கு எப்போது பெட்டியைக் கொண்டு வருகிறாய்?"

"காலமே 7-8-மணிக்குக் கொண்டு வந்து விடுகிறேன். சீக்ரம் கொண்டு வந்து விடலாம். ———— தெருவில் 5-ம் நம்பர், கிட்டத்தானே இருக்கிறது. ஸாயங்காலம் இரண்டு பேருமாகப்போய் விடுவோம்."

ஸம்பாஷணை இன்னம் அரைமணி நேரம் வேறு விஷயங்களில் சென்றது.

இரண்டு மணி ஸுமாருக்கு மூவரும் (கிழவர் ஒருவருக்கும் தெரியாமல்,) வெளியில் வந்தார்கள்,

## VI.

காலையில் 7½-மணி ஸுமாருக்கு——தெரு 5-ம் நம்பர் வீட்டுக்கு வெளியில் அநேக கன்ஸ்டபில்கள் நின்று கொண்டிருந்தார்கள். ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு ஸப் இன்ஸ்பெக்டர், மிஸ்டர் ஸுந்தரமய்யர், மிஸ்டர் ராஜமய்யர் ஆகிய இவர்களும் கூட நின்று கொண்டிருந்தார்கள்.

ஒரு கன்ஸ்டபில் கதவைத்தட்டினான். உள்ளிருந்தவர்கள் கதவைத் திறக்கவில்லை. கதவை பெயர்த்து திறந்து எல்லாரும் உள்ளேசென்று உள்ளே இருந்த பழனியாண்டியையும் இன்னொருவரையும் ஒரு சிறு பெட்டியைத் திறந்து ஒரு முத்து மாலையையும் சில நோட்டுகளையும் வெளியில் எடுக்கையில் கைது செய்தார்கள். அவர்கள் இரண்டு பேரும் போலீஸாருடன் சிறிது நேரம் மல்யுத்தம் செய்யவே, தக்கபடி யுதையுண்டு பிறகு கையில் விலங்குடன் சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்பட்டார்கள். அப்போதே 5-ம் பிரிவில் குறிப்பிட்ட விதவையும் அவளுடைய வீட்டில் இருக்கையில் கைது செய்யப்பட்டாள்.

* * *

" அந்த இரண்டு பேருந்தான் திருடினார்கள் என்று எப்படி ஊகித்தீர்கள்?" என்று கேட்டாள் ஸுந்தரமய்யரின் மனைவி.

" இதற்கெல்லாம் ஸரியான ந்யாயம் சொல்ல முடியாது. சில ஸமயம் ஏதாவது மனஸில் தோன்றும். அதைக்கொண்டு தான் எல்லாம் ஊகிக்கவேண்டும். கோவிந்தன் திருடவில்லை யென்று ஒருவாறு நிச்சயம் பண்ணிக்கொண்டேன். சங்கரய்யரிடம் போய் விசாரித்ததில் அவர் வீட்டில் ஒரு விதவை வேலை செய்து கொண்டிருக்கிறாள் என்றும், ஆண்டு நிறைவுக்குமுன் இரண்டொருநாளாய் அவளுக்கு உடம்பு ஸௌக்யமில்லை என்றும், ஆண்டு நிறைவன்று ராத்ரி வெகு நேரம் இருந்துவிட்டுப்பிறகு போகும்போது சொல்லிக்கொண்டு போகவில்லை யென்றும், மறுநாள் முதல் உடம்பு ரொம்ப அஸௌக்யமாயிருப்பதாகவும், ஆகையால் வேலை செய்ய முடியாதெனவும் அவளுடைய பிள்ளையினிடம் சொல்லியனுப்பினாள் என்றும் சங்கரய்யர் சொன்னார். மேலும் அவர் மனைவி அந்த விதவை ரொம்ப யோக்யமானவள் என்றும், அவளுக்கு தன்மேல் விச்வாஸம் ரொம்ப உண்டென்றும் தானும் அந்த விதவையும் ரொம்ப அன்யோன்யமான ஸ்நேகிதர்கள் என்றும் சொன்னாள். அந்த விதவையின் மேல் எனக்கு ஸந்தேகமுண்டாயிற்று. அந்த விதவையை யவள் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தபோது பார்த்தேன். அவள் அஸௌக்யமா யிருப்பதாகத் தெரியவில்லை. பிறகு அவளுடைய பையனைக்கண்டு விசாரித்தேன். அவளுக்கு ஒரு சூத்ரன் ஸ்நேகிதம் என்று தெரிந்தது. இவள் தான் சங்கரய்யர் வீட்டில் பதுங்கியிருந்து தானாகவாவது அல்லது அந்த சூத்ரனைக்கொண்டாவது மறுசாவி கொண்டு பெட்டியைத்திறந்து, முத்து மாலையையும் நோட்டுகளையும் எடுத்துக்கொண்டு சூத்ரனை வெளியேவிட்டுக் கதவைச் சாத்தித் தாளிட்டு, உள்ளேயிருந்து விடியற் காலையில் ஒருவருக்கும் தெரியாமல் வெளியே வந்திருப்பாள் என்று தோன்றிற்று. அவள் சங்கரய்யர் மனைவியினிடம் ரொம்ப அன்யோன்ய ஸ்நேகிதமாதலால் நகை விஷயமாயும், திறவுகோல் விஷயமாயும் எல்லாம் அறிந்திருப்பாள்என்றும் எனக்குத் தோன்றிற்று. ஆகையால் மறுசாவி ஸம்பாதிப்பதில் அவளுக்கு அதிக கஷ்ட மிருந்திருக்காது." என்று மற்றும், வாசகர்களுக்குத் தெரிந்த விஷயங்களையும் சொன்னார்.

விதவையும், பழனியாண்டியும், மறுசாவி கொடுத்து உதவினவனும் விசாரிக்கப்பட்டுத் தண்டனை யடைந்தார்கள் என்பதையும், கோவிந்தன் விடுதலையடைந்து தன் காதலியை யடைந்தான் என்பதையும், சங்கரய்யர் கோவிந்தனை மறுபடியும் தம்மிடத்தில் வேலைக்கு அமர்த்திக்கொண்டார் என்பதையும் விஸ்தரித்துச்சொல்ல வேண்டியது அனாவச்யம்.

எம். எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யர்.

# SELECTIONS
## விசேஷத்திரட்டு.

### LACE INDUSTRY IN SOUTH INDIA.
### தென்னிந்தியாவில் சரிகைத் தொழில்.

சமீபத்தில் சென்னைக் கவர்ன்மெண்டின் உத்தரவுப்படி மிஸ்டர் N. சுப்பிரமணிய அய்யரும் அவருடன் நெசவுத்தொழில் அறிந்த சிலரும் கூடி ஊரூராய்ப் போய் நெசவுக்காரர்களுக்குப் புது உபாயங்களைச் சொல்லிக்கொடுக்க நியமிக்கப்பட்டார்களல்லவா? அந்த மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் "ஹிந்து" பத்திரிகைக்கு எழுதியிருக்கும் ஒரு வியாஸத்தில் சென்னை பெரம்பூரில் ஸ்தாபிக்கப்பட்டு சில காலத்துக்கெல்லாம் நிறுத்தப்பட்டுப்போன சரிகைத் தொழிற் சாலையின் சரித்திரத்தைப்பற்றி எழுதியிருக்கிறார். இந்த சரித்திரம் நம் நேயர்களுக்கு ரஸமாயும் உபயோகமுள்ளதாயும் இருக்குமென்று நம்பி அதைச் சுருக்கி இங்கெழுதுகிறோம். இந்தியாவில் சரிகைத்தொழில், நெசவுத்தொழிலைப்போல, அனாதி காலந் தொட்டுச் செய்யப்பட்டுவருந் தொழில். சமீப காலம் வரையில் மதுரை, ஆற்காடு, விசாகப்பட்டணம், சிகாகோல், முதலான இடங்களில் அது செய்யப்பட்டு வந்தது. ஆனால், நெசவுத்தொழில் எப்படி அன்னியர் போட்டியால் நம் தேசத்தில் அழிந்து போயிற்றோ, அப்படியே சரிகைத்தொழிலும் பிரான்ஸ் தேசத்தாரின் போட்டியால் அழிந்து போயிற்று. இப்போது தென்னிந்தியாவில் சரிகைத் தொழில் செய்யப்படுவதே இல்லை. எல்லா சரிகையும் பிரான்ஸ் தேசத்திலிருந்து வருகின்றது. சென்ற சில வருஷங்களாக சென்னை மாகாணத்தில் இறக்குமதியாகும் சரிகை 28 லக்ஷ ரூபாய் மதிப்புள்ளது. இந்தியா முழுதிலும் இறக்குமதியாகும் சரிகை சராசரி 44 லக்ஷத்துக்கு மேலில்லை யாகையால், மொத்தத்தில் சுமார் நூற்றுக்கு 64க்குமேல் இந்த மாகாணத்தில் சரிகை இறக்குமதி செய்யப்படுகிறது.

இப்படியிருக்க, மதுரையில் சென்ற 40 வருஷத்துக்கு அதிகமாக சரிகை செய்து வந்த வமிசத்தைச் சேர்ந்த மிஸ்டர் V. K. குப்பய்யர் பம்பாய்க்குப் போயிருந்த காலத்தில் அங்கு கையினால் வேலை செய்து வந்த நூற்கும் இயந்திரங்களைப் பார்த்து, அவைகளை ஒன்றுசேர்த்து இயந்திர விசையால் ஓட்டி நூற்றால் லாபம் வருமென்று நினைத்து அப்படியே செய்ய நிச்சயித்தார். அதற்காகச் சில பிரான்சுக்காரர்களை மானேஜர்களாகச் சேர்த்துக்கொண்டு பெரம்பூரில் ஒரு தொழிற்சாலையை ஸ்தாபித்தார். அவசியமான கட்டிடங்கள் கட்டி வேண்டிய இயந்திரங்களை பிரான்ஸ்தேசத்திலிருந்து 35,000 ரூபாய்க்குத் தருவித்தார். நாட்டுக்கோட்டையாராகிய மிஸ்டர் வெங்கடாசலம் செட்டியாரை தம் பங்காளியாகச் சேர்த்துக்கொண்டார். தொழிற்சாலை 1908-ம் வருஷத்திலிருந்து 1910-ம் வருஷம் வரையில் நடந்தது. செய்யப்பட்ட சரிகையும் நல்லதாயிருந்து விலைபோயிற்று. ஆயினும், வழக்கம்போல, முதலாளிகள் தொழிற்சாலைகளின் கணக்குகளை அப்போதப்போது சோதிக்காமல் அஜாக்கிரதையா யிருந்துவிட்டார்கள். ஆகையால், சில தொகைகள் கணக்கில் வராமல் நஷ்டமாகிவிட்டன. பிரான்ஸ் தேசத்தாராகிய மானேஜர்களும் அவர்களுக்கு ஒத்தாசையாய் பிற்பாடு வந்த ஒரு ஸ்திரீயும் வேலையை விட்டுவிட்டுப்போய் விட்டார்கள்.

இவர்கள் வேலையை விட்டு பிரான்ஸ்தேசம் போய் விடவே, தொழிற்சாலை எப்போதும்போல் நடவாமல், புரொபஸர் லெக்ஷ்மி நரஸுவை சூபரின்டெண்டாக நியமித்து, குறைந்த வேலை செய்யப்பட்டு வந்தது. புரொப்ரைட்டர்களாகிய இருவரும் மாண்டு போனார்கள். மாண்டுபோகவே அத்தொழிற்சாலை அவர்களுடைய பந்துக்கள் வசமாயிற்று. குப்பய்யருடைய சகோதரராகிய L. K. ராமஸ்வாமி அய்யர் இரண்டு மெஷின்களை வைத்துக்கொண்டு வேலை நடத்திவந்தார். அப்போதும் செய்யப்பட்ட சரிகை நல்லதாகவே இருந்தது. இதனால் மிஸ்டர் குப்பய்யருக்கு சரிகை செய்யும் தொழிலில் நல்ல அனுபோகம் உண்டென்று தெரிகின்றது. ஆனால் நல்ல சரிகை செய்வதற்குப் பட்டு நூல்கள் சன்னமாயும் ஒரே மாதிரியான இழையுள்ளதாயும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட நூல்கள் இந்தியாவில் சாதாரணமாய்க் கிடைப்பதில்லை. மேல் நாடுகளிலிருந்து வரும் நூல்கள் இந்த குணங்கள் உள்ளன. ஆயினும் பம்பாயில் டேவிட் ஸாஸூன் அன்ட் கம்பெனியும் பூனாவில் ஹிந்வால் பாலமுகுந்த் அண்ட் கம்பெனியும் இத்தகைய நூல்களை மெஷின் வைத்துச் செய்வதாகச்

சொல்லப்படுகிறது. இந்தக் கம்பெனிகளிடமிருந்து மிஸ்டர் குப்பய்யர் நூல் தருவிக்க முயன்றும் கை கூடவில்லை. சொந்தத்தில் மெஷின் வைத்து இப்படிப் பட்ட நூல்கள் செய்வதற்கு 20,000- ரூபாய் பிடிக்கும். இப்படிச் செய்தாலும் சரிகைத் தொழில் லாபந் தரவேண்டுமானல் தொழிற்சாலையை விசாலப்படுத்தி 4-அல்லது 5-லக்ஷரூபாயாவது முதல் வைத்து உயர்ந்த சரிகைகளும், தாழ்ந்த சரிகைகளும் செய்து விற்கவேண்டும். மிஸ்டர் L. K. ராமஸ்வாமி அய்யர் முரட்டு சரிகைளுக்கு பஞ்சாப் மாகாணத்தில் விசேஷ கிராக்கி யிருப்பதால் அதைத் தம்மிட மிருக்கும் மெஷின்களைக்கொண்டு செய்து விற்று லாபமடைவது மன்றி, இது வரையில் நேரிட்ட நஷ்டத்துக்கு ஈடு செய்து கொள்ளலாமென்று நினைக்கிருர். இவ்வாறு மறுபடியும் பெரம்பூரில் வேலை துவக்குவதற்கு 10,000 ரூபாய் செலவு பிடிக்குமாம். மிஸ்டர் ராமஸ்வாமி அய்யர் இதில் சில பாகத்தைக் கொடுக்கச் சம்மதமுள்ளவராயிருக்கிருர். ஆனல் அவருடைய பங்காளியோ இது வரையில் நேரிட்ட நஷ்டத்தினல் பயந்து புதிதாய்ப் பணம் போட யோசிக்கிருர்.

சுதேசமித்திரன்.

---

## CO-OPERATIVE UNIONS UNDER FEDERAL BANKS.

### பிடரல் பாங்கின்கீழ் கோவாபரேடிவ் யூனியன்கள்.

மதுரையில் கூடிய மதுரை ராமநாதபுரம் ஜில்லா முதல் கோவாரெடிவ் கான்பரென்ஸில் மிஸ்டர் ஒ.எம். வெங்கட நாதய்யங்கார் செய்த ப்ரஸங்கம்:—இப்போது நம் ராஜதானியில் சுமார் 1000 சங்கங்களுக்கு மேல் ஐக்கிய நாணயச்சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஐக்கிய நாணயச் சங்கங்கள் சமீபத்தில் ஓர் குறித்த எல்லைக்குள் 10-அல்லது 15-க்குக் குறையாமல் ஒரு தொகுதியாகச் சேர்ந்திருக்கும் சங்கத்திற்குத் தான் ஒரு "கோவாபரேடிவ் யூனியன்" என்று பெயர். "யூனியன்" என்கிற பதத்திற்குத் "தொகுதி" அல்லது "ஒற்றுமை" என்கிற அர்த்தங்கள் உண்டு. இவ்விடத்தில் தொகுதி என்பதை எடுத்துக் கொள்வோம். அதாவது ஐக்கிய நாணயச் சங்கங்களின் தொகுதி யென்ருகும். உதாரணமாக, மதுரை அல்லது வடமலைபுரம் என்கிற சங்கத்திற்குச் சுமார் 5 அல்லது 6-மைல் சுற்றிலுமுள்ள எல்லா ஐக்கிய சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து ஒரு சங்கமாக ஏற்படுத்திக்கொண்டு அதற்கு "மதுரை கோவாபரெடிவ் யூனியன்" என்று பெயர்வைத்துக் கொள்வோம். அப்படி ஒரு யூனியன் ஏற்படுத்திக் கொள்வதனல் அத்தச் சங்கம் செய்ய வேண்டிய வேலைகள் என்னவென்ருல், (1) தன்னேடு சேர்ந்த சங்கங்கள் சீர் அடையும்படி மேல் பார்த்து குறைவுகளை நிவர்த்தி செய்து நல்லவழிக்குக்கொண்டுவருவதும்;(2)செண்ட்ரல் அல்லது பிடரல்பாங்கருடைய பணத்திற்கு யாதொரு கேடு இல்லாமல் பாதுகார்ப்பதும், (3) சங்கங்களுக்கு வேண்டிய கடன்களைப் பிடரல் பாங்கிலிருந்து தருவித்துக் கொடுப்பதும், (4) யூனியன் எல்லைக்குள் இருக்கப்பட்ட மிகுதித்தொகைகளைக்கூடிய வரையில் வெளியே போகாமல் இச்சங்கங்களுக்கு டிபாசிட்டாக சேகரிக்க முயல்வதும், (5) ஒரு சங்கத்தில் மிகுதியான பணம்இருந்தால் பணம் தேவையாக இருக்கும் மற்ற சங்கங்களுக்கு கொடுத்துவைப்பதும், (6) கூட்டுறவின் தத்துவத்தை போதிப்பதும், (7) சங்கங்கள் இல்லாத கிராமங்களில் இந்த ஐக்கிய சங்கங்களை ஏற்படுத்துவதும், (8) சேர்ந்த சங்கங்களின் ஆஸ்திபாக்கிசாக்கிகளைத் தணிக்கை செய்து நிலைப்படுத்துவதும், (9) பணலாவாதேவியில்லாத வேறு விதங்களான கூட்டுத்தொழில்களையும் விவசாயம், கல்வி, சுகாதாரம் இவைகளை அந்த யூனியன் தொகுதிக்குள் விருத்தி செய்வதும் போன்றவைகளாகும். (10) யூனியன் சங்கங்களைப் போல் பங்குத் தொகை வசூலிக்கப்பட வேண்டுவதில்லை. இவைகளெல்லாம் ஏககாலத்தில் உண்டாகக்கூடியதாயில்லை. ஆரம்பத்திலேயே முக்கியமான விஷயங்கள் நன்மையாக உண்டாகி விடும். சங்கத்தின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து செய்யவேண்டிய வேலைகள் அனேகம் உண்டு. அதற்காகவேதான் இம்மாதிரியான கான்பரன்ஸுகள் கூட்டப்படுகின்றன என்று நன்கு விளங்கும்.

2. இந்த யூனியன் சங்கம் நடத்த அந்த எல்லைக்குள் இருக்கும் ஒவ்வொரு சங்கத்திலிருந்து பிரதிநிதி அனுப்பவேண்டும். அப்படி பிரதிநிதிகள் சேர்ந்து யூனியன் மஹா சபையாகும். அந்த மஹா சபையில் யூனியன் பஞ்சாயத்துகள் என்ற சிலரைப் பொறுக்கி நியமிக்கவேண்டும். அப்படி நியமிக்கப்பட்ட பஞ்சாயத்தார்கள் ஒரு சங்கத்தின் அலுவல்களைப் பார்ப்பதுபோல் யூனியன் அலுவல்களைப் பார்க்கவேண்

டும். அந்த யூனியன் பஞ்சாயத்தார் சேர்ந்து ஒரு சூபர்வைசரை நியமிப்பார்கள். அந்த சூபர்வைசர் தான் தணிக்கை முதலிய விஷயங்களைச் செய்து யூனியன் வேலைகளை நடத்த வேண்டியவராவர். அவர் ரிஜிஸ்டிராரின் கீழ் இன்ஸ்பெக்டர் வேலை செய்வது போல் ஒக்கும். இந்த யூனியனுர் ரிஜிஸ்டிரார் வேலைகளின் சில பாகங்களை நடத்தும் அதிகாரங்களை உடையவராவர். இப்போது இந்த இராஜதானியில் ஏற்பட்டுள்ள யூனியன்களின் உபவிதிகளையும் பார்த்தால் நன்கு விளங்கும்.

3. இப்போது யூனியனைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. இனி பிடரல் பாங்கைப்பற்றிச் (Federal Bank) சற்று யோசிப்போம். பிடரல் பாங்கென்பது இப்போதுள்ள மதுரை, ராமனுதபுரம் டிஸ்டிரிக்ட் பாங்கைப்போன்றதாகும். ஆனல் இந்த ஜில்லா பாங்கை பிடரல்பாங்கென்று பூரண எண்ணத்துடன் சொல்லச் சாத்தியமில்லை. இந்த டிஸ்டிரிக்டு பாங்கின்உபவிதிகளில் சொல்லியவிஷயங்களில் அனேகமாக (Federal Bank) பிடரல் பாங்கினது குறிகள்போல் இருந்தாலும் சில வித்தியாசமுண்டு. இப்போது இந்த பாங்கில் சேர்ந்திருக்கிறவர்கள் (1) சில ஐக்கியநாணயச் சங்கங்களும் அவர்களுக்குப் பிரதிநிதிகளும் (2) சங்கமாக இல்லாத மெம்பர்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். பிடரல் பாங்கானது ஐக்கிய நாணயச் சங்கங்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சேர்ந்தே ஒரு சங்கமாகும். அந்தச் சங்கத்தில் பங்குத் தொகைகளை ஐக்கிய நாணயச் சங்கங்களே எடுக்கவேண்டும். இப்படி இல்லாமல் மதுரை ராமநாதபுரம் ஜில்லாபாங்கின் பங்குத் தொகைகளைச் சங்கங்களும் இதரர்களும் பங்கு எடுக்கலாமென்று விதிகள் ஏற்படுத்தினதற்கு அடியில்கண்டது காரணமாக இருக்குமென்று நான் யூகிக்கிறேன். அதாவது இப்போது சுமார் 1000 பங்குகள் ஏற்படுத்தியிருப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த 1000 பங்குகளும் ஐக்கிய சங்கங்களே எடுத்துக்கொள்ள இப்போது சாத்தியமில்லை. அதில் 5-ல் 2-பங்கு ஐக்கிய சங்கங்களும் மற்ற 3-பங்குகள் இதராளும் எடுக்கலாமென்று வைத்தால் இப்போது பங்குத் தொகைகளெல்லாம் பூர்த்தியாய் வசூலிக்கப்பட்டு பாங்கு நடத்த மூலதிரவியம் ஏற்படும். பிறகு பங்குகள் காலியாவதெல்லாம் ஜில்லாவில் ஏற்படும் ஐக்கிய சங்கங்களுக்கே கொடுப்பதாகவே இருக்கும். இது தான் காரணமாக இருக்கலாமென்று தோன்றுகிறது.

4. பிடரல் பாங்குகள் சாதாரணமாக ஒரு தாலூக்காவிற்கு ஒன்று ஏற்பட்டால் மிக நல்லதாகும். ஒரு தாலூக்காவில் சுமார் 200 சங்கங்களுக்குமேல் ஏற்படுமாகில் கட்டாயமாய் தாலூக்காபிடரல் பாங்குகள் ஏற்படுவதுதான் நல்லதாகும். அப்படியே 5, 6 பிடரல் பாங்குகள் சேர்ந்து ஒரு ஜில்லா யூனியன் அல்லது ஜில்லா பிடரல் பாங்காகத் தீர்மானிக்கப்பட்டு ஒரு யூனியன் செய்யும் வேலைகளைப்போல் அந்த ஜில்லா பிடரல் பாங்கும் மேல்தணிக்கையும் (Supervision) திரவிய உதவி (Finance) யும் செய்யவேண்டும். ஒவ்வொரு தாலூக்காவில் உள்ள திரவியங்கள் வேறு இடங்களில் கூடியவரையில் வெளியே போகாமல் அந்த தாலூக்காவிற்கே உபயோகப்படும்படிக்கும் ஒவ்வொரு ஜில்லாவில் திரவியங்கள் கூடிய வரையில் அந்த ஜில்லாவில் நடக்கும்படிக்கும் பிரயத்தனம் செய்வதோடு ஜில்லாவில் ஜனங்கள் சீர் அடையும்படிசெய்வது நலமாகும். பிறகு ஜில்லா பிடரல் பாங்குகள் அல்லது யூனியன்கள் சேர்ந்து ஒரு ராஜதானி கோவாபரெடிவ் யூனியனுகவும் ஒரு செண்டிரல் பாங்காகவும் ஆகவேண்டும்.

5. இப்போது சென்னை ராஜதானி கோவாபரேடிவ் யூனியன் (Madras Provincial Co-operative Union) என்று ஒருசங்கம் ஏற்பாடாகி ரிஜிஸ்டர்செய்யப்பட அனுப்பியிருக்கிற சங்கதி நேயர்கள் அறிவார்கள். தணிக்கை செய்வதும் மேல் பார்வை பார்ப்பதும் ஜில்லா பிடரல் பாங்குகள் ஏற்படுத்துவதும், கிராமத்தில் சங்கங்கள் ஏற்படுத்துவதும் அதன் வேலையாகும். பண சம்பந்தம் இதற்கு இல்லாமல் இருப்பதுதான். நலமாகும். பண உதவிக்காக இப்போது இருக்கும் மதரஸ் செண்ட்ரல் பாங்கே (Madras Central Bank) ராஜதானி பிடரல் (Federal) பாங்காகிவிடவேண்டும்.

6. ஒரு ஜில்லா அல்லது தாலுக்காவின் பிடரல் பாங்கின் (Federal Bank) வேலை அடியில் கண்டவையாக யிருக்கும்: (1) அந்த ஜில்லா அல்லது தாலுக்காவின் எல்லா ஐக்கிய சங்கங்கள் அந்தச் சங்கத்திற்குப் பிரதிநிதியாக இருந்து பங்கு எடுத்துக் கொள்ளும்படி தூண்ட நல்வழிப்படுத்தவேண்டும். (2) சங்கங்கள் இல்லாத கிராமங்களில் சங்கங்களை ஏற்படு

த்த வேண்டும் (3) சங்கங்களை ஒன்றுபடுத்தி யூனிய ஞகச் செய்வதும், (4 யூனியனுல் சிப்பார்சு செய்யும் கடன் விண்ணப்பங்களுக்கு கடன் கொடுப்பதும், (5) யூனியன் செய்த தணிக்கைகளின்மேல் தணிக்கை செய்வதும் போன்றவையாகும்.

7. யூனியன்கள் வேலை நடத்துவதற்காக இப்போது சென்னை செண்டிரல் பாங்குகள் திரவிய உதவி செய்வது போல் திரவியசகாயம் செய்யவேண்டும். இம்மாதிரி செய்வதால் ஒரு பிடரல் பாங்கின் திரவியத்திற்குக் கேடு இல்லாமல் உண்டுபண்ணுவதோடு சங்கங்களை முன்னுக்குக் கொண்டுவர ஏது உண்டாகும். (Federal Bank)பிடரல் பாங்குக்கு அதிக சிப்பந்தியும் ஏற்படுத்த வேண்டுவதில்லை. ஒவ்வொரு யூனியன்களுக்கும் சூபர்வைசர்கள்ஏற்படுகிறபடியால் அவர்கள் செய்யும் வேலைகளைத் தணிக்கை செய்வதற்காக 2 சூபர்வைசர்களை ஏற்படுத்தினுல் போதும். யூனியன் பஞ்சாயத்தார்கள் எப்படி சங்கங்களை சூபர்வைசர் செய்யும் வேலைமேல் தணிக்கை செய்கிறார்களோ, அம்மாதிரியே பிடரல் பாங்கின் டைரெக்டர்களும் சங்கங்களின் பாக்கி சாக்கிகளைத் தணிக்கை செய்வதாகவும், ஐக்கிய பத்தியத்தின் தாற்பரியங்களை யொட்டிநடக்கிறார்களா இல்லையா என்று பார்த்து அவைகளைச் சீர்ப்படுத்துவதாகவும் இருக்கவேண்டும். தவிரவும், ஒரு யூனியனில் மிகுதியாய் திரவியம் இருந்தால் அதை தாங்கள் பெற்று அவைகளை மற்ற சங்கங்களுக்கு உபயோகப்படுத்தும்படி செய்யவேண்டும்.

(8) யூனியன்களுக்குப் பணலாவாதேவி யிருக்கக் கூடாது. ஏனெனில், முதலானது தக்க மனுஷியாள் இப்பொழுது அகப்படுவது கஷ்டம்; தவிரவும் பணலேவாதேவியும் காரிய நிர்வாகமும் ஒன்றுபட வைத்தால் நிர்வாகம் சரிவர நடவாது; பணலேவாதேவி இருக்கும் பக்ஷத்தில் சில சமயங்களில் லாபத்தின் பேரிலேயே திருஷ்டியாக வேலைகளை முடிக்க நேரிடும். ஐக்கியபத்திய விஷயமாய் நிர்வாகம் செய்யும் காலத்தில் திரவிய லாபத்தைக் கருதாமல் வேலைகள் செய்யவேண்டி வரும். இரண்டு வேலைகளையும் பூராவும் ஒன்றுபடச் செய்வது சாத்தியமாகாது. யூனியன் எல்லையானது சிறியதானபடியால் யூனியன் ஆரம்பித்தவுடனே திரவியம் சேராவிட்டால் சில வருஷம் சென்றதும் பணம் மீதமாகும்படியான காலம் உண்டாகும் அப்படி உண்டாகும். காலத்தில் அந்த திரவியத்துக்கு வேறு இடம் தேடவேண்டி நேரிடும். விசாலமான எல்லையையுடைய பிடரல் (Federal) பாங்கின் லேவாதேவியிருந்தால் எங்கும் பரவி ஏறக்குறைய முதலில்சமாளிப்பதும், பிறகு செலவழிக்கும் வழியைத் தேடுவதும் சாத்தியமாகும். எவ்விடத்தில் பிடரல் (Federal) பாங்கிகள் ஏற்படவில்லையோ அவ்விடங்களில் யூனியனுக்கு லேவாதேவி அதாவது பண உதவி செய்யும் (Finance) அதிகாரம் கொடுக்கலாம். அவ்வித யூனியன்களுக்கு லேவாதேவிகூடச் செய்வது இன்றியமையாததாகும் ஆகையால் பிடரல் பாங்குகளைப்போல் ஏற்பட்ட இந்த ஜில்லாவிற்கு வேறு சோவாபரேடிவ் யூனியன்கள் உண்டுபண்ணினுல் தான் பிடரல் (Federal) பாங்கி செழித்து ஓங்கும். சாதாரணமாய் பிடரல் பாங்குகள் டிபாசிட்டுகள் ஏராளமாய் சம்பாதித்துக் கீழ் இருக்கும் கிராமங்களுக்குப் பண உதவி செய்து செலவுகளுக்கு வேண்டிய திரவியமும் சொற்பமாகச் சம்பாதிக்கவேண்டியது. அதனோடு தாங்கள் கடனுக்கொடுத்திருக்கும் திரவியம் போதாமல் இருக்கவும் ஐக்கிய பத்தியம் விருத்தியாகவும் சங்கங்களில் ஊன்றியிருக்கின்றதா என்கிற மேல் விசாரணை மாத்திரம் இருக்கவேண்டியதே யல்லாமல், நிர்வாகமாக மேல் விசாரணை உள்புகுந்து டிடெய்லாகத்தனித்தனி செய்யமுடியாது. ஒரு சங்கம் ஒருவிதமான வேலையை நன்ருகச் செய்யச் சாத்தியமாகுமே யல்லது 2,3-வேலைகள் செய்யமுடியாது. தவிரவும் தக்க மனிதர்கள் அகப்படுவது அசாத்தியம். தவிரவும் யூனியன் ஏற்படாத விடங்களில் யூனியனைப்போல் பிடரல் பாங்குகள் (Federal Bank) வேலைசெய்ய வேண்டும். அதற்காகக் கொஞ்சம் அதிக சிப்பந்திகளை ஏற்படுத்த வேண்டும்.

9. பிடரல் பாங்கு (Federal) டைரக்டர்களும் யூனியன் பஞ்சாயத்தார்களும் சங்கங்களைப்போய்த் தணிக்கை செய்யவேண்டும். குறைந்தது வருஷத்தில் 12-சங்கங்களுக்குக் குறையாமல் இருந்தால் தான் நன்ருயிருக்கும். பிடரல் பாங்கிற்கு (Federal) சங்கங்கள் பங்குத் தொகை எடுத்துக்கொள்வதால் பங்குத்தொகை எடுதேதுக்கொள்ளும் சங்கஙகள் பங்கு வீதம் பிரதிநிதிகள் அனுப்பவேண்டுமென்றும், ஆனல் எவ்வளவு பங்கு எடுத்தாலும் 5 பிரதிநிதிகளுக்குமேல் அனுப்பப்படாதென்றும் ஒரு நிர்ணயம்

இருக்கவேண்டும். அந்தப் பிரதிநிதிகளிலிருந்து யூனியன் பஞ்சாயத்துகள் அனுப்பும் பிரதிநிதிகளிலிருந்தும் பொறுக்கி பிடரல் பாங்கு டைரெக்டர்கள் நியமிக்கப்படவேண்டும். மற்ற ரூல்கள் எவ்விடங்களில் எம்மாதிரி யுக்தமோ அம்மாதிரி ஏற்படுத்திக்கொள்வதோடு இப்போது மதுரை ராமநாதபுரம் ஜில்லா பாங்குகளில் உள்ள ரூல்களைப்போல் அனுசரிப்பது நன்றாகும்.

10. இம்மாதிரி பிடரல் (Federal) பாங்குகளும் கோவாபரேடிவ் யூனியன்களும் ஏற்படுமாயின் கவர்ன்மெண்டாருக்கு அதிக சிப்பந்தி வேண்டுவதில்லை. அப்படி சிப்பந்தி செலவு குறைவுபடும்படிக்கும் நாம் செய்யவேண்டியதோடு நம்முடைய வேலைகளை நாம் செய்ய முன்வரவேண்டும். கவர்ன்மெண்டிற்கு அதிக செலவு நேரிடும்போது நமக்கு கவர்ன்மெண்டார் செய்யும் இதர சௌக்கியங்கள் குறைவுபடாதபடி நாமே பொறுப்பை வகிக்க நேரிடவேண்டியிருக்கும். கவர்ன்மெண்டும் நம்மைப் போன்ற குடித்தனமேயல்லாது வேறல்ல. நம்மை சிறிய சம்சாரிகளாகவும் துரைத்தனத்தாரை பெரிய சம்சாரிகளாகவும் பாவிக்க வேண்டும். ஒரு சம்சாரத்திற்கு நேரிடும் கஷ்ட நிஷ்டூரம் போல்தான் கவர்ன்மெண்டுக்கும். கவர்ன்மெண்டுக்குச் செலவு அதிகம் நேரிடின், நாம் தான் அவைகளைப் பொறுக்க வேண்டி நேரிடும்.

---

## SOIL.

### நிலம்.

கிருஷிக்கு முக்கிய ஆதாரம் நிலம். நிலத்தை சீர் திருத்தி உரப்படுத்துவதினால் கிருஷித் தொழில் விருத்தியடைகிறது. கிருஷிகர்கள் லாபத்தை அடைகிறார்கள். நிலத்திற்கு நிலம் மண் வித்தியாசப்படுகிறது என்பது சாதாரணமாய் தெரிந்த விஷயம். ஒரு கிராமத்திலேயே சிலநிலங்கள் அதிக மாசூலைத்தருகின்றன. சில நிலங்கள் அதிக மாசூலை தராவிட்டாலும் முதல் தரமான தான்யங்களை உண்டு பண்ணுகின்றன. சில நிலங்கள் சுவல்ப உரம் போட்டாலும் நல்ல பலனைத் தருகின்றன. சில நிலங்கள் எவ்வளவு உரம் போட்டாலும் யாதொரு பலனையும் தருகிறதில்லை. சில நிலங்கள் ஆழமாக உழவேண்டி யிருக்கிறது. இன்னும் சில நிலங்களில் ஆழமாய் உழுதால் பயிர்பிடிக்கிறதில்லை. மேற்கூறிய வித்தியாசங்களுக்கு தக்க காரணம் கண்டுபிடிப்பதுதான் நில சம்பந்தமான சாஸ்திரோக்த ஆராய்ச்சி. இந்த ஆராய்ச்சியில் நிலத்தில் அடங்கியகளிப்பு, மணல், சுண்ணம்பு, ஹ்யூமஸ் என்கிற மக்கின இந்திரிய வஸ்து முதலிய பாகங்களின் அளவையும் பயிருணவு சத்துக்களின் அளவையும் கண்டுபிடிப்பதினால் நிலம் சிலாக்கியமானதென்பதும் பீடானதென்பதும் நன்றாய் ஏற்படுகிறது. நிலம் சிலாக்கியமென்பதும் பீடென்பதும் ஏற்பட்டபிறகு ஏற்றக்குறைச் சலாயிருக்கிற சத்துக்களை வேண்டியளவு சேர்த்து பீடானநிலங்களை சிலாக்கியமாக்கவும் தெரிந்துகொள்ள இடமுண்டாகிறது. இந்த நிலசம்பந்தமான ஆராய்ச்சிகள் சுலபமாய் தெரிந்துகொள்ளும் பொருட்டு, 3-பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. (1.) கெமிகல் என்கிற ரஸாயனமுறை (Soil Chemistry), (2.) பிஸிகல் அல்லது மெகானிகல் என்கிற ஸதூல விபாகமும் அவைகளின குணகுணங்களும் (Soil Physics), (3) பையலாஜிகல் என்கிற ஜீவசம்பந்தமான முறை (Soil Bacteriology). இம்மூன்றும் ஒன்றோடொன்று சம்பந்தப் படாதவைகள் அல்ல. ஒன்றுக்கொன்று சம்பந்தப் பட்டவைகளே.

பயிர் செழிப்பாய் வளர்ந்து நல்ல பலனை கொடுப்பதற்கு வேண்டிய நைட்ரஜன் (Nitrogen) தழைசத்து, பொடாஷ் (Potash) தாள்சத்து, பாஸ்பாரிக் ஆஸிட் (Phosphoric Acid) தான்யசத்து, லைம் (Lime) சுண்ணம்பு ஆகிய இவைகள் பயிர்களின் வேர்வழியாய் நிலத்திலிருந்து பயிருணவாக கிரஹிக்கப்படுகின்றன வென்பது விவசாயரஸாயன சாஸ்திரத்தின் கொள்கை.

பயிருணவு சத்துக்களின்சோதனையில் முதல்தர நிலத்தில் மேற்கூறிய சத்துக்கள் எவ்வளவு இருக்கின்றன வென்பதையும், இந்த சத்துக்களில் ஒன்றுக்கொன்றுள்ள பரஸ்பரசம்மந்த அளவையும் ஷை சத்துக்கள் உடனே உணவாகக்கூடியவையா, அல்லது தாமதமாக உணவாகக்கூடியவையா என்பதையும் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. பிறகு எந்த மண்ணைப்பார்த்தாலும் மேற்கூறிய சோதனையினாலேயே நிலம் சிலாக்கியமானதா பீடானதா என்பதை முதல்தர நிலத்தின் சோதனையை ஒப்பிட்டுப்பார்த்து சொல்லிவிடலாம். இந்தபாகம் விவசாய ரஸாயனசோதனை சம்மந்தமானது. இந்த ரஸாயனசோதனையில் நிலம் பயிருக்கு வேண்டிய உணவுசத்துக்கள் உள்ளதாயிரு

ந்தால் அந்த நிலத்தை ரஸாயனவளமுள்ளது என்று சொல்லலாம். இன்னும் ரஸாயன முறையிலேயே நிலத்தின் உணவுதாக்கும் சக்தியையும், செழிப்பு செழிப்பின்மை இவைகளின்காரணங்களையும், களர், சவுடு, முதலிய தோஷங்களையும், அவைகளை திருத்தும் விதங்களையும் தெரிந்துகொள்ள இடமுண்டு.

2. பயிருக்கு உணவைப்போல் ஜலமும் அவசியமானதாலும் அந்த ஜலம் நிலத்திலிருந்தே கிரஹிக்கப்படுகிறபடியாலும் பயிருக்கு வேண்டியஅளவு ஜலம் எவ்விதம் இருக்கவேண்டுமென்பதையும், முக்கியமாய் கவனிக்கவேண்டும். நிலத்திற்கும் ஜலத்திற்கும்உள்ள சம்மந்த விஷயமாய் உழவு முதலிய பண்படுத்தும் விதங்கள் மிகவும் உபயோகமானவைகள். நிலத்தை எவ்வளவுக்கெவ்வளவு நன்ருய் உழுகிருேமோ, அவ்வளவுக்கவ்வளவு ஜலமும் காற்றும் நிலத்தில் பிரவேசித்து, பரவி பயிருக்கு உதவும். இவ்வாறு பண்படுத்தப்பட்ட நிலத்தில் ஜலமும் காற்றும் அப்படியே பயிருக்கு உபயோகமாவதோடு, நிலத்தின் சீதோஷணத்தையும் பயிருக்கு வேண்டிய அளவுக்கு கொண்டுவரும். இந்த பாகத்தில் மெகானிகல் அல்லது பிஸிகல் அனலிஸிஸ் என்ற ஸ்தூலவிபாகம் முக்கியமானது. அதாவது மண்ணின் பாகங்களாகிய மணல், மக்கிய இந்திரியவஸ்து, வண்டல், களிப்பு, முதலிய பாகங்களை ஸ்தூலமாகப்பிரித்துபார்த்தல்.இந்த ஸ்தூலவிபாகத்தில் நிலம் சரியான நிலைமையில் இருந்தால் அதை ஸ்வபாவவளம் அல்லது இயற்கை வளம் உள்ளது என்று சொல்லலாம்.

3. நிலம் போட்ட உரத்தை ஸ்தூலமாகவாவது அல்லது ரஸாயன மாறுதல் மூலமாகவாவது பயிருக்கு உணவு ஊட்டக்கூடிய ஜடமானதன்று. லக்ஷக்கணக்காய் ஓயாமல் வேலை செய்து கொண்டிருக்கிற சிற்றுயிர்கள் அடங்கிய ஓர் தொழிற்சாலைக்கு ஒப்பானது. இச்சிற்றுயிர்களால் நிலத்தில் உள்ள இந்திரிய வஸ்துக்கள் பயிருக்கு வேண்டிய உணவாக்கப்படுகின்றன. வேருெருவிதமான சிற்றுயிர்கள் காற்றில் ஏராளமாயுள்ள நைட்ரஜனை பயிருணவாகக்கூடிய நிலைமையில் நிலத்திற்கு சேர்க்கின்றன. வேறு சில சிற்றுயிர்களோ பயிருணவிற்கே முற்றிலும் விரோதமாயிருக்கின்றன. இந்த சிற்றுயிர்களின் விசேஷ சாதகம் உழவு முதலிய பண்படுத்தும் விதங்களால் அதிகமாகின்றன. நிலத்தில் சிற்றுயிர்களால் பயிர்களுக்கு உண்டாகும் சாதகமான அநேகவிஷயங்கள் நாளுக்குநாள் புதிது புதிதாய் கண்டுபிடிக்கப்படுகின்றன. இந்த நிலசம்பந்தமான சிற்றுயிர்சாஸ்திரம் (Soil Bacteriology) சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும், இதற்குள்ளேயே விவசாயத்திற்கு விசேஷ சாதகங்களை உண்டு பண்ணியிருப்பதோடு இன்னும் மேன்மேலும் அளவிலடங்காத பிரயோஜனம் கிடைக்குமென்றும் தெரிகிறது. இந்த 3 பாகங்களிலும் அததன் நிபுணர்கள் தக்கபடி வேலைசெய்து இவ்வளவு சாஸ்திர பயிற்சி அடையாத விவசாயிகள் தாங்களேநிலங்களின் குணகுணங்களை தெரிந்துகொள்ளும்படியான சுலபமான வழிகளையும் காட்டியிருக்கிருர்கள்.

நிலத்தில் முதலில் தெரியவேண்டிய பாகம் நிலத்தின் சுவபாவம். இந்த சுவபாவம் நிலத்தின் பாகங்களாகிய மணல், களிப்பு, வண்டல், இந்திரிய வஸ்து இவைகளின் அளவைப் பொருத்தது.

கற்கள்:-இவைகள் சாகுபடிக்கு பிரயோஜன மானவைகள் அல்ல. கிராவல் அல்லது (முறம்பு ஜல்லி):-கற்களைக் காட்டிலும் சிறியவைகளும் 1-25 அங்குல குருக்களவுக்கு மேற்பட்டவைகளுமாயிருக்கின்றன. இவைகளும் சாகுபடிக்குஅவ்வளவு பிரயோஜனமானவைகளல்ல.

மணல்:—இது 1/25 அங்குல குருக்களவுக்கு குறைந்து 1/500 அங்குல குருக்களவுக்கு மேற்பட்டது. இதிலேயே 1/25 அங்குலத்துக்கும் 1/50 அங்குல குறுக்களவுக்கும் உட்பட்டது பெருமணல். 1/50 க்கும் 1/100 அங்குல குருக்களவுக்கு நடுவிலுள்ளது நடுத்தர மணல். 1/100 க்கும் 1/250 அங்குல குருக்களவுக்கு உட்பட்டது சிறுமணல். 1/250க்கும் 1/500 க்கும் உட்பட்டது பொடிமணல்.

வண்டல்:—இது 1/500க்கும் 1/5000 அங்குல குருக்களவுக்கும் இடையிலுள்ள பாகம். இதை விரல்களால் இழைத்துப்பார்த்தால் சன்னமாயும் மிருதுவாயும் இருக்கும். ஈரமாயிருந்தால் களிப்பைப்போல் பிசுபிசுப்புள்ளது.

களிப்பு:— 1/5000 க்கும் 1/250,000க்கும் இடையிலுள்ள பிரமாணமுள்ளது. இது சன்னமாயும் மிருதுவாயும் ஈரமாயிருந்தால் பிசுபிசுப்புள்ளதாயும் வழுக்கக்கூடியதாயுமிருக்கும்.

ஹ்யூமஸ்:—அல்லது மக்கின இந்திரியவஸ்து. அதாவது பிராணி, ஸ்தாவர சம்மந்தமான வஸ்துக்கள்

நாளடைவில் தண்ணீர் சம்மந்தப்பட்டு மக்கிப்போன பாகம். இது பழுப்பு நிறமாகவாவது கருப்பு நிறமாக வாவது இருக்கும்.

மேற்சொல்லிய பாகங்கள் அடங்கிய நிலங்களாவன:-

மணல் நிலம்:—இது பெரும்பாகம், மணலும் கொஞ்சம் வண்டல், களிப்பு, இந்திரியவஸ்துக்களும் சேர்ந்துள்ளது. இந்த நிலம் சுலபமாய் வேலைசெய்யக் கூடியதாகவும் ஒன்றோடொன்று சேராமலும் இருக்கும். இதில் எந்தப்பயிரும் சீக்கிரம் விளையக்கூடியது. காய்கறிகள், சிறுபழச்செடிக்கும், சில புகையிலை விதங்களுக்கும் தகுதியானது. சாதாரண தான்யபயிர்களுக்கு லாயக்கானதல்ல. தர்பூசி, சக்கரைவள்ளி, உருளைக்கிழங்கு, தக்காளிச்செடிகள், கத்திரி, மிளகாய் பட்டாணி முதலியவைகள் நன்றாய்பயிராகும்.

லோம் (Loam) என்ற பசளைமண். இதில் மணல், வண்டல், களிப்பு, ஆகியமூன்றும் ஒரளவாயும் கொஞ்சம் இந்திரியவஸ்துக்களும் சேர்ந்துள்ளது. மணல் பாதியும், வண்டலும் களிப்பும் பாதியுமாக கொஞ்சம் இந்திரிய வஸ்து சேர்ந்திருந்தாலும் பசளைமண்தான். இது எல்லா சாகுபடிக்கும் சிலாக்கியமான நிலம். விசேஷமாய் தான்யவர்க்கங்கள், புல், சோளம், மக்காச்சோளம், உருளைக்கிழங்கு, பருத்தி, காய்கறிகள், கிழங்குகள் இவைகளுக்கு சிலாக்கியம். இதிலேயே 5-ல் 3-பாகம் மணலும், 2-பாகம் வண்டல், களிப்பு, இந்திரியவஸ்து சேர்ந்திருந்தால் இதற்கு ஸாண்டிலோம் (Sandy Loam) அல்லது மணல் சம்மந்தமான பசளை மண் என்னப்படுகிறது. இதில் பசளைமண்ணைக்காட்டிலும் உழவு முதலியவைகள் சுலபமாய் நடக்கும். எல்லாசாகுபடிக்கும் லாயக்குள்ளது. முக்கியமாய் மக்காசோளம், பருத்தி நன்றாய் வரும். காய்கறி பயிர்களும் நன்றாய் பயிராகும்.

ஸில்ட்லோம் (Silt Loam) அல்லது அல்லூவியம் என்கிறவண்டல் சம்மந்தமான பசளைமண். இதில் அநேகபாகம் குளம் அல்லது ஆற்று வண்டலும் மற்ற பாகம் மணல், களிப்பு, இந்திரிய வஸ்துவும் சேர்ந்திருக்கும். இது உழவு முதலியவைகளுக்கு முந்தி சொன்னதைப்போல அவ்வளவு சுலபமானதல்ல. இந்த நிலத்தில் முதல் தரமான மக்காச்சோளம், கோதுமை, நெல், உருளைக்கிழங்கு, பருத்தி முதலியவைகள் உண்டாகும்.

க்ளேலோம் (Clay Loam) அல்லது களிப்பு சம்மந்தமான பசளை மண். இந்த நிலங்கள் இதற்கு மூம்தின ஸில்ட்லோம் (Silt Loam) நிலங்களைக்காட்டிலும் அதிக களிப்புள்ளது. ரொம்பவும் வழுக்கலுள்ளதாயிருக்கும். உழவு முதலியவைகளுக்கு கஷ்டம். கோதுமை, நெல், சோளம், மக்காச்சோளம், புல் முதலியவைகள் நன்றாய் வரும்.

கிராவல்லிலோம் (Gravelly Loam) கிராவல்சம்மந்தமான பசளைமண். இதில் 1/4 முதல் 2/3 வரை சரளையும், மற்றபாகம், மணல், வண்டல், களிப்பு, இந்திரியவஸ்து இவைகள் சம்மந்தமாயும் இருக்கும். இது மாதிரி ஆரஞ்சு முதலிய பழவர்க்கங்களுக்கு சிலாக்கியம். இது முக்கியமாய் காடுசம்மந்தமானது.

ஸ்டோனிலோம் (Stony Loam) கல்சம்மந்தமான பசளைமண். இது முன்சொன்னசரளைமண்ணைக் காட்டிலும் பீடானது. இது விசேஷமாய் சுவல்பகாடாயும் புறம்போக்காயுமிருக்கும். கற்களை நீக்கினால் சாகுபடிக்கு கொண்டுவரலாம்.

களிப்பு நிலம். இதில் மணல், வண்டல், மக்கின இந்திரியவஸ்து இவைகளைக்காட்டிலும் களிப்பு விசேஷமாயிருக்கும். அதில் பிசுபிசுப்புள்ளதாயும் உழவு முதலியவைகளுக்கு கஷ்டமாயுமிருக்கும். இதில் முக்கியமாய் நெல், கோதுமை, மக்காச்சோளம், இவைகள் நன்றாய் விளையும்.

மேற்கூறிய விதங்களில் மணல், மணல்பாங்கு சம்மந்தமான பசளைமண் இவைகளுக்கு உரங்களை அதிகமாகவும் சாகுபடிக்கு சாகுபடியும் போடவேண்டியது அவசியம். இந்த நிலங்கள் சுவபாவமாய் சத்துள்ளதல்ல. ஆனதால், தழை தாள் தான்யசத்து அதிகமாயும் எளிதில் உணவாகக்கூடிய நிலமையிலும் இருக்கவேண்டும். இது விசேஷமாய் புஞ்சை பயிர்களுக்கு லாயக்கானவை. இது சம்மந்தமான செவ்வல் கரிசல் இரண்டிலும் மணிலாக்கொட்டை விசேஷமாய் பயிராகிறது. வண்டல், களிப்பு சம்மந்தமான மண்ணில் கொஞ்சம் தாள் சத்து உண்டு. இந்த நிலங்களுக்கு உரம்தாக்கும் சத்தியும் உண்டு. மணல்பாங்கு நிலங்களைப் போல் அடிக்கடி உரம்போடுவது அவசியமில்லை. இதில் தான்யசத்தும் சுண்ணாம்பும் குறைவாகவேயிருக்கும். உழுவதே கஷ்டமாயிருப்பதால் உரத்தை மண்ணோடு கலப்பது சிரமமாயிருக்கும். காற்று தண்ணீர் விசேஷமாய் பிரவேசிக்க விஷ்தால், ரஸாயன மாறு

தல்களும் சிற்றுயிர்களின் செய்கைகளும் ரொம்ப குறைவு சாஸ்த்ரீய உரம்.

## WHICH RAGAM SHOULD BE PRACTISED FIRST ?

### எந்தராகத்தை முதலில் அப்யாஸிப்பது ?

சென்ற 1912-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 31-தேதியன்று தஞ்சாவூரில் நடந்த ஸங்கீதவித்யாமகா ஜன ஸங்கதின் மீட்டிங்கின் ரிபோர்ட்டு வெளியாயிருக்கிறது. அந்த மீட்டிங்கில் ஸங்கீதம் கற்பவர்கள் முதலில் எந்தராகத்தை அப்யாஸிக்கவேண்டும் என்னும் விஷயத்தைப்பற்றி ஒருவாதம் உண்டாயிற்று. சென்னை மிஸ்டர் திருமலை நாயுடு ப்ரதமத்தில் சங்கராபரணத்தில் ஸரளி அப்யாஸம் செய்ய வேண்டுமென்று அபிப்ராயப்பட்டார். தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதர் இதை ஆக்ஷேபித்து, ப்ரதமத்தில் மாயாமாளவ கௌளராகமே சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று பல நியாயங்கள் சொன்னர் வேறு சிலர் முதலில் கற்றுக் கொடுக்கவேண்டியராகம் சங்கராபரணமென்றும் வேறு சிலர் மாயமாளவ கௌளமென்றும் சொன்னர்கள். மிஸ்டர் அப்ரகாம் பண்டிதர் அப்பொழுது தமது அனுபவத்தைப் பின் வருமாறு தெரிவித்தார்.

"சங்கராபரணத்தையே முதலில் அப்யாஸிக்க வேண்டுமென்று சிலரும், மாயாமாளவ கௌளத்தையே அப்யாஸிக்கவேண்டுமென்று பலரும் அபிப்ராயப்படுகிருர்கள். மிஸ்டர் பாக்ஸ் ஸ்ட்ராங்வே என்னும் அங்கிலேய கனவான், ஸங்கீத விஷயமாய் விசாரணைசெய்ய இவ்வூருக்கு வந்திருந்த ஸமயத்தில் என் வீட்டுக்கும் வந்து பிள்ளைகளை பாடும்படி கேட்டபொழுது மாயாமாளவ கௌளத்தில் கீர்த்தனை படித்தார்கள். அப்போது அவர் மிகுந்த ஆச்சரியப்பட்டு, "இது மைனர் டோன் உள்ள ராகமாயிற்றே, வெகு ஸுலபமாய்த் தவருமல் படிக்கிருர்களே" என்று சொன்னர். அதற்கு நான் "ப்ரதமத்தில் ஸரளி வரிசைகள் அப்யாஸம் பண்ணுவதே இந்த ராகத்தில் தான்" என்று சொன்னேன். அவர்கள் எப்படியென்று பாடிக்காட்டச் சொன்னர்கள். ரவை ஜாதி வரிசையில் ஸ்வரமாகவும் அகாரமாகவும் பிள்ளைகள் பாடிக்காட்டினவுடன், அவர், "நீங்கள் ஆரம்பத்திலேயே மைனர் ஸ்கேல்களை இப்படி அப்யாஸத் பண்ணுவதனுலேதான் மற்ற ஸ்வரங்கள் உங்களுக்கு லகுவாயிருக்கின்றன. மேஜர் ஸ்கேல் அப்யாஸம் பண்ணினபின் மைனர் ஸ்கேல் வருவது கொஞ்சம் கடினந்தான்" என்று சொன்னர். தென் இந்தியாவில் நம் கர்னாடக ஸங்கீதத்தில் சிறந்த எல்லா வித்வான்களும் ப்ரதமத்தில் மாயாமாளவ கௌளத்தையே படித்துத் தேறியிருப்பதனுல் அதுவே இருக்கலாமென்று நினைக்கிறேன்" என்று சொன்னர்.

விஜயநகரம் ஸம்ஸ்தான வித்வான் ப்ரம்மஸ்ரீ வெங்கடரமணதாஸ் அவர்கள் ஸரளி, ஜண்டவரிசை அலங்காரம், கீதம், ப்ரபந்தம், டாயம்முதலிய இருபத்திரண்டு வகையான அப்யாஸங்கள் மாயாமாளவ கௌளத்திலேயே அப்யாஸிக்கவேண்டுமென்று அனுமார் "அனுமத்கௌமதி" என்னும் நூலில் சொல்லியிருப்பதாகச் சில ஸூத்ரங்கள் சொல்லி, அதனுல் மாயாமாளவ கௌளமே ப்ரதமத்தில் அப்யாஸிக்கத் தகுந்ததென்று சொன்னர்.

அதன்மேல் இதுவரைக்கும் வழக்கமாயிருக்கும் மாயாமாளவ கௌளமே ப்ரதமத்தில் அப்யாஸிக்கத் தகுந்ததென்று ஸபையோர் அபிப்ராயப்பட்டார்கள்.

## PLOUGHING IN.

### மடித்து உழுதல்.

தற்காலம் பயிர்களுக்கு எருவாக பசுந்தாள் பயிர் வயலில் ஸாகுபடிசெய்து ஸுமாராய் வளர்ந்தபின் அதை மடித்து உழுது விடுகிருர்கள். மடித்து உழுதலைப்பற்றிப் பின்வருமாறு "கிருஷிகன்" எழுதுகிறது.

மடித்து உழுதல் என்ருல் பயிரைப்பிடுங்காமலே உழுது வயலில் அமிழ்த்து விடுவதுதான் என்று அர்த்தம். வயல் நிறைய குழைகளிருக்கும்பொழுது அதன் ஊடே உழுவது சாத்தியமில்லை என்று தோன்றலாம். சுமார் 3 அல்லது 4 அடி உயரம் வளர்ந்திருக்கும் செடிகளின்மேல் மரம் கட்டிக்கொண்டு வயலில் தண்ணீர் கட்டி பரம்படிப்பதுபோல் அடித்தால், நேராயிருக்கும் குழைகள் கீழே சாய்ந்துவிடும். அப்போது வயல் வரப்புகள் நிறைய தண்ணீர் நிற்கும்படி கட்டிவிட்டால் 2, 3 நாளைக்குள் சடம்புப்பயிரைப் போலொத்த பயிரின் தண்டுகள் அநேமாய் மக்கிவிடும். அப்போது உழவு செய்ய லேசாயிருக்கும். நாட்டுக் கலப்பைகொண்டு உழும்போது இச்செடிகள் கலப்பையில் சிக்கிக்கொள்ளுகிற வழக்கமும் உண்டு. இரும்புக்கலப்பைகள் கொண்டு உழுதால் அவ்வளவாய் சிக்காது.

# REVIEW OF THE PRESS.
# பத்ரிகை ஆராய்ச்சி.

## Arithmetic in Schools.

பாடசாலைகளில் கணிதபாடம்—'நல்லாசிரியன்' ஸஞ்சிகை ஒன்றில் ஒரு உபாத்யாயர் மூன்ருவது வகுப்புக் கணக்கைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிருர். முன் காலத்திலிருந்தவர்கள் எண்சுவடி, கீழ்வாய்லக்கம் என்ற நூல்களின் உதவியைக்கொண்டு சிறு எண் முதல் பெரிய எண்கள்வரையுமுள்ள கணக்குகளைப்போட்டு வந்தார்கள். இக்காலத்தில் இங்கிலீஷ் முறைப்படி கணிதம் கற்பிக்கப்படுவதில் பாடசாலைகளில் கணக்குஞான மறைந்திருக்கிறதென்கிருர்.

ஏனென்ருல், நன்ருய் எழுதப்படிக்கத் தெரியாத முதியோர்களை அடியில் வரும் கணக்குகளைக் கேட்டால் உடனே ஸரியாய் விடை சொல்கிருர்கள். சுத்தமாயும் ஒழுங்காயும் எழுதப் படிக்கத்தெரிந்த இக்காலத்து மாணுக்கர்களுக்கு இவ்விதமான பாண்டித்யர் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. தற்காலத்தில் இங்கிலீஷ் கல்வியில் அதிக பாண்டித்யம் உள்ளவர்களுக்குத்தான் டெஸிமல் முதலிய பலவகைக் கணக்குகள் தெரிந்திருக்கின்றன.

க்ராமப்பாடசாலை மாணுக்கர்கள் எக்கணக்கையும் செய்ய ப்ராக்ஷன், டெஸிமல் முதலிய வழிகளை ஸரியாய் அறிந்திருக்கவில்லை; பண்டைக்காலத்து எண்சுவடி முதலிய கணக்குகளையும் அறிந்திருக்கவில்லை. ஆகவே, அவர்கள் கணக்கு விஷயத்தில் குறைந்த ஞானமுடையவர்களா யிருக்கிருர்கள் என்கிருர். அவர் கூறும் கணக்கு வகைகளாவன:—

வட்டிக்கணக்கு, ஜலாதாரங்களைப்பற்றிய வெட்டுக்கணக்கு, கடைக்கணக்கு, விஸ்தீரணத்தைக் கண்டு கொள்ளும் அளவுக்கணக்கு, நெல் தீர்வைத் திட்டக்கணக்கு முதலிய சில்லரைக் கணக்குகள்.

இவைகள் எலிமெண்டரி ஸ்கூலுக்கு இன்றியமையாதவையாதலால், இவைகளுக்கு ஏற்ற "அட்டவணைகளும், தமிழ் எண்சுவடி முதல் வாயிலிருந்து முந்திரிவாய்வரையில் கீழ்வாய்லக்கம்முதலியவற்றை மனப்பாடம் செய்விக்கவேண்டும்." மேலும், இப்படித் தமிழ் வழியாயும் இங்கிலீஷ் வழியாயும் கலந்து சொல்லிக் கொடுத்து வந்தால் மாணவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டு வந்த பிறகு ஸௌகர்யப்படி அறிவை உபயோகித்து வ்ருத்தி செய்துகொள்ளலாம் என்கிருர்.

## Indian Fine Arts.

இந்தியாவின் சித்ரக்கலைகள்:—இந்தியாவின் நாகரீகத்தின் ஸாராம்சமாயுள்ளவைகளுள் இந்தியாவின் சித்ரக்கலைகளுமொன்று. சித்ரம் வரைதல், நாடகம் நடித்தல், ப்ரதிமைகள் செய்தல், ஸங்கீதம் பாடுதல், கட்டடவேலைகள் முதலியன சித்ரக்கலைகளாம். இவைகள் ஆங்கிலத்தில் 'பைன் ஆர்டஸ்' என்றுசொல்லப்படுகின்றன. இக்கலைகள் ஆதரிப்போரின்மையால் நம் நாட்டில் க்ஷீணித்து வந்தன. ப்ரிட்டிஷ் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்ட பிறகு மிகவும் கேவலமானஸ்திதியை அடைந்து விட்டன. தற்காலம் ஸங்கீதத்தைத் தவிர மற்றத் தொழில்கள் மறைந்து விட்டன. சித்ரக்கலைகள் கூடிய சீக்ரம் கௌரவமும் மதிப்பும் பெற்ற நிலைமையை அடையும் என்று சொல்லி சுதேசமித்திரன் ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறது.

இக்கலைகளின் க்ஷீணத்துக்கும் அழிவுக்கும் காரணங்களாவன:—

இவைகளின் அழிவு தேசத்துக்குப் பெரும் சேதமென்ற ஞானம் தற்கால இந்தியருக்குண்டாகவேயில்லை.

முக்யமாய் படித்த இந்தியர்களுக்கு சித்ரக்கலைகளில் ச்ரத்தையாவது ஞானமாவது உண்டானதேயில்லை. ஏனெனில், படித்தவர்கள் விசேஷமாய் உயர் குலத்தினரா யிருக்கிருர்கள். சித்ரக்கலைகளைக் கற்றுப் பயிலுகிறவர்களோ இந்த ஜாதியாரல்ல. அக்கலைகளைப் பயின்று ஜீவனேபாயங்களாக அனுஷ்டிக்கிறவர்கள் கீழ்ஜாதியார். தற்காலத்தில் கீழ்ஜாதியார் கல்வி இல்லாதவர்களாய்க் குற்றயிருடன் கிடக்கும் தங்கள் தொழில்களால் கிடைக்கும் வரும்படியைக் கொண்டு ஜீவித்துக்கொண்டிருக்கிறபடியால் அந்தத் தொழில்கள் வரவர இருந்தவிடந் தெரியாமற் போய்க் கொண்டிருக்கின்றன.

ஸமீப காலத்தில் ஆங்கிலேயர்கள் இக்கலைகளில்ச்ரத்தை யெடுத்துக்கொண்டு, அவைகள் மறைந்துபோவதைத்தடுக்க போட்ட கூச்குரலின் பயனுக, "ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ்" என்னும் சித்ர வித்யாசாலைகள் சென்னை, பம்பாய், கல்கத்தா, லாகூர் முதலிய ப்ர

தான நகரங்களில் கவர்ன்மெண்டாரால் ஸ்தாபிக்கப்பட்டு, சித்ரம் எழுதல், படம் வரைதல், ப்ரதிமைகள் செய்தல் ஆகிய தொழில்கள் தற்கால சாஸ்த்ர ரீதியாய் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இவைகளை உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த புதிய தொழிலாளிகள் பாதி தொழிலாசையாலும் பாதி தேசாபிமானத்தாலும் கற்றுப்பயில ஆரம்பித்திருக்கிறார்கள். ஸங்கீதம் கவர்ன்மெண்ட் ஸ்கூல்களில் கற்பிக்கப்படாவிட்டாலும் அதை ஐரோப்பிய ஸங்கீத மாதிரியாய் எழுத்துக்குட்படுத்தி ப்ரபலப்படுத்தவேண்டுமென்றஎண்ணம் உண்டாயிருக்கின்றது. தென்னிந்தியாவில் தஞ்சாவூர் பட்டணத்தில் மிஸ்டர் ஆப்ரகாம் பண்டிதர் இந்த விஷயமாய்ச் செய்யும் முயற்சிகளைத் தமிழர் அறிவார்கள். ஸ்ரீமதி ஸத்யபாலதேவி என்ற ஹிந்து ஸ்திரீ ஹிந்து ஐரோப்பிய ஸங்கீதங்களைக் கற்று, மேல் நாடுகளுக்குப் போய்வந்து பம்பாயில் ஒரு ஸங்கீதவித்யாசாலை ஸ்தாபித்து இந்தியா முழுமையும் ஹிந்து ஸங்கீதத்தைப்ரபலமாக்க முயன்று வருகிறார்.

வங்காளத்தில் நாடகவித்தை, படித்த வகுப்பாரால் விசேஷமாய் ஆதரிக்கப்பட்டு வருகிறது. மெஸ்ஸர்ஸ் டி.எல். ராய், ஜி.ஸி. கோஷ்போன்ற முதல் தரமான நாடகக்கவிகளும்,விசேஷ ஸாமர்த்யம் உள்ளநடிகளும் ப்ராபல்யமடைந்திருக்கிறார்கள். சென்னை ராஜதானியிலும் சென்னை ஸுகுணவிலாஸ ஸபையையும் பல்லாரி ஸரஸ விநோதினி ஸபையையும் சேர்ந்த நடிகள் படித்தவர்களே. "ஆயினும் இந்த வித்தைகள் இன்னும் அவைகளுக்குரிய பிராபல்யத்தை யடையச் சிலகாலம் செல்லும். அந்தக் காலம் வரும்போது அவைகளை புத்திமான்களான பல சிறுவர் கற்று கௌரவமாய் ஜீவனம் செய்வார்கள். அப்போது அத்தொழில்களை ஜனங்கள் ஈனத்தொழில்களென்று நினைக்காமல் மதிப்புக்கும் கௌரவத்துக்கும் உரிய தொழில்களென்று நினைப்பார்கள். மேல்நாடுகளில் நாடகம், ஸங்கீதம், சித்திரமெழுதல், பிரதிமை செய்தல், இத்தொழில்கள் செய்வோரை கவர்ன்மெண்டார் மதித்து, அவர்களுக்கு "ஸர்" போன்ற பெரிய கௌரவப்பட்டங்கள் கொடுப்பது சகஜமாயிருக்கின்றது. கவர்ன்மெண்டே இப்படி மதிக்கும்போது ஜனங்கள் மதிக்கக் கேட்பானேன்? இந்தியாவில் இந்தத் தொழில்கள் சமீபத்தில் இவ்விதமாய் கௌரவமும் மதிப்பும் பெற்ற நிலைமையை அடையுமென்று நம்புகிறோம்" என்று சுதேசமித்திரன் முடிக்கிறது.

## Snakes and Snake Bite.

**பாம்பும் பாம்புக்கடியும்:**—மழை காலங்களில் ஸர்ப்பங்களுக்கு ஸரியான இரையகப்படுவதில்லையாதலால், வீட்டில் ஸகஜமாயுள்ள பல்லி, எலி, புழு முதலிய இரைகளை நாடி, அவைகள் வீட்டிற்கு வருகின்றன. இந்த ஸமயங்களில் இடையூறாயிருப்பவர்களை அவைகள் கடிக்கின்றன. நம்முடைய தேசத்தில் பாம்புக்கடியால் மாண்டு போகிறவர்கள் ஸங்க்யை அதிகம். ஆகையால் இப்படிப்பட்ட மரணங்களைக் குறைப்பதற்கு வழிகளைத்தேடுவது அவச்யம். இது விஷயமாக ஒரு மாற்றுப் பத்ரிகையில் ஸர்ப்பங்கள் வீடுகளை அண்டாமல்செய்வதற்கு வேண்டிய யுக்திகளையும், அவைகள் தீண்டினதாலுண்டாகும் அடையாளங்களையும், ஸர்ப்பக்கடி சிகித்ஸையையும் கூறியிருக்கிறது.

**ஸர்ப்பம் வீடுகளை யண்டாமலிருக்க யுக்திகள்.**

"குதிரைவாலினுற் செய்யப்பட்ட கயிற்றை நாகபாம்புகளைப்போன்ற பல விஷப் பாம்புகள் கடந்துசெல்வதில்லை. பக்கிரிகள் அவ்வகைக்கயிறு எப்பொழுதுங் கொண்டு திரிந்து தாம் படுக்கும்போது அதைச் சுற்றிப் போட்டுக் கொள்வதுண்டு. அக்கயிற்றின்மயிர் குத்துவதாற் சர்ப்பங்கள் அதற்கு விலகிக்கொள்ளுகின்றன. ஆட்டுரோமத்தினாலும் கரடுமுரடான தும்புகள் (கயிறுகள்) ரோமங்களினாலும் ஆக்கப்பட்ட கம்பளங்களும் பாய்களும்சர்ப்பங்களைத் தடுப்பவைகளாயிருக்கின்றன. சர்ப்பங்கள் உட்பிரவேசிக்கக் கூடியபாதைகளெங்கும் கூர்முனைகளுள்ள பொடிக்கற்களை ஒரு விசாலமான குவியலாகக் குவித்து வைப்பதும், கடுமையான காட்டுக்கற்களில் நடமாடிப் பயின்றவைகளல்லாத பெரிய சர்ப்பங்களைத் தடுப்பதாகும்.

"அக்கினித் திராவகம், எரியும் வெண்காயத்தோல் எரியும்மஞ்சள் ஆகிய இவைகளின் மணமும் சர்ப்பங்களுக்கிணக்க மற்றவைகளாம்."

அந்தப் பத்ரிகை ஸர்ப்பங்களில் பகல் நடமாடுகின்றவைகள் தீங்கற்றவைகளென்றும், இரவில் நடமாடுகின்றவைகள் விஷமுள்ளன வென்றும், படமுள்ள பாம்பின் விஷம் நரம்பையும் படமில்லாததின் விஷம் இரத்தத்தையும் தாக்குகின்றனவென்றும் சொல்கிறது.

**ஸர்ப்பந் தீண்டினதற்கு அடையாளங்கள்**

"குண்டூசிக் குற்றுப்போன்ற இரண்டு பற்களின்

அடையாளம், கடிபட்டபகுதி விறைத்தல், அவயவங்கள் கனத்தல்,நாக்கை உள்வாங்கல்போன்ற உணர்ச்சி. நாகந் தீண்டினாற் சீக்கிரம் அறிவுமயக்கமுண்டாகும், மற்றவைகள் தீண்டினால் கடைசி நிமிஷம் வரைக்கும் அறிவு நல்லாயிருக்கும்.”

சிகித்ஸை.

“கடிவாய்க்கு ஆறு அங்குல தூரத்தில் இரண்டு கட்டுகள் உடனேகட்டவேண்டும். கடிவாயின் நீளப்பக்கமாக சற்றேயாழமாகக்கீறி, பெரு விரலாலும் ஆட்காட்டிவிரலாலும் அதை நெரித்து உறந்து, காயத்தை நன்றாகச் சுட்டுவிடவேண்டும். நெருப்பெழக்காய்ச்சிய இருப்புக்கோலாற் சுடுவது உத்தமம். கடிபட்ட ஆளைப்படுக்கவிடாது இருக்க அல்லது நடக்கச் செய்யவேண்டும். மயக்கந்தோற்றினால் வெந்நீரைத் தலையில் ஊற்றவேண்டும். திக்கு முக்கடைத்தாற் தொண்டையிலுள்ள சளியை விரல்களால் எடுத்துப்போடவேண்டும். படமில்லாச்சர்ப்பந் தீண்டினதானால் அரை மணித்தியாலத்துக்கொருமுறை ஒரு திரும் நன்னாரிச்சாரம்கொடுத்து மஞ்சள் மாக்கொண்டு சரீரம் முழுவதையும் பலமாகத் தெய்க்க வேண்டும். மற்றுஞ் சிகிச்சைகள் தக்க வைத்தியர் சகாயத்தோடு நடத்தப்படுவது புத்தி.

“இந்துவைத்தியர்க்கு வெள்ளலரிவேர்த் தூளில் அதிக நம்பிக்கையுண்டு. அவர்கள் அடிக்கடி நெய்யிலே இரண்டு கிறேன் தூளைத் தின்னக்கொடுப்பார்கள்.”

**The Improvement of Agriculture.**

**விவஸாய அபிவ்ருத்திக்குள்ள ஸாதனங்கள்.**— நம்தேச ஜனத்தொகையில் முக்காற் பங்குக்குமேலேயே குடிகள் விவஸாய ஜீவனம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் விவஸாய அபிவ்ருத்தியே நம் முக்ய நோக்கமாயிருக்கவேண்டும். மேலும் இது வ்ருத்தியடைந்தாலொழிய நம் நாட்டிலுள்ள வ்யாபாரமும் பல தொழில் முயற்சிகளும் வ்ருத்தியடையா.

“விவேகப்போதினி” பத்ரிகையில் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் திவான் பேஷ்கார் உத்யோகம் வகிக்கும் தர்மரங்கராஜு அவர்கள் விவஸாய அபிவ்ருத்தி வழிகளைப்பற்றி அனுபவபூர்வமாய் எழுதியிருக்கிறார். நம்முடைய தேசத்து விவஸாயிகள் உழுது பயிரிடும் வழக்கங்களில் சில சீர்திருத்தங்கள் செய்து கொண்டால், அதனால் அவர்களுக்கு உண்டாகும் அனுகூலங்கள் இன்னவை யென்றுசொல்லுகிறார்.

சீர்திருத்தத்தின் அனுகூலங்கள்.

“நாம் நாட்டுக்கலப்பையால் உழுதுகிளறும் விஸ்தீரணத்தைப் பார்க்கிலும் சீர்திருத்திய ஒருவித நாட்டுக்கலப்பையால் கால்நடைகளுக்கு அதிக சிரமமில்லாமல் மூன்றுமடங்கு அதிக நிலத்தைக் கிளறி அந்த மண்ணைக் கீழ்மேலாய்ப் புரட்டக்கூடுமானால் அது எத்தனை சிலாக்கியம் ! புன்செய் நிலங்கள் ஏராளமாக விதைப்பாக வேண்டிய தருணத்தில் மழை பெய்துவிட்டால் நமது நாட்டுக்கலப்பையைக்கொண்டு, நாள் ஒன்றுக்குக் கால் ஏக்கர் சரிவர உழக்கூடும் என்று வைத்துக்கொண்டாலும், நிலங்கள் ஈரம் காக்கும் சுமார் 8 தினங்களில் 2 ஏக்கருக்குமேல் உழவுசெய்ய முடியாமல் போகும். சீர்திருத்திய சிறு கலப்பை ஒன்றை உபயோகிப்பதால் அந்த 8 தினங்களில் 6 எக்சர் உழுது முடிக்கக்கூடும் என்பதன்றி, அந்த நிலம் மிகவும் ஆழமாய் இடைகட்டையின்றி உழவாகிக் கீழ்மண் மேல் மண்ணாய்ப் புரண்டு காற்றாடிப் பண்படுகிறது. மேலும் விதைப்புக்கு அநுகூலமான பருவகாலம் விவசாயிகளுக்கு அநேக நாட்களில் கிடைப்பதில்லை. முதல் நாள், நிலங்களெல்லாம் பெரும்பதமாயிருக்கும். அதில் விதைக்கமுடியாது. மறுநாள் விதைப்புக்குப் பருவம் வந்துவிடும். அன்றைக்கு அந்தக் கிராமத்தில் 100 ஏர்களிருக்குமானால் சுமார் 100 ஏக்கர் நிலம் விதைத்துமுடிப்பார்கள். மறுநாள் கடும்பதமாய்விடும். அன்றைக்கும் சிலர் விதைப்பார்கள். அதற்கு மறுநாளோ விதைப்புக்கு வேண்டிய ஈரம் நிலத்திலிருக்காது. இவ்விதமாக விதைப்பு மாதங்களில் விதைப்புக்கு அநுகுணமான பட்டமும் பதமும் கிடைப்பது மிகவும் துர்பலம். அப்படிக் கிடைக்கும் தருணங்களை நாம் சரியாய் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டியது நமது கடமை. அப்படி உபயோகப்படுத்திக்கொள்வதற்கு விதைப்புக்காலத்துக்கு முன் கூட்டியே நிலங்களை உழுது புழுதியாக்கி வைத்திருக்கவேண்டும். அப்படிப் புழுதியாயிருக்கும் நிலத்தில் மழைபெய்தவுடன்விதைத்து பல்மரம் என்னும் ஒரு சிறுகருவியைக்கொண்டு பரம்படித்தால் நாட்டுக்கலப்பை கொண்டு விதை மூடுவதைப் பார்க்கிலும் 6-மடங்கு அதிக விஸ்தீரணத்தில் விதை மூடலாம். இதனால் 100-ஏக்கர் விதைக்

கக்கூடிய ஒரு நாளில் 600-ஏக்கர் விதைத்து முடிக்கலாம். இது எத்துணை பெரிய அநுகூலம் !"

மிஸ்டர் ராஜு நம்நாட்டில் சீர்திருத்தங்கள் பரவக் குறுக்கே நிற்கும் இடையூறுகளிவையென்றும், அவைகளை நிவர்த்திக்கச் செய்யவேண்டிய முயற்சிகளிவை யென்றும் தெளிவாய் எடுத்துரைத்திருக்கிறார்.

இடையூறுகள்.

1. அனேக விடங்களிலுள்ளகிருஷிகருக்கு இந்த நூதன முறைகள் உண்டென்பதே தெரியாது.

2. அவைகளைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தாலும், அந்தக் கருவிகளையும் அவற்றின் வேலையையும், நூதனமுறைகளைக் கையாடும் இடங்களிலுண்டாகும் பயன்களையும் அவர்கள் தங்கள் கண்களால் பார்த்திருக்கமாட்டார்கள். சிலர் ஏதோ ஒரு காலத்தில் பார்த்து அவைகளின் ஏற்றத்தையும் விசேஷ அநுகூலத்தையும் வியப்புடன் ஒப்புக்கொள்வார்களானாலும், அவையெல்லாம் அபரிமிதமான பணச்செலவினால் உண்டான பயன்களென்றும், அம்முறைகள் தம்மைப்போலுள்ள ஏழைக்குடிகளுக்கு உபயோகப்படமாட்டாவென்றும் உளறிவிட்டுப் போவார்கள்.

3. சிலவிடங்களில் விசேஷப்பயிர்களை உண்டாக்கினால் மாடுகள் தின்று அழித்துவிடும் என்றும், கள்ளர்கள் இராக்காலங்களில் அந்தப் பலனைத் திருடிக்கொண்டு போய்விடுவார்களென்றும், சொல்வார்கள்.

4. அனேகர் விவசாய விருத்தி முறைகளை அநுஷ்டிப்பதற்கு அவசியமான பணம் தங்களிடத்தில் இல்லை என்று எளிதில் சொல்லிக் கழித்து விடுகிறார்கள்.

5. இப்படியாக அறிவீனம், அநுபோகமில்லாத காரணம், நூதன முறைகளைப்பற்றிய அஞ்ஞான அபிப்பிராயம், தங்கள் முன்னோர் செய்த காரியங்களை மாற்றுவது பிசகென்றஅபிப்பிராயம்,விவசாயவிருத்தி நடத்தும் சாதனங்கள் இல்லாமை, விடாமுயற்சி யில்லாமை, ஊக்கக் குறைவு, 'உள்ளதே போதும்' என்னும் திருப்தியுள்ளவர்களாயிருப்பது, ஒற்றுமையும் கூட்டுறவும் இன்னதென்றே தெரியாதவர்களாயிருப்பது முதலியவைகளாம்.

இடையூறுகளை நிவர்த்திக்கும் மார்க்கங்கள்.

1. நமது நாட்டிலுள்ள பல ஜில்லாக்களிலும், அவைகளின் பல தாலுக்காக்களிலும், அந்தத் தாலுக்காக்களிலுள்ள பற்பல கிராமங்களிலும், உள்ள நிலத்தின் நேர்மை, மண்சாரம், நீர்வரவு, மழையளவு, சீதோஷ்ணம், குடிநெருக்கம், போக்குவரவு சௌகரியம், வியாபார ஸ்தலங்களின் நிலைமை என்னும் விவசாய சம்பந்தமான பல விஷயங்களைப்பற்றியும் ஆங்காங்குள்ள விவசாய பழக்கங்களையும் விவசாய முறைகளைப்பற்றியும், ஆங்காங்கு உபயோகிக்கப்படும் விவசாய கருவி காரணங்களைப்பற்றியும் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

2. அப்படி ஆராய்ந்தறிந்த பல விஷயங்களையும் திரட்டி எல்லாருக்கும் தெரியும்படி பிரசுரப்படுத்த வேண்டும்.

3. இவ்விதமாக ஒரு கிராமத்தின் விவசாயசம்பந்தமான பல விஷயங்களையும் தெரிந்துகொண்டபின் அக்கிராமத்தின் விவசாய முறைகளையும் பழக்கங்களையும் கருவிகாரணங்களையும் எப்படி விருத்தி செய்யக்கூடும் என்பதை ஆலோசித்துக்கண்டுபிடிக்க வேண்டும்.

4. அப்படிக் கண்டு பிடித்தபின் அந்தக்கிராமத்திலுள்ள கிருஷிகருக்கு அவ்விஷயங்களைத் தெரியச் செய்து, அவர்களில் சிலரைக்கொண்டாவது இந்த நூதனமுறைகளை அநுஷ்டிக்கச் செய்யவேண்டும். ஏனென்றால் நமது தேசத்துக் கிருஷிகர் "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்னும் பழமொழிப்படி புஸ்தகத்தில் வாசித்ததை மட்டும் வைத்து ஒரு காரியமும் செய்யத் துணியார்கள். யுக்திக்கும், புத்திக்கும், அநுபோகத்துக்கும் பொருத்தமான விஷயங்களை அவர்கள் எளிதில் செய்வார்கள். மற்றொருவர் ஒரு முறையை நடத்தி சித்திபெற்றதை ஒருவர் பார்த்தறிந்தால் அந்தப்படி அவரும் நடத்தத்தடையே இருக்காது."

# BOYS' SECTION.
## பையன்கள் பகுதி.

### Indian Name for a Turkish Village.

ஒரு துருக்கி க்ராமத்துக்கு இந்தியப் பெயர்.—துருக்கி பால்கன் யுத்தத்தில் காயமடைந்த துருக்கியர்களுக்கு சிகித்ஸை செய்வதற்காக இந்தியாவிலிருந்து ஒரு வைத்யக்கூட்டத்தார் துருக்கிக்குப்போயிருந்தார்கள். அவர்கள் அங்கே செய்த உபகாரத்தின் ஞாபகார்த்தமாக துருக்கி ராஜாங்கத்தார் ஆமர்லி என்னும் க்ராமத்துக்கு ஹிந்தியா'க்வி என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

### Becoming Disciples to Sadhus.

ஸாதுக்களிடம் சிஷ்யர்களாதல் :—வடக்கே ஜோட்பூர் என்று ஒரு ஸ்வதேச ராஜ்யம் இருக்கிறது. அங்கேயுள்ள ஸாதுக்கள் (ஸன்யாஸிகள்) பேருக்குத்தகுந்த யோக்யதையில்லாமலும், முழுச்சோம்பேறிகளாயும் இருக்கிறார்களாம். இதனால் அந்த ஸமஸ்தானத்து மகாராஜா, 12 வயஸுக்குள்பட்ட சிறுவர்கள் ஸாதுக்களிடம் சிஷ்யர்களாகப் போகக்கூடாதென்று உத்தரவு செய்திருக்கிறாராம்.

### The World's Wealthiest Man.

ரொம்பப்பெரியபணக்காரர்:-ஸ்டாண்டர்ட்ஆயில் கம்பெனியென்று பெயருள்ள கெரொஸின்ஆயில் கம்பெனியின் ஸொந்தக்காரராகிய ஜான் டி ராக்பெல்லரும் இங்கிலண்டில் பெரிய பாங்கி வ்யாபாரம் செய்யும் ராத்ஸ்ச்சைல்ட் குடும்பத்தாரும் உலகத்தில் மற்றெல்லாரையும்விட ரொம்ப தனவந்தர்கள் என்றுசொல்லுவது வழக்கம். ஆனால் ரஷ்யா தேசத்து ஸார் சக்ரவர்த்தி இவர்களையும் விட பணக்காரர் என்று தெரியவருகிறது. ராஜாங்க வரும்படியிலிருந்து ஒவ்வொரு வருஷமும் அவருடைய குடும்பச்செலவுக்காக 3கோடியே 75 லக்ஷம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகையில் பாதிக்கு மேல் சக்ரவர்த்தி தமது ஸொந்தச் செலவுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாமாம். மேலும், ஸாருக்கு ஸொந்தமாய் ஐரோப்பிய ரஷ்யாவில் ஏராளமான நிலம் இருக்கிறதாம். அந்த நிலத்திலிருந்து அவருக்கு வருஷம் $7\frac{1}{2}$ கோடி ரூபாய் வருமானம் வருகிறது. மேலும் ஸைபீரியாவில் அவருக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்கள் அபிவ்ருத்தியடையாமல் இருக்கின்றன. அப்படியிருந்தும் அந்த நிலங்களிலிருந்து $1\frac{1}{2}$ கோடி ரூபாய் வருமானம் வருகிறது.

ஸார் சக்ரவர்த்திக்கு ஒவ்வொருவருஷமும் கிடைக்கும் வரும்படி, இவருடைய மிச்சப்பணத்திலிருந்து வரும் வட்டியைச்சேர்த்து ஸுமார் 10 கோடியே 25 லக்ஷம் ரூபாய் இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

ஸார் சக்ரவர்த்திக்கு நான்கு பெண்கள் உண்டு. அவர்களுக்காக ஸார் சக்ரவர்த்தி ஏராளமான பணம் தனியாக எடுத்து வைத்து விடுகிறாராம். அந்தப் பெண்களைக்கல்யாணம் செய்து கொள்ளும் ராஜகுமாரர்கள் ரொம்ப ஸுகமாய் வாழக்கேட்பானேன்?

### Land and Water Areas of the World.

பூமியின் நீர் நில பாகங்களின் விஸ்தீர்ணம்.—பூமியின் மேற்பாகம் நீரும் நிலமுமாக இருக்கிறது. இதுவரையில் நீர்பாகம் பூமியின் மேற்பரப்பினுடைய விஸ்தீரணத்தில் 4-ல் மூன்று பாகம் என்றும், நிலப்பாகம் 4-ல் ஒருபாகம் என்றும் சொல்லிவந்தார்கள். தக்ஷிண, உத்தர த்ருவங்களில் உள்ள நிலம் நீர்பாகங்களின் அளவு பூகோள சாஸ்த்ரிகளுக்கு நன்றாய்த் தெரியாதிருந்தபோதுமேலே சொல்லப்பட்ட கணக்கு ஏற்பட்டது. ஆனால் சென்ற சில வருஷங்களாக த்ருவங்களுக்குஅநேகம்பேர் போய்ப்பார்க்கவேஅங்கே நிலப்பரப்பு அதிகமாக இருக்கிறதென்று தெரியவந்தது. தக்ஷிண, உத்தர த்ருவங்களில் இதுவரையில் நடந்த ஆராய்ச்சிக்களால், பூமியினுடைய விஸ்தீரணத்தில் 7-ல் மூன்றுபாகம் நிலம்என்றும், மீதியாயுள்ளது நீர் என்றும் தெரியவருகிறது. வட அமெரிக்கா ஸைபீரியா ஆகியஇந்ததேசங்களின் வடக்கேயுள்ள பூமியை ஆராய்ச்சி செய்தால் ஷை கணக்கு இன்னும் மாறும் என்று சொல்லலாம்.

### Prize for Puzzle Solution.

புதிர் அவிழ்ப்பதற்கு வெகுமதி.—

1. 45 என்னும் எண்ணை 4-பாகமாகப்பிரிக்க வேண்டும். முதல் பாகத்தோடு 2-ஐ க்கூட்டினால் 10-விடையாக வரவேண்டும். 2-வது பாகத்திலிருந்து 2-ஐ க்கழித்தால் 10-விடையாக வரவேண்டும். 3-வது பாகத்தை 2-ஆல் பெருக்கினாலும், 4-வது

பாகத்தை 2-ல் வகுத்தாலும் 10-தான் விடையாக வரவேண்டும்.

2. 225-ஐ சில பாகங்களாகப் பிரிக்கவேண்டும். எத்தனை பாகமாகப்பிரித்தாலும் பாதகமில்லை. ஆனால் அவைகளில் ஒன்றுமுதல் ஒன்பது வரையில் உள்ள ஒன்பது எண்களும் வந்திருக்கவேண்டும். ஒரு தடவை வந்த எண் மறுபடியும் வரக்கூடாது.

இந்த இரண்டுகணக்குகளும் ஸரியான விடைகளை யார் முதலில் எழுதியனுப்புகிறாரோ அவருக்கு 'வேலையின் கூலி' என்னும் நாவலின் ப்ரதி ஒன்று இனாமாக அனுப்பப்படும்.

**Paying the Bathers.**

**ஸ்நானம் செய்கிறவர்களுக்குப் பணம் கொடுப்பது.**—ஹிந்துக்கள் ஸாதாரணமாய் தினந்தோறும் ஸ்நானம் செய்கிறவர்கள். ப்ராமணர்களில் சிலர், காலையிலும், சிலர் காலை மாலை இரண்டு வேளைகளிலும் ஸ்நானம் செய்கிறார்கள். மற்ற ஜாதியார்களில் ரொம்பக் கடுமையாகப் பகலில் வேலைசெய்கிறவர்கள் தங்கள் தேகத்தில் அழுக்கு வியர்வை ரொம்பப் படிந்திருக்கும் என்று, வேலை முடிந்தபின் ஸாயந்திரம் ஸ்நானம் செய்வது வழக்கம். இந்தியாவில் இப்படியிருக்க, அமெரிக்காவில் கடுமையாக வேலை செய்யும் கூலியாட்கள் தினந்தோறும் ஸாயந்த்ரம் ஸ்நானம் செய்வது கிடையாது என்று தோன்றுகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த பிலடல்பியாவில் உள்ள ஒருகம்பெனியார் தங்களிடம் வேலை செய்பவர்கள் ஸாயந்திரம் ஸ்நானம் செய்வதாயிருந்தால் அப்படி ஸ்நானம் செய்யும் ஒவ்வொருவருக்கும் 7½ அணா கொடுக்கிறார்களாம். இப்படிக் கொடுப்பதைப் பெறுவதற்கு ஷை கம்பெனியிலுள்ளவர்களில் மூன்றில் இரண்டுபாகம் பேர் ஸம்மதித்திருக்கிறார்களாம். இப்படிப் பணம் கொடுப்பதேயல்லாமல் ஸ்நானம் செய்வதற்குவேண்டிய ஸோப்பு, சவுக்கம், முதலியவைகளும் கொடுக்கிறார்களாம். ஒவ்வொருநாளும் ஸ்நானம் செய்ததும், அங்குள்ள ஒரு அதிகாரியிடம் ஷை தொகைக்கு ஒரு செக்கு வாங்கிக்கொண்டு வாரக்கடைசியில் ஷை செக்குக்குப் பணம் பெறுகிறார்கள். இப்படிச் செய்வதால் வேலையாட்கள் தேக ஸௌக்யம் பெற்று ஜீவிப்பார்கள என்று எண்ணி இந்த ஏற்பாட்டை அனுஷ்டிக்கிறார்களாம். அடிக்கடி ஸ்நானம் செய்வதால் ரொம்பப் பலன் உண்டென்பதை இதை வாசிக்கும் சிறுவர்கள் அறிந்து கொள்ளலாம்.

**The Dollar "Anecdote."**

**"டாலர்" ஸம்பந்தமான ஒரு கதை.**—வட அமெரிக்காவில் உள்ள ஐக்யமாகாணங்களிலும், மெக்ஸிகோ தேசத்திலும் "டாலர்" என்ற நாணயம் வழங்குகிறது. ஐக்யமாகாணத்து நாணயம் ஸுமார் ரூ 3-2-0 மதிப்புள்ளது. மெக்ஸிகோ நாணயம் ஸுமார் ரூ 3-3-0 மதிப்புள்ளது.

சில காலத்துக்கு முன்னால் சில காரணங்களால் இந்த நாணயங்களின் மதிப்பு வித்யாஸமாக விருந்தது. அதாவது, ஐக்யமாகாணத்து டாலர் ஐக்யமாகாணத்தில் 3-ரூபாய் மதிப்புள்ளதாகவும், மெக்ஸிகோவில் 2 ரூபாய் 14 அணாவாகவும் இருந்தது. அதேமாதிரி மெக்ஸிகோ டாலர் மெக்ஸிகோ தேசத்தில் 3 ரூபாய் மதிப்புள்ளதாகவும் ஐக்யமாகாணங்களில் 2 ரூ 14 அணாவாகவும் இருந்தது. மெக்ஸிகோ நாட்டுக்கும் ஐக்யமாகாணங்களுக்கும் இடையில் ஒரு நதியோடுகிறது. அந்த நதியின் இருபுறத்திலும் இரண்டு க்ராமங்கள் இருக்கின்றன. பணமதிப்பைப்பற்றிய மேலே சொன்ன வித்யாஸத்தையறிந்த ஒரு மெக்ஸிகோ வாலி தன்னிடம் இருந்த ஒரு மெக்ஸிகோ டாலரை எடுத்துக்கொண்டு மெக்ஸிகோவிலுள்ள க்ராமத்து சாராயக்கடைக்குப்போய் 2 அணாவுக்கு சாராயம் வாங்கிக் குடித்துவிட்டு பாக்கியாகிய 2 ரூ 14 அணாவுக்கு ஒரு ஐக்யமாகாண டாலரைப் பெற்றுக்கொண்டு, ஆற்றின் பாலத்தைக்கடந்து ஐக்யமாகாணக்ராமத்துக்குப் போய் 2 அணாவுக்கு சாராயம் வாங்கிக்குடித்துவிட்டு ஷை ஐக்யமாகாண டாலரைக் கொடுத்து பாக்கி தனக்குச் சேரவேண்டிய 2 ரூ 14 அணாவுக்கு ஒரு மெக்ஸிகோ டாலரைப் பெற்றுக்கொண்டு மறுபடியும் பாலத்தைக்கடந்து மெக்ஸிகோ க்ராமத்துக்குப் போனான். அங்கு முன்போல் செய்து மறுபடியும் ஐக்யமாகாணத்துக்கு வந்து முன்போலவே செய்து இப்படியே அநேகந்தடவை செய்து ஒரு காசும் தனக்குச் செலவில்லாமல் ஏராளமான சாராயத்தைக் குடித்தானும். அன்றிரவு மிதமிஞ்சிக்குடித்ததனால் தன்னறிவு தெரியாமல் தெருவில் கிடந்தானும். அவன் மடியில் ஒரு மெக்ஸிகன் டாலர் இருந்ததாம். ஒரு தேசத்திலுள்ள நாணய மதிப்பு மற்ற தேசங்களிலுள்ள நாணயங்களின்மதிப்புக்கு ஒத்து வராவிட்டால் கெடுதியுண்டாகும் என்பதற்கு உதாரணமாக ரெண்டெளல் என்னும் ஜட்ஜ் ஒருவர் ஷை கதையைச் சொன்னாராம்.

# LADIES' SECTION.
## ஸ்த்ரீகள் பகுதி.

**Bringing up Children.**

குழந்தைகளை வளர்த்தல்.—1 தாய்மார்கள் தங்கள்குழந்தைகள் பலஹீனமுள்ளவைகளாயிருந்தால் குளிர்சாலத்தில் அவைகளை குளிர்ந்தஜலத்தில் குளிப்பாட்டக்கூடாது.

2. அவைகளுக்குப் பால் கொடுக்கும்பொழுது பாத்ரத்திலுள்ள பால் அதிக நாழிகை அதிலிருந்திருக்கும் பக்ஷத்தில் மெதுவாக ஊற்றியே கொடுக்க வேண்டும். லோட்டாவின் அடியிலுள்ளபாலை குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடாது. ஏனெனில் இப்பாலைக்குடிப்பதால் குழந்தைகளுக்கு ஜன்னிபாதசுரம் (டைபாய்ட் பீபர்) உண்டாகலாமாம்.

3. குழந்தைகளில் தலைமயிரைவாறும் பொழுது நுனியை சிக்கெலெடுத்துபின் மேலே சீவவேண்டும். இப்படிச்செய்வதால் சிக்கு சுலபமாய் எடுக்க முடியும்.

4. குழந்தைகளின் கைகளில் பாலுண்ணியிருந்தால் ஒருபைண்ட் ஜலத்தோடு ஒருட்ராம் ஜலம்கலந்த நைட்ரிக் ஆஸிட்த்ராவகத்தைக் கலந்து வைத்துக்கொண்டு, உண்ணிமீது துளிதுளியாய் வைத்தால் உண்ணி கருகிப்போய்விடும். நைட்ரிக்ஆஸிட் ஒன்பது அக்னித்ராவகம். அதுகடும் விஷமானதால், அதைக்கையாடுவதில் மிகவும் ஜாக்ரதையாயிருக்க வேண்டும்.

**Women as Advisers.**

மனைவியின் மந்த்ரித்வம்.—ஸ்த்ரீபுத்தி ப்ரளயாந்தக, என்பது ஒருபழமொழி. அதாவது, ஒருவன் ஸ்த்ரீபுத்தியைக்கேட்டால் அவன்மிகவும் கெடுதலடைவான் என்றர்த்தம். இதற்குதாரணமாக, ஸ்ரீராமர் ஸீதைவார்த்தையைக்கேட்டு மானைத்தேடிச் சென்றதையும், தசரதன் கைகேசிவார்த்தையைக் கேட்டதையும் இன்னம் சிலவற்றையும் சொல்வது வழக்கம். இந்த அபிப்ராயம் நாளதுவரையில் வெகுவாய் மாருமலே யிருந்துவருகிறது. ஒரு ஸ்திரீயானவள் தனது புருஷனுடைய நன்மையையே நாடி ஏதாவது ஒருயோசனை சொல்லி, அந்தயோசனையைப் புருஷனும் கேட்டு நடந்து அப்படியவன் நடப்பது அவன் பெற்றோர் ஸகோதரிகளுக்குப் பிடிக்காமலிருந்தால் ஸாதாரணமாய் அவர்கள் அதாவது அந்தஸ்த்ரீயினுடைய மாமியார்,நாத்தனூர் முதலியவர்கள், அந்த ஸ்த்ரீயின் பேச்சைக்கேட்டு அவள்புருஷன் அப்படிச்செய்கிருன் என்று சொல்வது வழக்கம். மேலும் ஸ்த்ரீகள் ஸ்வயநலம் பாராட்டி தங்களுடைய பிறந்தகத்தாருடைய நன்மையையே ஸாதாரணமாய் கோறுவதாகவும், புக்ககத்திலுள்ள மாமியார், மாமனூர், நாத்தனூர் முதலியவர்களின் நன்மையைக் பெரும்பாலும் கோறுவதில்லையென்றும் சொல்லப்பட்டு வருகிறது. ஆனல் ஸ்த்ரீகள் எல்லாரும் இப்படிப்பட்ட குணமுடையவர்கள் என்று சொல்லமுடியாது. கல்விநலமும் உயர்ந்த நற்குணங்களும் வாய்ந்த அநேகஸ்த்ரீகள் தங்கள் புருஷர்களுக்கு உசிதமான யோசனைகள் சொல்லுகிருர்கள் என்றுசொல்லலாம். பம்பாய் ஹைகோர்ட்டில் ஜட்ஜாயிருந்த ஸர்நாராயண சந்த்ரவர்க்கர் தமது வேலையினின்றும் நீங்கின பிறகு, இந்தூர் ஸமஸ்தானத்து மகாராஜா அவரை தமது ஸமஸ்தானத்து திவானக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். ஸர் நாராயணர் அவ்வேலைக்குப்போக சற்றுத்தயங்கினூராம். ஆனல் அவர் மனைவி, லேடி சந்த்ரவர்க்கர், இது விஷயமாய் யோசனை சொல்லி அந்தவேலையை ஒப்புக்கொள்ளும்படி சொன்னூராம். அந்த ஸந்தர்ப்பத்தைப்பற்றி ஸர் நாராயணர் பம்பாயில் ஸமீபத்தில் ஒருப்ரஸங்கம் செய்தபோது பின்வருமாறு சொன்னூர்.

"நான் மகாராஜாவை நேரில்போய் பார்த்தபோது மகாராஜா அவர்கள், இந்தக்கார்யம் (அதாவது ஸமஸ்தானத்து திவான் வேலைபார்ப்பது) எனக்கு ஏற்பட்ட ஒரு கடமையாகும் என்பதை வற்புறுத்திக்கூறினூர். என்றாலும் நான் சற்றுத் தயங்கிக்கொண்டிருந்தேன். ஆனல் எனதுமனைவி நான் வேலையை ஒப்புக்கொள்ளாமல் மறுப்பதில் இஷ்டப்படவில்லை. எனது வாழ்நாளின் ஒருரகஸ்யத்தை வெளியிட்டுச் சொல்கிறேன். ரொம்ப பொறுப்பானவும் முக்யமானவுமான காலங்களிலெல்லாம் நான் எனது மனைவியின் சொல்லைத்தட்டாமல் அவள் சொன்னபடியே நடந்து வந்திருக்கிறேன். அவளுக்கு உள்ள பதட்டமில்லாத்தைர்யமும், நுட்பமான அறிவும், ஸ்வபாவமாகவே ஸன்மார்க்க நெறியை அறிந்து ச்லாகிக்கும் தன்மையும், ஆகிய இவைகள் என்னை எப்போதும்

நேரான நிலைமையில் இருக்கும்படி செய்துவந்திருக்கின்றன.

மகாராஜா இவ்வளவு பெருந்தன்மையாயும் காருண்யமாயும் இந்த வேலையை ஒப்புக்கொள்ளச் சொல்லும்போது அந்தவேலை வேண்டாம் என்று சொன்னால் அது பொறுப்பைக்கழித்து விடுவதாகும் என்று என்மனைவி சொன்னாள். மகாராஜாவுச்கு காருண்ய குணங்களுண்டு; அவர் தமது ப்ரஜைகளுக்கு நன்மை செய்யவேண்டு மென்று எண்ணியிருக்கிறார்; அவர்தமது அராசாட்சியை சீர்ப்படுத்த ப்ரியப்படுகிறார்; அதற்கு ஒருவர் துணைவேண்டியிருக்கிறது. அவருடைய இஷ்டப்படி நான் ஸம்மதிக்காவிட்டால் அது மனுஷத்தனமாகுமா? என்று சொன்னாள். வழக்கம் போலவே நான் எனது மனைவியின் சொல்லுக்கு இணங்கி உத்யோகத்தை ஒப்புக்கொண்டேன். இது உண்மையில் ஒருராஜா என்னை வேண்டுமென்று கேட்பதும், என்மனைவி என்னை யவரிடம் அர்ப்பணம் செய்வதுமாக இருக்கிறது" என்றார். லேடி சந்த்ரவர்க்கரைப்போன்ற உத்தம குணங்கள் வாய்ந்த பெண்மணிகள் தங்கள் புருஷர்களுடைய நன்மையே நாடுவார்கள்.

**The Government Brahman Widows' Home.**

எழும்பூர் கவர்ன்மெண்டு ப்ராம்ண விதவாச்ரமம்.—மானேஜர் ஸ்ரீமதி வி. எஸ். வாலாம்பாள் அம்மாள் எழுதுகிறார்: பிராமண பால்ய விதைவைகளைப் படிப்பித்து முன்னுக்குக் கொண்டுவந்து அவர்கள் கௌரவமாய் ஜீவிக்க வழிகாட்டும் பொருட்டு நமது காருண்ய கவர்ன்மெண்டார் ஒரு ஹோம் ஸ்தாபித்திருப்பது நமது சகோதர சகோதரிகள் அறிந்திருக்கலாம். ஆயினும் அதைப்பற்றிய விவரங்கள் பலருக்குத் தெரிந்திலவாதலின் அவற்றை அறிவிப்போம்.

சென்ற 1912-ம் வருஷம் சகோதரி சுப்புலக்ஷிமியம்மாள் பி.ஏ; எல். டி, ஸ்தாபித்த "ஏழைப்பெண்கள் ஐவேஜி" யின் உதவியினல் ஜூலை மாசம் "சாரதா வித்யாச்ரமம்" என்ற பெயர் புனைந்த ஒரு விதவாச்ரமம் ஏற்படுத்தினர். அந்த ஆச்ரமத்தில் 4 விதவைகள் சேர்ந்தனர். இரண்டுமாத காலத்தில் 6 பேர்கள் அவ்வாச்ரமத்தில் படிக்கத்தொடங்கினர். பொதுஜன ஊக்கமும் ஒத்தாசையும் மிகக் குறைந்திருந்தபடியால் ஆச்ரமத்தை நடத்துபவர்கள் மனத்தளர்வடைந்தார்கள். மேற்கண்ட ஐவேஜி ஸ்தாபித்து ஆறுமாதங்களாயினும் சேர்ந்த தொகை ஒரு ஆயிரங் கூடவில்லை. ஆகவே சென்ற செப்டம்பர் மாதம் பெண்கள் பாடசாலை இன்பெக்டரெஸ் கனம் லிஞ்ச், பிராமண பாலவிதவைகளைப் படிப்பித்து முன்னுக்குக் கொண்டுவரும் பொருட்டு ஒரு 'ஹோம்' ஸ்தாபிக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருந்ததைகவர்ன்மெண்டார் ஒத்துக்கொண்டு விடவே, சகோதரி சுப்புலக்ஷிமி தான் ஏற்படுத்திய ஆச்ரமத்தையும் அதிலிருந்த மாணவர்களையுங் கவர்ன்மெண்ட் விதவாஹோமில் சேர்த்துவிட்டார். இப்பவும் இந்த ஹோமில் 9 விதவைகளிருக்கின்றனர். 9 வயது முதல் 19 வயது வரையிலிருக்கிறார்கள். எல்லாரும் பிராமணரே. இவர்களில் தெலுங்கர், மாத்வர், மற்றவர் ஸ்மார்த்தர் வகுப்பையும் சேர்ந்தவர்கள். இவர்கள் குடியிருக்க இடமும் சாப்பாடும் இனமாக அடைவதுமன்றி ஒவ்வொருவருச்கும் மாதம் ரூபா 3 கொடுக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் புஸ்தகங்கள், துணிமுதலிய செலவுகள் சராசரி மாதம் மூன்று ரூபாய்க்குமேலிராது. ஆகவே இவர்கள் மிகவுசௌக்கியமாகவும் யாதொரு கவலையுமின்றித் தமது கவனமுழுமையும் படிப்பிலே செலவிடலாம். இவ்விதமாகப் படித்துக் குறைந்தபட்சம் ஒரு மெட்ரிகுலேஷன் பரிக்ஷையாவது பாஸ் செய்து சில விதவைகள் முன்வரின் நமது ஜனசமூகத்திற்கு எவ்வளவு உதவி என்பது சொல்வதரிது. இந்த ஹோம் எழும்பூர், ஹைரோட் 51 நெம்பர் வீட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஏழைப்பெண்கள் ஐவேஜியின் தொகை இப்பொழுது ரூபா 1200 சேர்ந்திருக்கிறது. இத்தொகையைப் பாங்கியில் போட்டால் மாதம் சுமார் ரூபா 6 வட்டிவரும். இந்த ஆறு ரூபாயைக்கொண்டு நம் விதவைகளை எவ்வாறு முன்னுக்குக்கொண்டு வருவதெனத் தெரியவில்லை. இந்த ஹொமிலிருக்கும் விதவைகளிற் சிலரைத் தையல் முதலிய கைத்தொழில்களிற் பழக்குவதற்கும் அவர்களுக்கு சங்கீத ஞானமும் சம்ஸ்க்ருதபாஷா ஞானமும் பயிற்றுவிப்பதற்கும் இப்பணம் போதாது. ஹோம் மாணவர்கள் கொஞ்சம் சமஸ்க்ருதம் பயின்றுவருகின்றனர். ஆகவே பணம்சேர்வதற்கே காத்திருக்கிறார்கள். இல்லாவிடின் முன் சொன்னவைகள் ஹோமில் ஏற்படுத்தியிருக்கும். மேற்படி ஐவேஜியின் காரியதரிசிகள் பொதுஜன உதவிவை விரும்பி நமது சகோதர சகோதரிகளுக்கு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கின்றனர்.

# AGRICULTURE.
## விவஸாயம்.

### A Dairy farm.

பால் தயிர் வ்யாபாரம்.—வடக்கே பஞ்சாப் மாகாணத்திலுள்ள லையால்பூரில் பால் தயிர் பண்ணைச்சாலை ஒன்று பஞ்சாப் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தப்போகிறார்களாம். அதற்கு ஏற்படும் செலவு 11,000ரூபாய். அந்த சாலை எல்லா உபகரணங்களும் உள்ளதாய்க்கட்டப்படும். வந்து பார்க்கும் மிராசுதார்களும், ஜமீன்தார்களும் ரொம்பவும் ஆச்சர்யப்படும்படி அவ்வளவு நேர்த்தியாய் கட்டப்படுமாம். முதலில் 20 பசுக்களை வைத்து வ்யாபாரம் செய்வார்கள்.

### Trousers for Oxen.

எருதுகளுக்குக் கால்சட்டை.--தென்னாப்ரிக்காவில் எருதுகளுக்குக் கால்சட்டை போடுகிறார்களாம். இப்படிப் போடுவது விநோதார்த்தமாகவாவது, திடீரென்று நாகரீகம் கொண்டாடவாவது அல்ல. அந்தப்ரதேசத்தில் ஒருவித ஈக்கள் இருந்து மாடுகளைக் கடித்துத் தொந்தரவு செய்கின்றன. இதனால் மாடுகள் இறந்தும் போகின்றன. அஸ்தமனவேளையில் இந்த ஈக்கள் கூட்டங் கூட்டமாய் பூமியோரமாய் ஸஞ்சரிக்கின்றன. சில ஸமயங்களில் ஒருமந்தை முழுவதும் மேற்சொன்ன ஈக்களால் விஷமூட்டப் படுகின்றனவாம். எருதுகளின்மேல் எண்ணெயும் ரோசனமும் கலந்து தேய்த்துவிட்டால் ஈக்கள் கடிப்பதில்லையாம். ரோசனம் கலந்த எண்ணெயில் மேலே சொன்ன கால்சட்டையை நன்றாய் ஊறவைத்து மாடுகளுக்குப் போட்டுவிடுகிறார்கள். ஈக்கள் அவைகளின்மேல் பட்டு ஆயிரக்கணக்காய் இறந்து போகின்றனவாம்.

### Rhinoceros Beetle.

தென்னம்வண்டு.--சில இடங்களில் மேல்சொன்ன வண்டுகளை ஒரு ஸுலபமான தந்த்ரத்தினால் நாசமாக்குகிறார்கள். அதாவது தென்னந்தோப்புகளுக்கு மத்தியில் ஒருஅடி சவுக்கமுள்ள குழிவெட்டி அதில் சாணித்தண்ணீரை அழுகவைத்து ராக்காலங்களில் ஒருவெளிச்சத்தையும் வைத்திருந்தால் தென்னம் வண்டுகள் அழுகிய நாற்றத்தை வாஸனை பிடித்துக்கொண்டு வெளிச்சத்தண்டை வந்து குழியில் விழுந்தவுடன் அதைப் பிடித்துக்கொன்றுவிடுகிறார்கள். இந்த உபாயத்தைக் கையாடுகிறவர்கள் மேற்படி குழியிலிருக்கும் அழுகல் வஸ்துவை வண்டுகளைப் பிடித்தவுடன் அப்புறப்படுத்தி மண்ணைப் போட்டு மூடிவிட வேண்டும். இப்படிச்செய்யாவிட்டால் இந்த அழுகல் வஸ்துவே ஜாஸ்தி புழுக்கள் உண்டாக இடங்கொடுக்கும்.

### Manure for Dry Cultivation in Black Cotton Soils.

கரிசல் நிலங்களில் புன்செய் ஸாகுபடிக்குத் தகுந்த எரு.—பல்லாரி விவஸாயப் பண்ணையில் எருஸம்பந்தமாய் சில பரீக்ஷைகள் நடத்திவருகிறார்கள். அந்தப் பரீக்ஷைகளால், பல்லாரி ஜில்லாவில் பருத்தி விளையக்கூடிய கரிசல் நிலங்களில் புன்செய் ஸாகுபடி செய்வதாயிருந்தால், அந்த நிலங்களுக்கு பொட்டிலுப்பு (ஸால்ட்பீடர்), ஸுபர் பாஸ்பேட் ஆகிய இவைபோன்ற ரஸாயன உரங்களால் அதிக ப்ரயோஜனமில்லையென்றும், இந்த்ரிய ஸம்பந்தமான எருப்போடுவதால் ரொம்ப நன்மை உண்டாகிறதென்றும், இந்த எருப் போடுவதால் தான்யமும், வைக்கோலும் அதிகமாகக் கிடைக்கிறதென்றும் தெரியவருகிறது. மேலும், நிலங்களுக்கு பள்ளத் தொழுவத்தெரு குழியில் போட்டு வைத்திருக்கும் எரு, வெளியில் குவியலாகப்போட்டு வைத்திருக்கும் எரு, குஸும்பா விதையின் பிண்ணாக்கு, ஆகிய இந்த இந்த்ரிய உரங்களை உபயோகித்து பார்த்ததில் முதலில் சொன்ன பள்ளத்தொழுவத்தெருவே ரொம்ப ச்லாக்யமான தென்றும் தெரியவருகிறது.

### A Plantain Disease.

வாழை நோய்.—தற்காலம் கொழும்பில் வாழை மரங்களில் ஒருவிதநோய் காண்கிறதாம். லக்ஷ[...] ணக்கான மரங்கள் அந்நோயால் பீடிக்கப்[...] வருகின்றனவாம். முதல் முதல் வாழைமரத்[...] நோய்கண்டிருக்கிற தென்பதற்கு அடை[...] அதின் இலைகள் பளபளப்பாயிராமல் வா[...] பதேயாகும். அதன்பிறகு இலைகளின்[...] த்து வாடிப்போகும். இடைகறுக்கும்.[...] அடியும் நுனியும் அழுகிப்போகும்.[...] ளுக்கு வ்யாதி கண்டிருக்கிற தெ[...] அடையாளங்களும் உண்டாம்.

பனுமா, சூரினும், காஸ்டாரிக்கா, ஜமெய்க்கா முதலிய வேறு தேசங்களில் சென்ற பத்துவருஷகாலமாக இருந்து வருகிறது. இதனுல் அந்த தேசங்களிலுள்ள வாழைத் தோட்டக்காரர்களுக்கு ரொம்ப நஷ்டமுண்டாகிறதாம்.

வ்யாதிகண்ட மரங்களை உடனே வேரோடு வெட்டியெறியவேண்டும். வெட்டின குழியில் சுண்ணும்பு போட்டு மூடிவிடவேண்டும். வ்யாதி மிகக் கொடியதாகையால் வாழை மரங்களை அகத்யம் கொளுத்திவிடவேண்டும். வ்யாதி கண்ட இரண்டு வருஷம் வரையில் அந்த பூமியில் புதிதாய் வாழைப் பயிர் செய்யக்கூடாது.

**Record Quantity in Milk.**

அதிகப்பால் கறவை.—வட அமெரிக்காவில் ஒரு பாகமாகிய கனடா தேசத்தில் ரெட்டீர் என்னும் ஊரில் ஒரு பசு இருக்கிறது. அது மூன்று வருஷகாலத்தில் 37,847¼ ராத்தல் பாலும், 2504.39 ராத்தல் வெண்ணெயும் கொடுத்திருக்கிறதாம். இது அவ்வூரிலுள்ள மிஸ்டர் ஜூலியன் ஷர்மன் என்பவருக்கு ஸொந்தமானது. இந்த மூன்று வருஷ காலத்தில் அவருக்கு 3000 ரூபாய் பால் தயிரால் கிடைத்திருக்கிறது. இந்தப்பசு மூன்று கடாரிகள் கன்று போட்டிருக்கிறது. அவைகளுக்கு 6000 ரூபாய் வரையில் விலை கொடுப்பதாய்ச் சொல்லியும் அவர் அவைகளை விற்க ஸம்மதப்பட வில்லையாம். ஸமீபத்தில் இந்தப் பசுவுக்காக ஒரு விருந்து செய்யப்பட்டது. அந்த ப்ரதேசத்து விவஸாய அதிகாரியும், இன்னம் மற்றவர்களும் வந்திருந்தார்கள். அந்த ஸமயம் முன்பின் அறியாத ஒரு அன்யனிடமிருந்து 750 ரூபாய்க்கு ஒரு செக்குவந்தது. அவர் அந்தப் பணத்துக்குக் கொடுக்கக்கூடிய மேலான கடாக்கன்று ஒன்று தமக்குவேண்டுமென்று தெரிவித்திருந்தார். [illegible]ப்பசு ரொம்பவும் ப்ரஸித்தி யடைந்திருக்கிறது.

**[illegible] Brinjal Plant.**

[illegible]ரிச்செடி.—கத்தரிச்செடி இந்தியாவில் பல [illegible]ல் பயிரிடப்படுகிறது. இதன் காய்கள் [illegible]ளிலும் கிடைக்கும். உருவமும் பலவிதமா[illegible] சில வகைகளில் காயில் முட்கள் இருப்[illegible]

[illegible]த் தொடக்கத்தில், நாற்றுக்காக [illegible]ள். நாற்றுகள் பெயர்த்து நடத் தகுந்தவையாய் வளர்ந்த பிறகு ஒன்றுக்கொன்று 1½ அடி தூரம் இருக்கும்படி நடப்படுகின்றன. இவைகள் ஆவணி புரட்டாசி மாஸத்தில் காய்க்க ஆரம்பிக்கின்றன. பெரிய பட்டணங்களுக்கு ஸமீபத்திலுள்ள ஊர்களில் கத்தரியை தோட்டப்பயிராக ஸாகுபடி செய்கிறுர்கள். பம்பாய் ராஜதானியில் ஊதாநிறமுள்ள காய்கள் காய்க்கும் செடிகள் ஸுமார் 3 அடி உயரம் வளருகின்றனவாம். அங்கே மே மாஸத்தில் நிலத்தை நன்ருய்ப் பண்படுத்தி கத்தரி விதைகளை விதைத்துவிடுகிறுர்கள். ஆறுவாரம் அல்லது இரண்டு மாஸத்துக்குள் நாற்றுகள் நன்ருய் வளர்ந்து பிடுங்கி நட ஏற்றவையாயிருக்கின்றன. கத்தரி நாற்று நடவேண்டிய நிலத்தில் முதலுழவுக்கு முன்னுல், ஏகருக்கு 20 டன்வீதம் தொழுவத்தெரு விட்டு, இரண்டு மூன்று தடவை நன்ருய் உழுது கட்டி முட்டிகளை உடைத்துத் தூளாக்கி விடுகிறுர்கள்.

ஒவ்வொருசெடிக்கும்2½ அடி தூரமிருக்கும்படியாக பத்தி பத்தியாக நடுகிறுர்கள். செடிகள் நிலத்தில் நன்ருய்ப் பிடித்தபிறகு ஏகருக்கு 500 ராத்தல் வீதம் வெடியுப்பாவது, 1000 ராத்தல் வீதம், ஆமணக்குப் பிண்ணுக்காவது செடியைச் சுற்றிலும் நிலத்தில்மேல் எருவாக இடுகிறுர்கள். இப்படிச் செய்வதால் மாஸூல் அதிகமாகக் காண்கிறதாம். இந்த இரண்டு எருவில், வெடியுப்பு எருவிட்டதில் தான் அதிகபலன் கிடைக்கிறதாம். ஏகருக்கு 1451 ராத்தல் வீதம் மீன் எருவும், 433 ராத்தல் வீதம் வெடியுப்பும் போட்டதில் ஒரு ஏகருக்கு 16322 ராத்தல்காய்கள் வீதம் கிடைத்தனவாம். ஸாகுபடிச் செலவு ஒரு ஏகருக்கு ரூ. 138½ ரூபாய் ஆயிற்றும். ஒரு ஏகருக்கு வரும்படி 325 ரூ.

வங்காளத்தில் ஒரு ஏகர் நிலத்தில் கத்தரி ஸாகுபடி செய்வதற்கு பிடிக்கும் செலவு ஸுமார் 60 ரூபாய் யாகிறதென்றும், லாபம் 90 ரூபாய் என்றும், ஆகவே லாபம் ஸுமார் 30ரூபாய்தான் என்றும் ஒருவர் மதிப்புப்போட்டிருக்கிறுர்.

கத்தரியை கரப்பான் பாண்டம் என்று சொல்லுவார்கள். மிதம்மிஞ்சி சாப்பிடுதல் நல்லதல்ல. அதைப் பலவிதம் பக்குவம் செய்து இந்தியர்களும் ஐரோப்பியர்களும் சாப்பிடுகிறுர்கள்.

# COMMERCE.
## வ்யாபாரம்.

### Business Enterprise in India.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற எப்ரல் மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 27 சம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 7 | பாங்கி லேவாதேவி கம்பெனிகள் | ... 2,58,00,000 |
| 1 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி | ... 5,00,000 |
| 1 | கப்பல் கம்பெனி | ... 50,00,000 |
| 1 | ரெயில்வே கம்பெனி | ... 20,00,000 |
| 1 | அச்சிட்டு ப்ரசுரம்செய்யும் கம்பெனி. | 5,00,000 |
| 7 | வ்யாபாரக்கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 32,27,000 |
| 1 | ஜூட்மில் கம்பெனி | ... 37,50,000 |
| 1 | அரிசிமில் கம்பெனி | ... 96,000 |
| 1 | எண்ணெய் மில் கம்பெனி | ... 1,00,000 |
| 2 | தேயிலைத்தோட்டக் கம்பெனிகள் | ... 3,50,000 |
| 1 | தோட்டக்கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 10,000 |
| 1 | கிலக்கரி கம்பெனி | ... 80,000 |
| 1 | சுரங்கக்கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 6,00,000 |
| 1 | கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 3,00,000 |
| 27 | | ...4,23,13,000 |

### Sugar Bags.

சர்க்கரைச் சாக்குகள்.--நமது தேசத்தில் ரொம்ப கரும்பு ஸாகுபடிசெய்யப்பட்டு வந்தும், அதுபோதாமல் அன்ய நாடுகளிலிருந்தும் சர்க்கரை நமக்குவந்து கொண்டிருக்கிறது. அந்தநாடுகளில் ஜாவாதீவு ஒன்றாகும். அங்கிருந்து சர்க்கரை போட்டு அனுப்பும் சாக்குகள் நல்லவையாய் இல்லாமல் கிழிந்து போகிறபடியால் சர்க்கரை நஷ்டமாகப்போகிறதென்று இந்திய வ்யாபாரிகள் ஸமீபத்தில் ஜாவா வ்யாபாரிகளினிடம் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் அந்த வ்யாபாரிகள் இந்தக்குறையைப்பற்றி அவ்வளவு த்ருப்திகரமாய் கவனிக்கவில்லையென்று தோன்றுகிறது. பைகள் கிழிந்தும், பொத்தலாயுமிருக்கிறதென்று இந்திய வ்யாபாரிகளைத் தவிர வேறொருவரும் சொல்லவில்லை யென்றும், தாங்கள் இதைவிட நல்லசாக்குகள் வாங்கி உபயோகிக்க ப்ரயத்தனப்பட்டும் நல்ல சாக்குகள் கிடைக்கவில்லை யென்றும், உபயோகிக்கும் சாக்குகள் யாவும் இந்தியாவிலிருந்தே வருகின்றன வென்றும் சொல்லுகிறார்கள். மேலும் சர்க்கரை இறக்குமதி செய்பவர்கள் இந்தக்குறையை சாக்குகள் செய்து ஜாவாவுக்கு ஏற்றுமதிசெய்யும் சம்பெனிகளிடம் சொல்லிக்கொள்வது நலமென்றும் சொல்லிவிட்டார்கள்.

### Business betwen Madras and America.

சென்னைக்கும் அமெரிக்காவுக்கும் வ்யாபாரம்.- அமெரிக்காவிலுள்ள ஐக்யமாகாணத்தார் இந்தியாவோடு செய்யும் வ்யாபாரத்தை அதிகப்படுத்துவதற்கு ஸௌகர்யங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ச்சி செய்வதற்காக மிஸ்டர் பேகர் என்னும் அமெரிக்கா கான்ஸல் ஸமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தார். ஒரு பத்ரிகை ப்ரதிநிதி அவரைக்கண்டு பேசினபோது, அவர் சென்னை ராஜதானியில் வ்யாபாரம் ரொம்ப நல்ல நிலைமையில் இருக்கிறதென்றும், இதனால் இறக்குமதி வ்யாபாரம், முக்யமாய் ஐக்யமாகாணத்திலிருந்து வரும் இறக்குமதி, அதிகரிக்க இடமாயிற்றென்றும், சொன்னார். மேலும் அவர் சொன்னதாவது:—"சென்னையில் மோட்டார் வண்டிகள் ரொம்ப அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். சென்னையில் மோட்டார் வண்டிகளை உபயோகப்படுத்துவதற்கு ஏற்ற ஸௌகர்யங்கள் ரொம்ப நன்றாய் இருக்கின்றன. அமெரிக்கர் செய்த வண்டிகள் உபயோகத்தில் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. அமெரிக்காவில் மோட்டார் வண்டிகள் செய்யும் தொழில் ரொம்ப ப்ரபலமாய் வ்ருத்தியாகி வருகிறது. உலகத்திலுள்ள எல்லா இடங்களுக்கும் அமெரிக்காவில் செய்யப்பட்ட மோட்டார் வண்டிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. டெட்ருவா என்னும் நகரத்தில் மாத்ரம் ஒவ்வொரு வருஷமும் 30 கோடி ரூபாய்க்கு மோட்டார் வண்டிகள் செய்கிறார்கள்.

"மேலும், அமெரிக்காவில் செய்யப்படும் விவஸாய யந்த்ரங்களும், கருவிகளும் சென்னையில் க்ராமாந்தரங்களில் ரொம்பவும் உபயோகப்படுமென்றும், அதனால் இப்பொழுது இந்தியாவில் அனுஷ்டிக்கப்படுகிற சீர்திருந்தாத, வீண் நஷ்டம் கொடுக்கிற விவஸாய முறைகளைக் கைவிடுவார்கள் என்றும் நான் எண்ணுகிறேன். அமெரிக்காவிலிருந்து பலவிதமான யந்த்ரங்களையும், உங்களுடைய பொருளாதார முன்னேற்றத்துக்கு அவச்யமான மற்ற கருவிகளையும் நீங்கள் வரவழைத்து உபயோகிக்கவேண்டுமென்று எண்ணுகிறேன்." என்று சொன்னார்.

# INDUSTRY.

# கைத்தொழில்.

## Chrome Tanned Leather.

க்ரோம் முறையால் பதனிட்ட தோல்:—க்ரோம் முறையால் பதனிட்ட தோல் பட்டை முதலிய தாவர வர்க்கப் பொருள்களை உபயோகித்துப் பதனிடும் தோலைவிட அநேக விஷயங்களில் மேலானதாயிருக்கிறது. முதலாவது, க்ரோம்தோல் தண்ணீரில் கெடுதலடையாது. பட்டை, கடுக்காய் முதலியவைகளைக் கொண்டு பதனிட்டதோலை நனைத்து அப்படியே ஈரமாயிருக்கும்படி விட்டால், அது அழுகிப்போகும். ஆனால் க்ரோம் தோலோ ஜலத்தால் பாதிக்கப்படுவதில்லை. இரண்டாவது, க்ரோம் தோல் ரொம்ப உறுதியானது. மற்ற முறையால் பதனிட்ட தோலைவிட $1\frac{1}{2}$ பங்கு அதிக உறுதியுள்ளது. மூன்றாவது பட்டையால் பதனிட்டதோலைவிட க்ரோம் தோல் மூன்றில் ஒரு பாகம் லேசானது. நாலாவது க்ரோம் தோல் அதிக உஷ்ணம் தாங்கும். அதை ஜலத்தில் போட்டுக் காய்ச்சலாம். தோலிலுள்ள நார்கள் சற்று சுருங்கிப் போனாலும் கெட்டுப்போவதில்லை. யந்த்ர வேலைகளில் உபயோகப்படும் ஸாதாரண தோல் அதிக உஷ்ணத்தால் கெட்டுப்போய் விடுவதால் அதற்குபதிலாக க்ரோம் தோலை உபயோகிப்பது ஸௌகர்யமாகும். ஐந்தாவது ஸௌகர்யமென்னவென்றால், க்ரோம் தோலை பூச்சிகளும், ம்ருகங்களும் அழிக்கமாட்டா. உஷ்ணதேசமாகிய இந்தியாவில் கரையான் ஸாதாரண தோலை அரித்து விடுகிறது. எலி, சுண்டெலி முதலியவைகளும் ஸாதாரண தோலைக்கடித்துக் கெடுத்துவிடுகின்றன. க்ரோம் தோலை இவைகள் ஒன்றும் செய்வதில்லை.

## Industrial Failures.

கைத்தொழில்கள் நஷ்டமடைந்து போதல்:—சென்ற மாஸ ஸஞ்சிகையில் கைத்தொழில்கள் ஸ்தாபித்து நடத்துவதில் கவனிக்கவேண்டிய முக்ய அம்சங்களைப்பற்றிச் சொல்லியிருந்தோம். அந்த விஷயங்களை ஸரிவர கவனிக்காததாலும் இன்னம் பலகாரணங்களாலும் கைத்தொழில் கம்பெனிகள் நஷ்டப்பட்டுப்போகின்றன. உதாரணமாக, காசி க்ளாஸ் மான்யுபாக்ச்ரிங் கம்பெனியென்னும் கண்ணாடி ஸாமான்கள் செய்யும் கம்பெனி ஒன்று சில காலத்துக்குமுன் நஷ்டப்பட்டுப்போய் அந்தக் கம்பெனி வேலையை நிறுத்திவிட்டது. ஸாதாரணமாக பம்பாய் நகரத்துக்கு வெளியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கம்பெனிகளில் தான் இவ்வித ஸங்கடங்கள் உண்டாகின்றனவென்று தெரிகிறது. ஆனால் அந்தக்கம்பெனிகளிலும் ப்ரிட்டிஷாரால் நடத்தப்படும் கம்பெனிகளுக்கு இத்தகைய கஷ்டம் நேரிடுவதில்லை. கான்பூரில் உள்ளப்ரிட்டிஷ் வ்யாபாரிகள் தங்கள் தொழில்களில் நல்ல லாபம் ஸம்பாதிக்கிறார்களாம். பம்பாயிலுள்ள கம்பெனிகளைத் தவிர மற்ற கம்பெனிகளுக்கு ப்ரிட்டிஷ் கம்பெனிகளைப்போல் நல்ல லாபம் கிடைக்கிறதில்லை என்று சொல்லப்படுகிறது. இப்படி இந்திய கம்பெனிகள் நஷ்டமடைந்தோ அல்ல அதிக லாபமில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டோ இருப்பதற்குப்பல காரணங்கள் இருக்கின்றன அந்தக் காரணங்களை ஒருவாறு நிவர்த்தி செய்துகொள்ளலாம்.

முதலாவது, மூலதனம் போதாமை. பம்பாயிலுள்ள கம்பெனிகளுக்கு ஸரியான மூலதனம் வைத்து நடத்த வேண்டிய ஸௌகர்யங்கள் உண்டு. வெளியூர் கம்பெனிகள் பேருக்குமாத்ரம் ஏராளமான மூலதனத்துடன் நடத்துவதாகச் சொல்லப் பட்டபோதிலும் உண்மையில் செலுத்தப்பட்ட மூலதனம் ரொம்பக் குறைவாகவேயிருக்கிறது.

கம்பெனியின் டிரெக்டர்கள் ரொம்ப அறிவும் திறமையும் வாய்ந்தவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் பங்காளிகளுக்குத்தாம் செலுத்தவேண்டிய கடமை இன்னவை என்பதை யறிந்த பொறுப்பாளிகளாயிருக்கவேண்டும்.

பங்காளிகள் தாங்கள் செலுத்த வேண்டிய பங்குப் பணத்தை கேட்டவுடன் கொடுக்காமல் ரொம்ப தாமஸம் செய்து பிற்பாடு கொடுப்பதில் கம்பெனியை வைத்து நடத்துபவர்களுக்கு ரொம்ப ச்ரமம் ஏற்படுகிறது. மேலும் பங்குக்காரர்கள் கம்பெனியின் விஷயங்களில் கொஞ்சங்கூட ச்ரத்தை பாராட்டாமல் வருஷாந்தர மீட்டிங்குகளுக்கு மாத்ரம் எப்போதாவது வருகிறார்கள். பங்குக்காரர்கள் (ஷேர்ஹோல்டர்கள்) கம்பெனி விஷயத்தில் இன்னம் அதிக ச்ரத்தைபாராட்டவேண்டும். ரொம்ப ஸாமர்த்யமும் யோக்யமும் வாய்ந்தவர்களையே கைத்தொழில் கம்பெனிகளின் மானேஜர்களாக ஏற்படுத்தவேண்டும்,

## ECONOMICS.
## பொருளாதாரம்.

**Plague Death Roll.**

ப்ளேக்கினல் நேர்ந்த உயிர்ச்சேதம்.—இந்தியாவில் முதல்முதல் ப்ளேக்நோய் காண ஆரம்பித்து இப்போது ஸுமார் 17 வருஷமாகிறது. முதலில் 1896-ம் வருஷத்தில் பம்பாய் ராஜதானியில் ப்ளேக் ஆரம்பமாயிற்று. அந்த வருஷம் பம்பாய் ராஜதானியில் ப்ளேக்கால் இறந்தவர்களின் தொகை 2219. இதில் பம்பாய் நகரத்தில் இறந்தவர்களின் தொகை 1936. அடுத்தவருஷம் இந்தியா முழுவதிலும் இந்தக் கொள்ளைநோயால் இறந்தவர்கள் 53,816 பேர். இதில் 47000 பேர் பம்பாய் ராஜதானியைச் சேர்ந்தவர்கள். பம்பாய் நகரத்தில் மாத்ரம் 11000 பேர் இறந்துபோனூர்கள் அதுமுதல் இந்தியாவில் இந்த நோய் ரொம்ப மும்முரமாகப்பரவலாயிற்று. சென்ற 15-வருஷத்துக்குள் 80 லக்ஷம் ஜனங்கள் ப்ளேக்கால் மாண்டிருக்கிறூர்கள் என்று கணக்குகளால் தெரிய வருகிறது. ப்ளேக்கு கணக்குகளை ஆராய்ச்சிசெய்து பார்த்ததில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு எப்ரல் மாஸங்களில் தான் இந்தநோய் ப்ரபலமென்றும், ஜுலை மாஸத்தில் ப்ளேக்கால் மரணம் ரொம்பக்குறைவென்றும் தெரியவருகிறது. உதாரணமாக, 1904-ம் வருஷத்தில் எப்ரல் மாஸத்தில் 2,54,000 பேர் ப்ளேக்கால் மாண்டு போனூர்கள். ஜுலை மாஸத்தில் 12,000 பேர்தான் இறந்தார்கள். 1907-ம் வருஷம் எப்ரல் மாஸத்தில் 2,94,000 பேரும், ஜுலை மாஸத்தில் 15,000 பேரும் ப்ளேக்கால் இறந்தார்கள். சென்ற ஜனவரிமாஸம் ப்ளேக் மரணவிகிதம் குறைவாயிருப்பதை உத்தேசித்து இந்த வருஷம் ப்ளேக் உபத்ரவம் முன்போல் கடுமையாயிருக்காது என்று சொல்லப்படுகிறது. இந்தநோய் நமது தேசத்தைவிட்டு எப்பொழுது முற்றிலும் நீங்குமோ தெரியவில்லை.

**Economic Enquiry.**

பொருளாதார நிலைமையைப் பற்றிய விசாரணை.—சென்ற மேமாஸம் திருச்சினூப்பள்ளியில் நடந்த கான்பரென்ஸில் அக்ராஸனதிபதியாயிருந்த ஆனரபில் மிஸ்டர் ராமச்சந்தரராவ் அவர்கள் நமது ராஜதானியின் பொருளாதார நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டியது ரொம்ப அவச்யம் என்று தமது ப்ரஸங்கத்தில் வற்புறுத்திக்கூறினூர்,

விவஸாயத்தையே முக்ய ஜீவனமாகக்கொண்டிருக்கும் இந்தியாவில் குடியானவன் தான் பாடுபட்டு ஸம்பாதிப்பதில் ஸரிபாதியை ஸர்க்கார் கந்தாயத்துக்குச் செலுத்துகிறூன். மீதியைக்கொண்டு எப்படி அவன் ஜீவிப்பான் என்பது ஊகித்தறியக்கூடியதல்ல. நமது ராஜதானியில் தனிப்பட்டாதாரர்களாகவும் கூட்டுப்பட்டாதாரர்களாகவும் 5,851,699 பேர் இருக்கிறூர்கள். இவர்களில் 24,54,697 பட்டாதாரர்கள் 10 ரூபாயும் அதற்குக்குறைந்தும் கந்தாயம் செலுத்திவருகிறூர்கள். இவர்களால் மொத்தத்தில் ஏறக்குறைய காலவரிசை நிலங்கள் ஸாகுபடி செய்யப்படுகின்றன. ஆகவே நமது ராஜதானியில் உள்ள விவஸாயிகளில் மூன்றில் ஒரு பாகம் ஜனங்கள் தங்கள் பூமியிலிருந்து விளைவதைக் கொண்டே ஜீவிக்கிறூர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இவர்களுடைய ஜீவனம் எவ்வளவு கஷ்டஜீவனம் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? எத்தனை கந்தாயம் செலுத்துகிறூனே அத்தனை லாபம்பூமிக்குடையவன் அடைகிறூனென்றும் ஸுபிக்ஷ காலங்களில் சேர்த்து வைத்ததை க்ஷாம காலத்தால் உபயோகப்படுத்திக்கொள்ளலாமென்று சொல்லுவது 10 ரூபாய் கந்தாயம் செலுத்துகிறவர்கள் ஸம்பந்தப்பட்டவரையில் ஸரியல்ல. தான்யங்கள் விலையேறி விற்பதனூல் அவர்கள் குறைவில்லாமல் ஜீவிக்கலாமேயென்றூலோ எத்தனைக்கெத்தனை அவர்கள் விற்கும் தான்யங்கள் விலையேறுகின்றனவோ அத்தனைக்கத்தனை அவர்கள் வாங்கும் ஸாமான்களும் விலையேறியே விற்கின்றன.

ஐக்ய நாணய ஸங்கங்களில் 10 ரூபாய்க்குக்குறைந்த தொகைக்கு பூமியை அடமானம் வைத்துக் கடன் வாங்குபவர்களும் இவ்வேழை வகுப்பினரே.

ஆகையால் இவர்கள் ஸம்பந்தப் பட்ட மட்டிலுமாவது ஒரு சீர்திருத்தம் செய்ய வேண்டியது கவர்ன்மெண்டாரின் முக்ய கடமையாகும். உத்யோகஸ்தர்களும் உத்யோகஸ்தரல்லாதவர்களும் சேர்ந்த ஒருசமிட்டியார் இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்ய வேண்டும். வெவ்வேறு ஜில்லாக்களில் சிற்சில க்ராமங்களிலாவது இவ்வித பரிசீலனைகளைச் செய்து இந்தியா கவர்ன்மெண்டுக்கும் இந்திய ஸெக்ரெடெரிக்கும் முறையிட்டுக்கொண்டால் நாம் கருதிய பலனை அடையலாம். என்று மிஸ்டர் ராமசந்த்ராவ் சொன்னூர்.

# CO-OPERATION.

## கோவாபரேஷன்.

### Coimbatore Co-operative Conference.

கோயம்புத்தூர் கோவாபரேடிவ் கான்பரென்ஸ்:—சென்ற மாஸம் கொயம்புத்தூரில் கோவாபரேடிவ் கான்பரென்ஸ் கூடினதாகச்சொன்னேம். அந்த கான்பரென்ஸ் இரண்டாம் நாள் கூடி பல தீர்மானங்கள் செய்தது. அவையாவன:—கோவாபரேஷன் விஷயங்களைப் பரவச்செய்பவும், ஸங்கங்கள் ஏற்படுத்தவும் சம்பளமில்லாமல் உத்யோகஸ்தர்களல்லாதவர்களை நியமிக்கவேண்டும். டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்கிகளில் ட்ரஸ்ட் நிதிகளை வட்டிக்கு விடலாமென்று ஹைகோர்ட்டார் சட்டம் ஏற்படுத்தவேண்டும். ரூரல் ஸொஸைடிகளில் ரூல்களை மாற்றும்போது, விதை தான்யம் வாங்குதல், கால் நடை, கருவிகள், யந்த்ரங்கள் வாங்குதல், தங்கள் சரக்குகளை விற்றல் முதலிய வேறு கோவாபரேடிவ் தொழில்களையும் எடுத்துக் கொண்டு நடத்துவதைக் குறித்து ஆலோசிக்கவேண்டும். நெசவு தொழிலாளர்கள் உள்ள ரூரல் ஸங்கங்கள், அந்த நெசவுக்காரர்களுக்கு ஸங்கத்து மூலமாக நூல் வாங்கிக்கொடுத்து உதவுவதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். பட்டணத்திலுள்ளவர்கள் கட்டிடவேலை, நெசவு, பால் தயிர் வ்யாபாரம் முதலியவைகள் ஸம்பந்தமாக கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஏற்படுத்தவேண்டும். இப்படி பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

### Money Lenders and Credit Societies.

லேவாதேவிக்காரர்களும், ஐக்யநாணய ஸங்கங்களும்:—க்ராமத்து ஐக்யநாணய ஸங்கங்கள் ஸரிவர நடப்பதற்கு மூன்று அம்சங்கள் வேண்டும். அவையாவன:—(1) ஸரியான மூலதன ஏற்பாடு (2) ஸரியான மேல்பார்வை (3) கடன் வாங்கினவர்கள் திருப்பிக்கொடுக்கத் தாமதித்தால் கோர்ட்டுக்குப்போகாமலே விஷயங்களைத் தீர்த்துக்கொள்ளும்படியான கண்டிப்பான ஏற்பாடுகள். முதலில் சொன்ன மூலதன ஏற்பாடு விஷயமாய் இன்னம் ரொம்ப ஸௌகர்யங்கள் ஏற்பட வேண்டியிருக்கிறது. கவர்ன்மெண்டாரும், பல ஜமீன்தார்களும், ஐக்யநாணய ஸங்கங்களுக்குக் கடனுகப் பணம் கொடுக்கத் தயாராயிருந்தாலும், ஸங்கங்கள் இவர்களை விட்டு விட்டு வெளியில் கடன் வாங்குவதாயிருந்தால் கஷ்டம் ஏற்படுகிறது. முதலாளிகளிடத்திலும் மற்ற கம்பெனிகளிடத்திலும், கடன் வாங்குவதாயிருந்தால் கடனுக்குத் தக்க ஈடும், கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு திட்டமான தவணையும் கடன் கொடுத்தவர்கள் ஏற்படுத்திக்கொள்ளுகிருர்கள். ஒரு ஸங்கத்துக்கு பண ஸம்பந்தமாய் எவ்வளவு ஸௌகர்யங்களிலிருந்தாலும் சில ஸமயம் வெள்ளத்தாலும் பஞ்சத்தாலும் இன்னம்மற்ற காரணங்களாலும் கஷ்டம் நேரலாம். அப்பொழுது அந்த அவஸரத்துக்கு மூலதனம் வேண்டியிருக்கும். மெம்பர்களுக்கு பணம் உடனே கிடைக்காவிடடால் அவர்கள் மறுபடியும் க்ராமத்து லேவாதேவிக்காரனிடம் கடன் கேட்கவேண்டிவரும். ஆகையால் அவனுடைய தொழிலை பூராவும் கெடுத்து விடலாமா. அல்லது அவனையும் ஏதாவது ஒரு விதத்தில் இந்த கோவாபரேஷன் ஏற்பாட்டில் சேர்த்துக் கொள்ள முடியாதா? தகுந்த யோக்யதையுள்ள லேவாதேவிக்காரர்கள் அடிக்கடி நெருக்கடியானகாலத்தில் கடன் கொடுத்து உதவி கடன் வாங்கினவர்கள் அதோகதியாய் நஷ்டமடையாமல் அவர்களைக் காப்பாற்றியிருக்கிருர்கள். கடன் வாங்குகிறவர்கள் கொடுக்கும் ஜாமீன் அவ்வளவு நல்லதாயிராததால் வட்டியும் அதிகமாகவேயிருக்கிறது. அன்யாயவட்டி வாங்கும் லேவாதேவிக்காரர்களை ஆதரிக்கவேண்டுமென்றுசொல்ல வரவில்லை. ஆனல் யோக்யதையும் கௌரவமும் உள்ள லேவாதேவிக்காரர்கள் பலர் இருக்கிருர்கள். அவர்களைப்பற்றி க்ராமவாஸிகள் நல்ல அபிப்ராயமே கொண்டிருக்கிருர்கள் என்று கோவாபரேடிவ் உத்யோகஸ்தர்கள் ஒப்புக்கொள்வார்கள். க்ராம ஸங்கங்களுக்கு மூலதனம் ஏற்பாடு செய்வதில் க்ராம லேவாதேவிக்காரனைப் பற்றி கவனிக்காமலிருப்பதற்கு ப்ரத்யேகமான காரணங்களிருந்தாலன்றி அவர்களை சேர்த்துக் கொள்ளாமலிருக்கக் கூடாது. இப்பொழுது லேவாதேவிக்காரன் விஷயத்தில் ரொம்ப கடுமையாக நடந்து வந்தால் பிற்பாடு எப்பொழுதாவது ஒரு ஸமயம் கெடுதி நேர்ந்த காலத்தில் அவனிடம் பணம் கேட்கப்போனல் அவன் நம்மை லகுவில் விடமாட்டான் என்பது நிச்சயம். இந்த விஷயம் ரொம்ப முக்யமானதால் கவர்ன்மெண்டார் லேவாதேவிக்காரர்களை நிக்ரகிக்காமல் அவர்களையும் கோவாபரேஷன் முயற்சியில் இழுத்துப்போடுவது நலம் என்ற அபிப்ராயமாய் "பயோனியர்" பத்ரிகை எழுதுகிறது.

# BANKING.

## பாங்கி வ்யாபாரம்.

### Indian Bank.

இந்தியன்பாங்கி:—சென்ற ஜூன்மாஸம் 30தேதி யோடு முடிகிறஆறுமாஸத்துக்கு இந்தியன்பாங்கிக்குக் கிடைத்த மொத்த லாபம் ரூ 1,65,482-0-2. டிபாஸி டர்களுக்குக் கொடுக்கவேண்டிய வட்டி, ஆபீஸ் செல வு, மற்ற செலவுகள் ஆகிய இவைகளுக்கு ரூ 85,460 12-2 ரூபாய் செலவழிந்தது. இது போக மிச்சமான லாபம் ரூ 80,021-4-0. சென்ற வருஷத்து லாபத்தில் கைவசம் இருந்த ரூ 7,679-2-3 யும் சேர்க்க மொத் தம் ரூ 87,700-6-3 ஆகிறது. தற்போது ஷேர் ஹோல்டர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு 6-வீதம் ஆறுமாஸத்து டிவிடெண்டு கொடுக்கப்படும்.

### Bank of Madras.

பாங்க் அப் மதராஸ்:—சென்ற ஜூன்மாஸம் 30 தேதி யோடு முடிவாகும் 6-மாஸத்துக்கு,வருஷத் துக்கு100-க்கு 10 ரூ வீதம் டிவிடெண்டும்,அதாவது பங்குப்பணத்துக்கு வட்டியும், 1-வீதம் போனஸும் கொடுக்கவேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டிருக்கி றது. ஆதியில் மதராஸ் பாங்கி ஏற்பட்டபோது அதன் பங்கு 500 ரூபாயாக இருந்தது. இப்பொழுது ஸுமார் 1440ரூபாய் விலையாக இருக்கிறது. ஆகை யால் மேற் சொன்னபடி நல்ல லாபம் வருகிறதே என்று மயங்கி இப்பொழுது ஒரு ஷேர் வாங் கப் போனல், ஸுமார் 1440 ரூபாய் கொடுக்க வேண் டியிருப்பதால் நூற்றுக்கு ஸுமார் 4 ரூபா வீதந்தான் டிவிடெண்ட் அதாவது வட்டி கிடைப்பதாக ஆகும்.

### The Bank of Bombay.

பாங்க் அப் பாம்பே:—பாங்க் அப் பாம்பே யென் னும் பாங்கி பம்பாயில் இருக்கிறது. அதற்கு சென்ற ஜூன்மாஸம் 30தேதியோடுமுடிவானஆறுமாஸத்துக் குக்கிடைத்த மொத்த லாபம் ரூ 14,32,238-14-7 ஆகிறது. ஷேர் ஹோல்டர்களுக்கு நூற்றுக்கு வரு ஷத்துக்கு 13-வீதம் டிவிடெண்டும் நூற்றுக்கு 2-வீ தம் போனஸும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மதராஸ் பாங்கியைப்போலவே இதன் ஷேர் தொகை முதலில் 500 ரூபாயாக இருந்தது. இப்போது 1707 ரூபாயாக இருக்கிறது. ஆகவே மேற்சொன்ன டிவிடெண்டு ஸுமார் நூற்று 4 ரூ 6 ஆணு வட்டியாக ஆகிறது.

### The Bank of Bengal.

பாங்க் அப் பெங்கால்:—கல்கத்தாவிலுள்ள பாங்க் அப் பெங்காலின் ஷேர் ஹோல்டர்களுக்கு சென்ற ஜூன்மாஸம் 30தேதி யோடுமுடிவாகிற ஆறுமாஸத் துக்குடிவிடெண்டும்போனஸும் நூற்றுக்கு வருஷத் துக்கு 14-வீதம் கிடைத்திருக்கின்றன. மதராஸ் பாங்கியைப்போலவே இதன் ஷேர் தொகை முதலில் 500 ரூபாயாக இருந்தது. இப்போது 1715 ரூபாயாக இருப்பதால் மேலே சொன்ன வரும்படி இப்பொழு துள்ள விலைக்கு நூற்றுக்கு வருஷத்துக்கு ஸுமார் 4 ரூ 1 அ 4 பை வீதந் தான் வட்டியாக ஆகிறது.

### Dividends.

டிவிடெண்டுகள்:—மேலே சொன்ன கணக்குக ளால் பாங்கி முதலியவைகளில் ஷேர் (பங்கு) வாங் குவது ரொம்ப லாபகரமானதென்று நம்முடைய நேயர்கள் மலைக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம். கம்பெனிகளில் டிவிடெண்டு வீதங்கள் கொடுக்கும் போது ஆதியில ஏற்பட்ட பங்குத்தொகையின்மேல் தான் லாபத்தை கணக்கிட்டுக்கொடுப்பது வழக்கம். ஆகவே முதன் முதலாக ஷேர் (பங்கு) வாங்கி இப் பொழுதும் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கேமேற் சொன்ன லாபம் கிடைக்கும். பணம் வைத்துக்கொண் டிருப்பவர்கள், கம்பெனிகளில் ஷேர்வாங்கவேண்டும் என்று ப்ரியப்படும் பக்ஷத்தில் டிவிடெண்டுகளைப் பார்த்து மயங்கிப்போகாமல் வாங்கும்போது கொடுக் கும் விலைக்கு டிவிடெண்டு என்னவரும் என்பதை பார்த்து வாங்கவேண்டுமென்று நாம் சொல்வது அநா வச்யம்.

### Mysore Bank,

மைஸூர் பாங்கி:—சென்றமாஸத்தில் மைஸூர் பாங்கியைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். அந்த பாங் கியின் மூலதனம் 20 லக்ஷமென்று விளம்பரம் செய் யப்பட்டிருக்கிறது. இது வரையில் 17 லக்ஷம் ரூபா ய்க்குமேல் சேர்ந்திருக்கிறதென்று தெரியவருகிறது. மைஸூரில் உள்ள தீர்த்தனஹள்ளியில் மிஸ்டர் வாஸுதேவராவ் என்ற வ்யாபாரி ஒருவர் மாத்ரம் லக்ஷத்துப் பதினையாயிரம் ரூபாய்க்கு பங்குகள் எடு த்துக் கொண்டிருக்கிறாராம். மகாராஜா அவர்கள் 50 ஆயிரம் ரூபாய்க்குப் பங்குகள் வாங்கியிருக்கிறார் என்று தெரியவருகிறது. டிரெக்டர்கள் ஒரு திறமை வாய்ந்த ஒரு ஐரோப்பிய மானேஜரை இங்கலண்டி லிருந்து தருவிக்க உத்தேசித்திருக்கிறார்களாம். அவர் இந்தியர்களை பாங்கி வேலையில் பழக்கி விடவேண்டும் என்று உடன்படிக்கை செய்து கொள்வார்களாம்.

# INSURANCE.
# இன்ஷ்யூரென்ஸ்.

## Profits of Insurance Companies.

இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளுக்குக் கிடைக்கும் லாபம் —இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளுக்கு லாபம் கிடைக்கக்கூடிய மார்க்கங்கள் பின்வருமாறு.

(1) தமது பணங்களுக்கு இவ்வளவு வட்டி கிடைக்கும் என்று மதிப்புப்போட்டதற்கு அதிகமாக வட்டி கிடைப்பது.

(2) க்ரமமான ப்ரீமியத்தைவிட சிலகாரணங்களை முன்னிட்டு அதிக ப்ரீமியம் வாங்குதல்.

(3) மரணவிகிதம் குறைவாயிருப்பது.

(4) இன்ஷ்யூர் செய்தவர்கள் ப்ரீமியம் கட்டாமல் நின்றுபோய் அதுவரையில் கொடுத்த பணத்தில் மீதம் ஏற்படுதல். அப்படி நின்றவர்களுக்கு ஸர்ரண்டர் வால்யூ என்று, செலுத்தின பணத்தில் ஒரு பாகம் கொடுத்துவிட்டது போக மிச்சம் ஏற்படுவது.

(5) லாபத்தில் பங்கு பெறாத பாலிஸிகளால் அந்த லாபம் கம்பெனிக்குச்சேருவது.

(6) ஸொத்துகள் வாங்கி விற்றதினால் ஏற்படும் லாபம். ஒரு குறிப்பிட்ட கம்பெனிக்கு ஒரு குறிப்பிட்டகாலத்தில் இந்தக் காரணங்களால் எவ்வளவு லாபம் கிடைக்குமென்பது ஷை கம்பெனியினுடைய அமைப்பையும் அது அனுஸரிக்கும் முறைகளையும் பொறுத்ததாயிருக்கிறது. வெகு நாளாய் ஏற்பட்டு நடந்து வருவதும், தகுந்த ரிஸர்வுபண்டு உள்ளதும், இன்ஷ்யூர் செய்யத்தகுந்தவர்களை கூடியமட்டும், ஸரியானபடி தெரிந்தெடுத்து இன்ஷ்யூர் செய்வதும், புதுவிதமான இன்ஷ்யூரென்ஸ்கள் மிதமாகச் செய்து வருகிறதுமான ஒரு இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிக்கு மேலே சொன்ன லாபம் வரக்கூடிய அம்சங்கள், எழுதியுள்ள வரிசைக்ரமப்படி முதலில் சொன்னது ரொம்ப முக்யமாயும் அதற்கடுத்தது இரண்டாவதாயும் இப்படியே அடுத்தவைகள் அடுத்தபடி முக்யமாயும் இருக்கும் என்று சொல்லலாம்.

## Tips for Agents.

எஜெண்டுகளுக்கு சில குறிப்புகள்.—சென்ற மார்கழி, மாசி, பங்குனி மாஸத்திய ஸஞ்சிகைகளில் இன்ஷ்யூரென்ஸ் ஏஜெண்டுகளுக்கு உபயோகப்படும் படி சில குறிப்புகள் வரைந்திருந்தோம். அவைகளோடு ஏஜெண்டுகளுக்கு உபயோகப்படக் கூடிய இன்னம் சிலகுறிப்புகள் கீழே தருகிறோம்.

1. பணமில்லாத ஜனங்களை இன்ஷ்யூர் செய்யும்படி தூண்டுவதில் வீணாக ச்ரமப்படாதே.

2. காலேஜ்களிலிருந்து படிப்பை முடித்துவிட்டு வெளியேறின வாலிபர்களை இன்ஷ்யூர் செய்யும்படி தூண்டுவதில் வீண்பொழுது போக்காதே. அவர்கள் எல்லாரும் தாங்கள் நூறு வருஷகாலம் வாழ்ந்திருக்கப்போவதாக எண்ணியிருப்பவர்கள்.

3. நீயே எல்லாவற்றையும் பற்றி சும்மாபேசிக் கொண்டிராதே. ப்ராஸ்பெகட்ஸைகையில் கொடுத்து, அதை வாங்கினவர் அதைப்பார்த்து என்ன சொல்லுகிறார் என்பதைப் பார். ஒன்றும் ஸரியாய் பதில் சொல்லாதவர்களை இன்ஷ்யூர்செய்யும்படி கேட்பது ச்ரமமான கார்யம்.

4. தனிமையாய் ப்ரம்ம சாரியாய் இருக்கிறவரை இன்ஷ்யூர் செய்யத் தூண்டுவதை விட குழந்தை குட்டிகள் உள்ள ஒரு ஸம்ஸாரியை இன்ஷ்யூர் செய்யும்படி தூண்டுவது எளிது.

5. ஒரு ஸமூகம் அல்லது ஒருஜாதியில் ஒருபெரிய மனிதன் இறந்துபோனால் அப்போது அந்த ஜாதி ஜனங்களிடத்தில் போய் இன்ஷ்யூரென்ஸ் ஸம்பந்தமாய் பாடுபடுவது நல்லது.

6. வாழ்நாள் இப்படிப்பட்டது என்பதை யறிந்திருப்பதோடு, தமக்குத் தெரிந்தவும், பந்து அல்லது ஸ்நேகிதருமான சிலர் இறந்துபோனபோது கூட இருந்தவரை இன்ஷ்யூர் செய்யத்தூண்டுவது ஸுலபமானது. ஏனெனில் அவர் வாழ்நாளின் அநித்யத்தை நன்கு அறிந்திருப்பார்.

7. யாராவது ஒருவர் இறந்துபோனால் அப்போது அனுதாபம் காட்டியும் மரியாதையாயிருந்தும் வரவேண்டும். அவருடைய குடும்பத்தாரிடம் இன்ஷ்யூரென்ஸ் ஸம்பந்தமாக ஒன்றும் பேசவேண்டாம். அவருக்குப் பக்கத்து வீட்டுக்காரர்களிடமும் அந்தத் தெருவார்களிடமும் இன்னார் இறந்துபோய் விட்டாரென்ற விஷயத்தை ஆதாரமாகவைத்துக் கொண்டு இன்ஷ்யூர் செய்தல் விஷயமாகப் பேசவேண்டும்.

8. 40 வயஸுக்குக் கிட்டத்தட்ட உள்ளவர்களை இன்ஷ்யூர் செய்வது எளிது. மனிதருக்கு ஏற்பட்டுள்ள ஆயுஸு பரிமாணம் ரொம்பக் குறைவு என்பதை அவர்களுக்கு ரூபித்து நிர்ணயிக்கவேண்டியதில்லை. அவர்களுக்கு அந்தவிஷயம் நன்றாய்த் தெரிந்திருக்கும்.

# EDUCATION.
# வித்யா விஷயம்.

## An Agricultural School.

ஒரு விவஸாய பள்ளிக்கூடம்:—இந்த மாஸம் 7-ம் தேதியன்று பெங்களூரில் ஒரு விவாஸய பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் பள்ளிக்கூடத்தில் விவஸாயத்தொழிலை ப்ரத்யக்ஷமாய்ச் செய்துகாட்டியும் புஸ்தகமூலமாயும் கற்பிப்பார்களாம். விவஸாயத் தொழிலைக் கற்கவருபவர்களுக்கு சம்பளம் கிடையாது. ஜாகை வாடகையன்னியில் கொடுக்கப்படும். சாப்பாட்டுக்காக மட்டும் பணம் வாங்கப்படும். மாணவர்கள் இந்தப் பாடசாலையில் இரண்டு வருஷம் படிக்க வேண்டுமாம். ஆனால் மாணவர்களுக்கு விவஸாய சாஸ்த்ரத்தில் இன்னும் அதிக தேர்ச்சி பெற விருப்பமிருந்தால் அதற்கு வேண்டிய ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கப்படும். முதல் வருஷத்தில் விவஸாயம், எலிமெண்டரி பிஸிக்ஸ், ரஸாயன சாஸ்த்ரம் (கெமிஸ்ட்ரி) உயிர் நூல் (பயாலஜி) முதலியவைகள் கற்பிக்கப்படும். இரண்டாவது வருஷம், விவஸாயம், எகனமிக்பாடனி (உபயோகமுள்ள அதாவது விலை போகக்கூடிய மரஞ்செடி கொடிகளைப்பற்றிய தாவரசாஸ்த்ரம்), மைகாலஜி (காளான்களைப்பற்றிய சாஸ்த்ரம்), விவஸாய இஞ்சினியரிங், அதாவது விவஸாய ஸம்பந்தமாக, பாசனம் வடிகால் முதலிய வேலைகளைப்பற்றிய விஷயங்கள், ம்ருகவைத்ய சாஸ்த்ரம் ஆகிய இவைகள் கற்பிக்கப்படும். 20 மாணாக்கர்கள் பாடசாலையில் சேர்ந்திருக்கிறார்கள்.

## Shorthand and Typewriting.

ஷார்ட் ஹாண்டும் டைப் ரைட்டிங்கும்:—ஷார்ட் ஹாண்டையும் டைப் ரைட்டிங்கையும் ஸ்கூல் லீவிங் ஸர்டிபிகேட் பரீட்சைக்குப் பிள்ளைகள் தங்கள் விருப்பம்போல் எடுத்துக்கொள்ளும் இரண்டு இஷ்ட பாடங்களாய்ச் செய்துவிடலாமென்று சென்னை வித்யா டிரெக்டர் டாக்டர்போர்ன் கவர்ன்மெண்டாருக்கு சிப்பார்சு செய்திருந்தார். கவர்ன்மெண்டார் அவர் செய்த சிபார்சை ஏற்று அந்த பாடங்களை இரண்டு தனிப் பாடங்களாக பிரிக்கக் கூடாதென்றும், அவைகள் இரண்டும் சேர்ந்து ஒரே பாடமாக இருக்கவேண்டுமென்றும், பிள்ளைகள் அவைகளிரண்டையும் சேர்த்து ஸ்கூல் லீவிங் ஸர்டிபிகேட் பரீட்சைக்கு ஒரு இஷ்ட பாடமாக எடுத்துக்கொள்ளலாமென்றும், உத்தரவு செய்து விட்டார்கள். கவர்ன்மெண்ட் டெக்னிகல் பரீட்சைகளுக்கு எலிமெண்டரி க்ரேடில் ஷார்ட் ஹாண்டிலும் டைப்ரைட்டிங்கிலும் கேட்கப்படும் கேள்விகளை யொப்பவே அவ்விரண்டு பாடங்களும் சேர்ந்த ஸப்ஜெக்ட்டில் ஸ்கூல் லீவிங் ஸர்ட்டிபிகேட்டுக்குக் கேட்கப்படும் கேள்விகள் இருக்கவேண்டுமென்றும், அந்தக்கேள்விகளை விட கடினமாகவோ, எளிதாகவோ கேள்விகளிருக்கக் கூடாதென்றும், வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

## Notes of Lessons.

பாடக் குறிப்புகள்:—சென்ற மாஸத்தில் "பாடக் குறிப்பு" என்னும் வ்யாஸத்தைப்பற்றி ஒரு ஆராய்ச்சி எழுதியிருந்தோம். பாடக்குறிப்பில் எழுதப்படும் முறையும், கரும்பலகைச் சுருக்கமும் என்னென்ன லக்ஷணங்களுடன் இருக்கவேண்டுமென்பதை அந்த வ்யாஸத்திலிருந்து எடுத்துத்தருகிறோம்.

"முறை—(1) உபயோகிக்கும் முறையானது வகுப்பிற்கேற்றதாயிருக்கவேண்டும். (2) போதிக்கும் விஷயத்தைப் பல பாகங்களாகப் பிரித்துப்போதிக்கும் மாதிரியை அப்பாகங்களுக்கு நேராக முறைக் காலத்தில் (காலம்-பத்தி) தனித்தனியாய்க் காட்டியிருக்கவேண்டும். (3) முறைக் காலத்தில் உதகரிக்கவேண்டிய விதத்தையும் வியாக்யானம் செய்யும் மாதிரியையும் விடைகளை வருவிக்கும் வழிகளையும் மனதில்பதியவைக்க உபயோகிக்கும் தந்த்ரங்களையும் விஸ்தாரமாய்க் காட்டவேண்டும். (4) பாடத்தின் நடுவில் பரீக்ஷிக்க வேண்டிய இடங்களிலெல்லாம் பக்கத்தின் குறுக்கே கோடுகிழிக்கவேண்டும். (5) பாடக்கடைசியில் தொகுத்துப் பரீக்ஷிக்கும் விதத்தையும் குறிக்க வேண்டும்."

" கரும்பலகைச் சுருக்கம் (1) கரும்பலகையில் எழுதும் விஷயங்கள் ஒரு க்ரமத்தை யனுசரித்திருக்கவேண்டும். (2) வாக்கியங்கள் சுருக்கமாயிருக்கவேண்டும். சில வேளைகளில் தகுந்த தலைப்புகளின் கீழ் விஷயங்களைப் பதங்களாலும் தொடர்மொழிகளாலும் காட்டுவது மிக நலம். (3) விஷயத்தின் பாகங்களைத் தனித்தனியாக எழுதவேண்டும். ஒவ்வொன்றுக்கும் நடுவில் தகுந்த இடம் விட்டும் சமயத்திற்குத்தகுந்தாற்போல் சில இடங்களில் பெரிய எழுத்தாகவும் சில இடங்களில் சிறிய எழுத்தாகவும் எழுதி முக்யமான இடங்களில் கீற்றிட்டு ஓரங்களில் இடம் ஒதுக்கிச் சுருக்கம் தயார்செய்வது போதனைக்கு மிக அநுகூலமாகும். (4) கடைசியில் நடந்த பாடங்களின் சுருக்கம் அமைக்கவேண்டும்."

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

### Soya Beans.

ஸோயா அவரை.—ஸோயா என்னும் அவரை சீனா ஜப்பான் தேசங்களில் வெகுவாய்ப் பயிரிடப்படுகிறது. இந்தியாவில் அது அவ்வளவாகப் பயிரிடப்படுவதில்லை. வடக்கே டார்ஜிலிங் ப்ரதேசத்தில் மாத்ரம் சிறிதளவு பயிர் செய்கிறார்களாம். இதன் ஸாகுபடியை வ்ருத்தி செய்வதற்கு சில தடைகள் இருக்கின்றன. இப்போது பயிர் செய்யப்படும் ஸோயா அவரையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முயன்றதில் வ்யாபாரிகள் தக்க விலைகொடுத்துவாங்க முன் வருவதில்லை என்று சொல்லப்படுகிறது. ஜனங்கள் இதை ஆகாரத்துக்கு உதவும் ஒரு தான்யமாக உபயோகிக்க இன்னம் முன்வரவில்லை. மேலும் ஸமபூமிகளில் இதைப் பயிர் செய்வதில் சங்கடம் இருக்கிறது. இரண்டு பருவம் முழுவதும் இது நிலத்தில் பயிராக நிற்பதாலும், இது பலன் கொடுப்பதற்குமுன் கடைசி இரண்டு மாஸத்தில் இதனால் எலி உபத்ரவம் ரொம்ப அதிகமாக இருப்பதாலும் இதை விவஸாயிகள் வெகுவாய் பயிரிடப் பிரியப்படுவதில்லையாம்.

### Indian Gum Arabic Tree.

கருவேல மரம்.—இந்தமரம் ஸாதாரணமாய் க்ராமத்தின் அருகிலும் படுகைகளிலும் வளர்கிறது. இதற்கு அதிக ஈரம் கூடாது. கடலோரங்களில் இது நன்றாய் வளர்வதில்லை. இந்த மரத்திலிருந்து உண்டாகும் பிசின் துணிகளில் வர்ணம் அச்சிடுவதிலும் இன்னம் மற்ற கைத்தொழில்களிலும் உபயோகப்படுகிறது. இது மருந்துகளிலும் சிறிது உபயோகப்படுகிறது. கம் அரபிக் என்னும் ஒருவகைப் பிசினுக்குப் பதிலாக இதை சில ஸமயங்களில் உபயோகிக்கலாம்.

இந்த மரத்தின் பட்டை தோல் பதனிடுவதில் ரொம்பவும் உபயோகப்படுகிறது. இதிலிருந்து ஒருவித சாயம் செய்கிறார்கள். இந்தப்பட்டை மருந்து சரக்காகவும் உபயோகப்படுகிறது. பட்டை சாராயம் செய்வதிலும் இதை உபயோகிக்கிறார்கள். கருவேலங்காயில், தோல் பதனிடுவதற்கு வேண்டிய டான்னின் என்னும் ஸத்து அதிகம் இருப்பதாலும், இதை உபயோகித்து தோல் பதனிட்டால் தோலின் நிறம் நன்றாயும் ஒரே சீராயும் இருப்பதாலும் இதைஉபயோகிக்கும் விஷயத்தைப்பற்றி அநேகர் யோசித்து வந்திருக்கிறார்கள். இதன் இலையும் தோல் பதனிட உதவும். இதன் மரம் ரொம்ப உறுதியாயும், அதிக நாள் உபயோகப்படக்கூடியதாயும் இருக்கிறது. விவஸாய கருவிகள் செய்வதில் இது அதிகம் உபயோகப்படுகிறது. ஸிந்து, பஞ்சாப், ப்ரதேசங்களில் இந்த மரமானது அரக்குப் பூச்சி வ்ருத்தி செய்வதில் ரொம்பவும் உபயோகப்படுகிறதாம். இதன் சிறு குச்சிகள் பல் துலக்க மிகவும் ச்ரேஷ்டமானது.

### A New Use for Plantain Stem.

வாழை மரத்துக்கு ஒரு புது உபயோகம்.—நம்மவர்களில் அநேகர் வாழைமரத்தின் பட்டைகளைச் சீவி இலையாகத்தைத்து உபயோகிக்கிறார்கள். மரத்தின் மேலேயுள்ள பட்டைகள் காய்ந்துபோனால் அதுவும் இலையாக உதவுவதோடு, மூக்குப்பொடி வைத்துக் கட்டவும் உபயோகப்படுகிறது. சில இடங்களில் பட்டையின் ஓரத்திலுள்ள பூ நார்களை எடுத்து ஸாமான்கள்கட்ட பலசரக்குக் கடைகளில் உபயோகிக்கிறார்கள். ஆயினும் அநேக இடங்களில் வாழை மரத்தில் காயை வெட்டின பிறகு, கட்டையை எறிந்து விடுகிறார்கள். இப்பொழுது அது கடுதாசி செய்வதற்கு ரொம்பவும் உபயோகப்படலாம் என்று சொல்லப்படுகிறது. வாழைப் பட்டையில் அதிக நார் இருப்பதால் அதை கடுதாசி செய்வதற்கு உபயோகிப்பதைப்பற்றி ஆலோசித்து வருகிறார்கள். ஒரு ஏகர் நிலத்தில் பத்துமாஸத்துக் கொருதடவை 2-டன் கடுதாசிச் சோறு கிடைக்கும் என்றும், தற்போது உபயோகப்பட்டுவரும் பைன் என்னும்மரம் 60 வருஷத்துக்கொருதடவை வெட்டப்பட்டு ஏகருக்கு 30 டன் அதாவது, வருஷத்துக்குஏகருக்கு ½ டன்தான் கிடைக்கிறதென்றும், ஆகையால் வாழைமரத்திலிருந்து கிடைக்கும் சோறு அதிகமாக இருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். வாழை மரத்தின் பட்டைகளால் கடுதாசி செய்வது ஸாத்யமாகுமானால், நமது தேச விவஸாயிகளுக்கு வாழைக்கட்டைகளை விற்பதாலும் நல்லபணம் கிடைக்கும் என்று சொல்லலாம். ஜப்பானிய விவஸாயிகள் தங்கள் ஒழிவு நேரங்களில் நார்ச்செடிகளைக்கொண்டு கடுதாசி செய்து நல்லலாபம் அடைவதுபோல் நமது தேசத்து விவஸாயிகளும் தங்கள் ஒழிவு நேரங்களில் வாழை முதலிய மரஞ் செடிகளின் நார்களிலிருந்து கடுதாசி செய்ய ஒரு ஸுலபமான முறைகண்டு பிடிக்கப்படுமானால் நமது விவஸாயிகளின் பொருளாதார நிலைமை மேன்மையடையுமென்பதில் ஸந்தேகமில்லை.

# BUSINESS METHODS.
# வ்யாபார முறைகள்.

**Essentials to Success.**

கடைத்தேறுவதற்கு வேண்டிய அம்சங்கள்.—ஒரு வ்யாபாரம், தொழில், அல்லது கார்யத்தில் வித்தி ஏற்படுவதற்கு வேண்டிய முக்யமான அம்சங்களில் ஒன்று, எடுத்துக்கொண்ட கார்யம் அல்லது தொழிலில் அக்கரையோடு வேலைசெய்வது. அதற்கு அடுத்த படியாயுள்ளது முயற்சி. அதற்கடுத்தது, ஒழுங்காய் ஏற்பாட்டுடன் வேலை செய்தல். ஒரு வாலிபனுக்குதனது வேலையில் அக்கரையில்லாவிட்டால் அவனுக்குக் கார்யவித்தி ஏற்படாது. எடுத்துக்கொண்டதொழிலில் பூரா மனஸையும் செலுத்தி உழைத்தால் தான் கார்யவித்தி ஏற்படும்.

**Retail Trading.**

சில்லரை வ்யாபாரம்.—சில்லரை வ்யாபாரம் செய்பவர் தமது வ்யாபாரம் நன்ருக வ்ருத்தியாக வேண்டுமென்ருல் தமது பக்கத்துக் கடைக்காரனிடம் வ்யாபாரம் செய்ய வருபவர்களை தமது கடைக்கு வரும்படி செய்து கொள்ள வேண்டும். இப்படிச்செய்வது ரொம்ப காலத்து அனுபோகத்தால்தான் ஸாத்யமாகும். முதலாவது கடைக்காரர் தமது ஊர் அல்லது ப்ரதேசத்து நிலைமைகளை நன்ருய் அறிந்து கொள்ளவேண்டும். அந்த ஊர் (அல்லது ப்ரதேசத்து) ஜனங்களுடையதேவைக்குத் தகுந்தபடி ஸாமான்களை வாங்கிவைக்க வேண்டும். ஜனங்களோடு பந்துத்வம் ஸ்நேஹிதம் இவைகளை உதவியாகக் கொண்டு தமது வ்யாபாரத்தை அதிகமாக்கலாம். தம்மிடம் வ்யாபாரம் செய்யவரும் ஜனங்களுக்கு எந்த ஸாமானில் ப்ரீதியோ, எந்த வகைகளில் விருப்பமோ, அதற்கிணங்கத்தொழில் செய்து லாபம் அடையலாம். எப்போதும் ஒரு குறிப்பிட்ட கரார் விலைக்கு தமது ஸாமான்களை விற்பதோடு, கொடுத்த விலைக்கு எவ்வளவு நல்ல ஸாமான் கொடுக்கலாமோ அவ்வளவு நல்லதாய் விற்று வரவேண்டும்.

**Business Manners.**

வ்யாபாரத்தில் மர்யாதை.—நமது தேசத்தில் அநேக வ்யாபாரிகள் தங்களிடம் வ்யாபாரம் செய்கிறவர்களிடத்தில் அச்ரத்தையாயிருப்பதாலும், அவர்களிடத்தில் சிலவேளைகளில்ரொம்பவும் முரட்டுத்தனமாய் நடந்துகொள்வதாலும் வாங்கவருபவர்கள் அவர்களுடைய கடைகளுக்குத் திரும்பவும் வராமலிருந்து விடுகிருர்கள். இதனுல் கடைக்காரருக்கு வாடிக்கைக்காரர்கள் அதிகரிப்பதற்கு இடமில்லாமல் போகிறது. வ்யாபாரம் ஸரியாய் நடந்தேறுவதற்கு விவேகம், வ்யாபார தந்த்ரம், நாணயம் ஆகிய இவை எப்படி அவச்யமோ, அப்படியே ஸமயோசிதமாய் நடந்து கொள்ளுதலும், பொறுமையும், மரியாதையும் வ்யாபாரத்துச்கு அவச்யம் வேண்டியனவாகும்.

இவை எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாயுள்ளது காலதேசவர்த்தமானத்துக்கேற்றபடி சாதுர்யமாய்க் நடந்துகொள்வதுதான். அதனுடன் விவேகமும் கார்யத்தில் பழக்கமும் இருந்தால் போதும். வ்யாபாரி, தன் கடைக்கு வருகிற புதுமனிதரிடம் எப்படி நடந்துகொள்வது, அவருக்கு எந்த ஸாமான்களில் அதிக ப்ரியம், அவருக்கு என்ன ஸாமான்கள் வேண்டியிருக்கும் என்று எப்படியறிகிறது என்பவைகளைக் கற்றுக்கொள்ளவேண்டும். வந்தவர் மனவில் ஸாமான்களில் ஒரு விருப்பம் ஏற்படும்படி நடந்துகொள்ள வேண்டும்.

வ்யாபாரி சொல்லுவதை வாங்கவந்தவரும் அங்கீகரித்து விட்டால் அதுவே வ்யாபாரம் ஸரியாய் நடப்பதற்கு அஸ்திவாரமாகும். எந்தக்காரணத்தைக் கொண்டும் வ்யாபாரிக்கும் வாங்கவருபவருக்கும் அபிப்ராயபேதம் உண்டாகக் கூடாது. வ்யாபாரவிஷயங்களையறிந்த ஒரு வ்யாபாரி தம்மிடம் வாங்க வருபவர்களிடத்தில் எப்போதும் மரியாதையாயும் வினயமாயும் நடந்துகொண்டு வந்தால் அவருடைய வ்யாபாரம் நன்ருய் நடந்துவரும் என்று சொல்லலாம்; எந்தக்கடையில் வாங்கவருபவர்களை ஸரியாய்கவனிக்கிருர்களோ எங்கே ஸௌகரியமாய் வாங்கலாமோ, அந்தக்கடையில்தான் ஜனங்கள் வாங்கப்போவார்கள். வாங்க வருபவர்களிடத்தில் கடைக்காரர் எள் என்பதற்கு முன்னுல் எண்ணெயென்றிருந்து அவர்களுடைய தேவைகளை யறிந்து நடப்பதாக அவர்களுக்குத்தெரிந்தால் அடிக்கடி அதேகடைக்கு வருவார்கள். வாடிக்கையாய் வாங்குபவர்கள் எபபோதும் தம்மிடத்திலேயே வாங்கவேண்டுமெனபதே எல்லா வ்யாபாரியினுடைய நோக்கமாயிருக்கவேண்டும். வ்யாபாரியாவது, வாங்கவருபவராவது அச்ரத்தையாக விருந்தால் வ்யாபாரம் மற்ற காரணங்களால் ஏற்படுவதைவிட அதிகமாக நஷ்டமடையும்.

# SCIENCE, MACHINERY AND INVENTION.

## சாஸ்த்ரமும், யந்த்ரங்களும், நூதன கற்பிதமும்.

### A Wheat Threshing Plant.

கோதுமையைப் போரடிக்க ஒரு யந்த்ரம்:—வடக்கே கான்பூரில் கோதுமையின் தாளைப் போரடிக்கிறதற்கு ஒரு யந்த்ரம் தருவித்திருக்கிறார்கள். ஒருமணிக்கு 12 மணங்கு தான்யம் போரடிக்கிறதாம். கான்பூரிலுள்ள பண்ணையில் ஜனங்களுக்கு இது போரடிப்பதைக்காட்டினார்களாம். இப்போது பண்ணையில் வேலை முடிந்து விட்டபடியால் அதை பக்கத்து க்ராமங்களுக்குக் கொண்டுபோய் வாடகைக்கு விடுகிறார்களாம். ஒரு மணங்கு கோதுமை தான்யம் போரடித்து எடுத்தால் அதற்கு 4 அணா சார்ஜாம். இந்தமாதிரி நெல் பயிருக்கு யந்த்ரம் இருந்தால் எவ்வளவு ஸௌகர்யமாயிருக்கும்?

### Hot Ice.

உஷ்ணமான பனிக்கட்டி.—பனிக்கட்டி எப்போதும் ஜில்லென்றிருப்பது வழக்கம். ஆனால் ஸமீபத்தில் அமெரிக்காவிலுள்ள ஒரு ஸயன்ஸ் ப்ரொபஸர் உஷ்ணமான பனிக்கட்டி புதிதாய் செய்திருக்கிறாராம். அந்தப் பனிக்கட்டி பாரென்ஹெயிட் தர்மாமிட்டர்படி 173-டிக்ரியுள்ளது. அந்தப் பனிக்கட்டி தேகத்தில் பட்டால் தோலானது வெந்து போகுமாம்.

### Washing Clothes by Electricity.

மின்ஸாரத்தினால் துணிவெளுத்தல்:—ஸமீபத்தில் ஒரு துணி வெளுக்கும் கம்பெனியார் துணி வெளுக்கும் யந்த்ரம் ஒன்று புதியதாய்ச்செய்து பேட்டெண்ட் செய்திருக்கிறார்கள். இந்த யந்த்ரத்தில் மின்ஸாரம் உபயோகிக்கப்படும். மின்ஸாரத்தினால் துணி வெளுப்பதற்கு உபயோகிக்கவேண்டிய ஸோப்பு ரொம்பக் குறைந்து விடுவதோடு காலமும் அதிகம் பிடிப்பதில்லையாம்.

### A Mosquito Trap.

கொசுக்களை அழிக்க ஒரு வழி:—கொசுக்களால்தான் மலேரியா என்னும் விஷஜ்வரம் பரவுகிறதென்று கண்டு, வைத்ய டிபார்ட்மெண்டார் கொசுக்களை நிவர்த்திக்க உபாயங்கள் தேடிவருகிறார்கள். சதுப்பான இடங்களிலும், சாக்கடைத்தண்ணீர் அதிகமாய் தங்கியுள்ள இடங்களிலும், இன்னம் மற்ற அசுத்தமான இடங்களிலும் கொசுக்கள் வ்ருத்தியடைகின்றன. இப்படிப்பட்ட இடங்களை கூடியமட்டும் சுத்தமாய் வைத்துக்கொண்டிருந்தால் காய்ச்சல் வருவதற்கு ஸந்தர்ப்பங்கள் அதிகம் நேரா. இதோடு கொசுக்களைப் போக்க ஒரு உபாயம் கண்டு பிடிக்கப்படிருக்கிறது.

கடுதாசியின் ஒரு பக்கத்தில் ஒருவித பசையைத் தடவி அந்தக் கடுதாசியை ஈக்கள் அதிகம் உள்ள இடங்களில் வைத்தால் ஈக்கள் அந்தப் பசையின் மேல் உட்கார்ந்து அதில் ஒட்டிக்கொண்டு அதில் மாண்டு போகின்றன. இந்த விதம் தயார் செய்த கடுதாசியை அநேகர் உபயோகித்தும்,உபயோகிப்பதைப் பார்த்தும் இருக்கலாம். இதில் அனுஸரிக்கப்படும் கொள்கைகளை அனுஸரித்து கொசுக்களுக்கும் ஒரு வித பொறி தயார் செய்யப்பட்டிருக்கிறது. ஆறங்குலம் நீளமுள்ளதும், 1 அங்குலம் குறுக்களவு உள்ளதுமான ஒரு கண்ணாடிக் குழாயை எடுத்து அதின் உள்புறம் ப்ரகாசம் கொடுக்கக்கூடிய ஒரு வித வர்ணத்தைப் பூசிவிடவேண்டியது. பிறகு குழாயின் இரண்டு நுனிப்பக்கங்களையும் நன்றாய் மூடிவிடவேண்டும். ஈக்களைப் பிடிப்பதற்கு உதவும் பசையைப் போன்ற ஒரு பசையை குழாயின் வெளிப்புறத்தில் தடவிவிடவேண்டும். பிறகு அந்தக்குழாயை வேண்டிய இடத்தில் கயிற்றில் கட்டித் தொங்கவிடவேண்டும். இந்தக் குழாயை பகலில் வெளிச்சத்தில் வைததிருந்தால், அதிலுள்ள வர்ணமையானது வெளிச்சத்தை க்ரகித்து வைத்து இரவில் வெளிச்சம் கொடுக்கிறது. இரவில் அது கொடுக்கும் மங்கின வெளிச்சத்தைக்கண்டு கொசுக்கள் அதனண்டை வந்து, அது சுடாதாகையால் அதன்மேல் உட்காருகின்றன. வெளிப்புறம் பசையிருப்பதால் அதில் ஒட்டிக்கொள்ளுகின்றன. குழாயை வேண்டுமானால் சில நாட்கள் அப்படியே வைத்திருக்கலாம். இல்லாவிட்டால் தினம் காலையில் பசைமேல் பிடித்திருக்கும் கொசுக்களை ஒரு நெருப்புக்குச்சி அல்லது வேறு மெல்லிய குச்சி கொண்டு சுறண்டிவிட்டு மறுபடியும் கொஞ்சம் பசை பூசிவிடலாம. அநேகர் இந்தக் குழாயைப் பரீக்ஷித்துபபார்த்து இது நன்றாயிருக்கிறதென்று சொல்லுகிறார்களாம். உள்ளேயிருக்கும் வர்ணமையின் ப்ரகாசம வெகுகாலம் குறையாமலிருக்குமாதலால் அதற்காக ஒரு தடவைக்குமேல் ஒன்றும செலவழிக்க வேண்டியதில்லை. கொசுக்கள் ஒட்டிக்கொள்வதற்கு உபயோகிக்கும் பசைதான் ஒரு சிறு டப்பி வாஙகவேண்டும். இதுவும் பலமாஸங்களுக்கு உபயோகத்துக்கு வரும்.

# LAW.
## சட்டம்.

### What is an Encroachment ?

ஆக்ரமிப்பு என்பதென்ன?—வீட்டுக்கு வெளியில் நிழலுக்காக நாம் தென்னங்கீத்து பந்தல் போடுவது ஸகஜம். இந்த பந்தல் சாக்கடை வரையில் மேல் கவிழ்ந்திருக்கலாம். அவ்வளவுதான். அதற்குமேலே ஒருஅங்குலம் தெருவின்மேல் நீண்டுகவிழ்ந்திருந்தாலும் ஆக்ரமிப்பு தான்என்று ஹைகோர்ட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், அது தெருவை நெருக்கடியாக்கிவிடுகிறதல்லவா? பப்ளிக்தெருவாக உபயோகப்பட்டுவருகிறதா இல்லையா என்பது கேள்வியேயன்று. இம்மாதிரி பந்தல்களை எடுத்துவிடும்படி முனிஸிபாலிட்டியார் ஸொந்தக்காரருக்கு நோட்டீஸ் கொடுக்கலாம்.

### A Partition Suit.

பாக வ்யாஜ்யம்.—ஒருவன் தன்தகப்பனுர்மேல் பாகவ்யாஜ்யம் செய்தான். அந்தஸமயம் தகப்பனுர் தமது பார்யாள் கர்ப்பவதியாயிருப்பதால் ப்ரஸவகாலம் வரையில் கேஸைத் தள்ளிவைக்கும்படி கோர்ட்டாருக்கு மனுசெய்து கொண்டார். இதைகவனிக்காமல் கேஸை விசாரித்த ஸப்ஜட்ஜ் ஸொத்தின் ஸரிபகுதியை தகப்பனுர் தன்மகனுக்குக்கொடுத்து விடவேண்டுமென்று தீர்மானித்தார். இந்தத் தீர்மானமாய் சில நாள்களுக்குள்ளாக அந்தம்மாளுக்கு ஒருஆண் குழந்தைபிறந்தது. தகப்பனுர் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். ஹைகோர்ட் ஜட்ஜ்கள் வாதி (மகன்), தகப்பன், பிறந்த குழந்தை மூவரும் ஸரியாய் ஸொத்தைப்பகிர்ந்து கொள்ளும்படி தீர்மானித்தார்கள்.

### Gift of Land to Daughter.

பெண்ணுக்கு நிலங்கொடுப்பது:—ஒரு தகப்பனுர் தமது பிதிரார்ஜிதமான ஸ்தாவர ஸொத்தில் கொஞ்சம் தமது பெண்ணுக்குக் கொடுத்தால் அது கல்யாண காலத்தில் கொடுக்கப்பட்டாலும் ஸரி, கல்யாண காலத்துக்குப்பிறகு கொடுக்கப்பட்டாலும் ஸரி, அந்தக்கொடை அவிபக்த குடும்பத்தைக் கட்டுப்படுத்தும். இ. லா. ரி. 35, மதராஸ் 628.

### Pondi Murder Case.

பாண்டிக் கொலைகேஸ்.—பாண்டிவைத்யனுதபிள்ளை தம்முடைய மருமகள் கொலையுண்ட விஷயத்தில் தூண்டுதலாயிருந்தாரென்று குற்றஞ்சாட்டப்பட்டு ஸெஷனுக்குக் கமிட்செய்யப்பட்டார். தஞ்சாவூர்ஸெஷன்ஸ் ஜட்ஜ் வைத்யனுதபிள்ளை குற்றவாளியென்று தீர்மானித்து, அவருக்கு மரணதண்டனை விதித்தார். அவர்சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொண்டார். அப்பீலைக்கேட்ட மூன்று ஜட்ஜ்களில் இருவர் குற்றவாளியென்றும் ஒருவர் குற்றவாளியல்லவென்றும் அபிப்ராயப்பட்டார்கள். மெஜாரிடி அபிப்ராயப்படி, ஸெஷன்ஸ் ஜட்ஜ் விதித்த மரணதண்டனை உறுதி செய்யப்பட்டது. அவர் ப்ரிவிகௌன்ஸிலுக்கு அப்பீல் செய்தார். இந்தக்கேஸை ப்ரிவிகௌன்ஸில் ஜூடிஷியல் கமிட்டியார் நான்குநாள் விசாரித்தார்கள். லார்ட் அட்கின்ஸன் கமிட்டிக்குத் தலைவராயும், மிஸ்டர் அமீர் ஆலி கமிட்டியில் ஒருவராயுமிருந்தார்கள். இந்தியா க்ரிமினல் கோர்ட்டுகளின் தீர்மானங்களில்தலையிட்டுஅவைகளைக் குலைத்தல் விரும்பத்தக்கதல்லவென்பதை ப்ரிவிகௌன்ஸில் ஜட்ஜ்கள் பூர்ணமாய் அறிந்திருந்தாலும், ப்ரஸ்தாபக்கேஸில் குற்றஞ்சாட்டப் பட்டவருடைய குற்றத்தை ருசுப்படுத்த நம்பக்கூடிய ஸாக்ஷ்யம் ஒன்றுமில்லாததாலும், கீழ்க்கோர்ட்டுகள்) ஏற்றுக்கொள்ளக்கூடாத ஸாக்ஷ்யங்களை ஏற்றுக்கொண்டபடியாலும் குற்றஞ் சாட்டப்பட்டவரை குற்றவாளியாகத் தீர்மானித்தது ஸரியல்லவென்று அபிப்ராயப்பட்டு, குற்றவாளியை ஜட்ஜ்கள் விடுதலைசெய்து விட்டார்கள். அப்பீல் தீர்மானமாகும்வரை திருச்சினுப்பள்ளி ஜெயிலில் வைத்யனுதபிள்ளை இருந்தார். ப்ரிவிகௌன்ஸிலின் தீர்மானம் வந்து இரண்டுவாரத்துக்குப் பிறகு பாரிஸ்டர் ஸ்வாமினுதன் ஹைகோர்ட் ஜட்ஜ் முன் இவ்விஷயத்தை ப்ரஸ்தாபித்து, பிள்ளை ஜயிலிலிருந்து விடுதலை பெற ஹைகோர்ட் உத்திரவைப் பெற்ருர். வைத்யனுதபிள்ளை விடுதலையடைந்து விட்டார். அவர் செல்வ வந்தராயிருந்து செலவை லக்ஷியம் செய்யாமல் மேலும்மேலும் அப்பீல் செய்திராவிட்டால் அவர் தூக்கிடப்பட்டிருப்பார். பணம் தான் அவரைக் காப்பாற்றியது என்று பாரிஸ்டர் நார்டன் பத்ரிகைகளுக்கு எழுதியிருக்கிருர். ஹைகோர்ட் ஜட்ஜ்மெண்டை ப்ரிவிகௌன்ஸிலிக்கு தந்தியடிக்கமட்டும் ரூ. 3000 பிடித்ததாம். கேஸில் எத்தனை பணம்செலவழிந்திருக்குமோ?

# MEDICINE.

## வைத்யம்.

### Lives on Milk Alone.

பால்மாத்ரம் ஆகாரம்:—பாரிஸில் மான்ஷ்யர் பியரேஷமால் என்று ஒரு கிழவர் இருக்கிறார். அவருக்கு இப்பொழுது 105 வயது ஆகிறது. அவர் சிறிய குழந்தையாயிருந்தபோது அவரைக் கையில் நெபோலியன் தூக்கி விளையாடியிருக்கிறாராம். இவர் தமது வாழ்நாளில் இரண்டு ப்ரெஞ்ச் சக்ரவர்த்திகள், மூன்று அரசர்கள், 10 ப்ரெஸிடெண்டுகள் இவர்களின் ஆட்சிகளைப் பார்த்திருக்கிறார். அவர் இப்பொழுது ஸுக தேகத்துடன் ஸௌக்யமாயிருக்கிறார். ப்ரான்ஸில் ஏழைகளுக்கு உதவ ஏற்பட்டிருக்கும் சட்டத்தின்படி அவருக்கு கவர்ன்மெண்டார் தினம் 30-ஸெண்டுகள் கொடுக்கிறார்கள். இவருடைய 60-வயஸிலிருந்து அவர் பால் மாத்ரமே சாப்பிட்டு வருகிறார். வேறொன்றும் ஆகாரமாகக் கொள்ளுவதில்லை.

### A Cure for Indigestion.

அஜீரணத்துக்கு ஒரு சிகித்ஸை.—இரைப்பையில் ஆகாரம் ஜீரணமாகாமல் தங்கிவிடுமானால், அதனால் நமக்குண்டாகும் பாதைகளதிகம். ப்ரஞ்ச் வைத்யரொருவர், இப்படி அஜீரணத்தா லவஸ்தைப்படுபவர்களை குழந்தைகள்போல் கைகளை ஊன்றி தவழ்ந்தோடச்சொல்லி, அவர்களின் இரைப்பைகளை எக்ஸ்ரே (X ray)போட்டோபடம் பிடித்துப் பார்த்ததில், ஆகாரம் சடுதியில் ஜீரணமாவதை அறிந்தாராம். இந்த முறையை அனுபவத்தில் பார்த்து உண்மையை நாம் அறிந்து கொள்ளலாம்.

### A New Cure for Plague.

ப்ளேக்குக்குப் புதிய மருந்து.—பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த லூடியானாவில் பிளேக் நோய் பரவியிருக்கிறது. அங்கே தர்ம கைங்கர்யம் செய்து வரும் ஸால்வேஷன் ஆர்மியைச்சேர்ந்தவர்கள் இந்த நோய் கண்டவர்களுக்கு 'டிங்க்சர் ஆப் ஐயோடின்' (Tincture of Iodine) மருந்தில் ஒரு துளியை ஜலத்தில் விட்டு உள்ளுக்குக் கொடுத்து, அதையே ப்யூபோ (கட்டி) மேலும் பூசினார்களாம். இந்த சிகித்ஸை செய்யப்பட்ட 51-பேர்களில் 50-பேர் சொஸ்தமானார்கள். கான்பூரில் இந்த மருந்தாலேயே 60 பேரில் 59 பேர் பிழைத்துக்கொண்டார்கள்.

இந்த மருந்து ஸாதாரணமானதால் இதை உபயோகித்துப் பார்ப்பார்களாக.

### Inoculation for Dysentery.

வயிற்றுக் கடுப்புக்கு அம்மை குத்துதல்.-வைத்ய நிபுணர்கள் புதிது புதியதாய் வ்யாதிகளுக்கு சிகித்ஸை முறைகளைக் கண்டுபிடித்து வருகிறார்கள். சிலர் வ்யாதிகளெல்லாம் நுட்பமான ஜீவராசிகளாலுண்டாகின்றனவென்றும், வ்யாதிஸ்தர்களின் ரத்தத்தை சாஸ்த்ரோக்தமாய் பரிக்ஷை செய்து அதிலுள்ள ஜீவராசிகளைப் பிரித்து சில ப்ராணிகளுக்கு அந்த வ்யாதியை உண்டாக்கி, அவைகளிலிருந்து பாலெடுத்து வ்யாதிஸ்தர்களுக்கு அம்மை குத்திவிட்டால் வ்யாதி மறுபடியும் வருவதில்லையென்றும் அபிப்ராயப்படுகிறார்கள். பிளேக் வ்யாதியைத் தடுக்க அம்மை குத்துவது நம்முடைய பத்ரிகை வாசிப்பவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஸமீபத்தில் வயிற்றுக் கடுப்புக்கு "எமிடைன்" என்ற மருந்தை அம்மைகுத்துவதால் அந்த வ்யாதி நீங்கிவிடுகிறதென்று ஒரு ஐரோப்பிய வைத்யர் கண்டு பிடித்திருக்கிறார்.

### Pure Coffee freed from Caffeine.

காபின் நீக்கப்பட்ட அப்படம் காப்பி.—காப்பி குடிக்கும் வழக்கம் நம்மவர்களுக்கு ஸர்வஸாதாரணமாய்விட்டது. காப்பியில் காபீன் (caffeine) என்ற விஷமிருக்கிறதாகவும், காப்பி சாப்பிடுகிறவர்களுக்கு இவ்விஷத்தால் பலவித நோய்களுண்டாகிறதாகவும் சில வைத்யர்கள் சொல்லியும், காப்பி குடிக்கும் வழக்கமுள்ளவர்கள் அதை விடாமலே யிருக்கிறார்கள். இவர்கள் காப்பி குடிக்காவிட்டால் தலைநோய் பாதை பொறுக்க முடிவதில்லையென்று சொல்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் நல்லகாலம் 'காபின்' என்ற விஷத்தைக் காப்பியிலிருந்து பிரித்துவிட புதிதாய் ஒரு வழிகண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. காப்பியிலிருந்து காபீனை அப்புறப்படுத்தப்படுவதால் காப்பியின் மணமாவது உற்சாகம் கொடுக்கும் குணமாவது குறைவுபடுவதில்லை. காப்பிகுடிப்பதால் தூக்கம்வராமல் அவஸ்தைப்படுகிறவர்களும், பலஹீனமானவர்களும், குழந்தைகளும் இனிமேல் காப்பியின்மேலே பழிகூறுவதற்கில்லை. காப்பியினால் கெடுதல் ஒன்றுமுண்டாகாது. காபீன் என்ற விஷத்தையும் சிலர் விலைக்கு வாங்கிக்கொள்கிறார்களாம். ஆகையால் காப்பி எப்பொழுதும் விற்கும்விலைக்கே அகப்படும்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### A Cross-examination.

ஒரு குறுக்கு விசாரணை:—

ஜட்ஜ்: இது உம்முடைய கையெழுத்தா பாரும்.

ஸாக்ஷி:—எனக்குத் தெரியாது.

ஜட்ஜ்:—நன்றாய்க் கவனித்துப்பாரும்.

ஸாக்ஷி:—நிச்சயமாய்ச் சொல்ல முடியாது.

ஜட்ஜ்:—(கோபமூண்டு)ஸரி, தாமஸம்வேண்டாம், (கடிதத்தில்) கையெழுத்துப்போடும் பார்ப்போம்.

ஸாக்ஷி:—நான் வித்வானல்ல ஐயா, எனக்கு எழுதத்தெரியாது.

### Detestation for Onions.

வெங்காயத்தின்மீது வெறுப்பு:—காலஞ்சென்ற நமது ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்திக்கு வெங்காய வாஸனையே யாகாதாம். ஒரு நாள் அவர் தம் வேலையாட்களைத் தனித்தனியே கூப்பிட்டு வெங்காயம் வாஸனை அவர்களிடமிருப்பதற்காக கோபித்துக்கொண்டாராம். சற்று நேரத்திற் செல்லாம் ஒருவன் வர "நீ வெங்காயம் சாப்பிட்டிருக்கிறாய் இது நிச்சயம்." என்றாராம். அன்று முதல் சமையலில் வெங்காயம் சேர்க்கக்கூடாதென்று பரிசாரகனுக்கு உத்திரவு செய்யப்பட்டது.

### A Deceitful Advertisement.

ஒரு மோச விளம்பரம்:—ஒரு பத்திரிகையில் ஒரு பேர் வழி, "ஸ்தூலத்தை நிச்சயமாய் நிவர்த்திக்கும் வழி, 10 ஷில்லிங் அனுப்பினால் உடனே தெரிவிக்கப்படும்" என்று விளம்பரம் செய்திருந்தான். மிஸ்டர் க்ளார்க் என்பவர் இவ்விளம்பரத்தை ஸ்தூல சரீரமுள்ள தன் மனைவியிடம் காண்பித்தார். பத்து ஷில்லிங் மணியார்டர் அந்த அம்மாள் அனுப்ப, அதற்கு, "அதிகமாயுள்ள கொழுப்பை சவர்க்காரம் விற்கிறவனிடத்தில் விற்றுப்போடு" என்று பதில் கிடைத்தது. மிஸ்டர் க்ளார்க் பதில் கடிதத்தைப்பார்த்து, "ஆ! என்ன ஸாமர்த்யமான திருட்டுப்பயல்! எவ்வளவு ஸுலபமாய் நம்மை ஏமாற்றிப்போட்டான், பார்த்தாயா!" என்று தாம் ஏமாந்து போனதற்கு விஸனப்பட்டார்.

### A Child's Query.

ஒரு குழந்தையின் கேள்வி.-குழந்தை:—தாத்தா, சிங்கங்கள் மோக்ஷலோகத்துக்குப் போகுமோ?

தாத்தா:—போகாது.

குழந்தை:—ஸரி, ரொம்பபக்தியா யிருக்கிறவர்கள்?

தாத்தா:—நிச்சயம் போவார்கள். என்கேட்கிறாய்?

குழந்தை:— ஸரி, ரொம்ப பக்தியாயிருக்கிறவரை ஒரு சிங்கம் தின்றுவிட்டதென்று வைத்துக்கொள். அப்பொழுது, சிங்கம் மோக்ஷத்துக்குப் போகுமோ?

### Ponder Over This.

இதை ஆலோசித்துப் பாருங்கள்.—"இப்பொழுது கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால், பின்னால் கல்யாணம் செய்து கொள்ளாமல் போனேமே என்று துக்கப்படுவாய்."

"இப்பொழுது கல்யாணம் செய்துகொண்டு கல்யாணம் செய்துகொண்டு விட்டோமே என்று துக்கப்படுவதைக் காட்டிலும், கல்யாணமே செய்து கொள்ளாமல் பிற்பாடு கல்யாணம் செய்து கொள்ளாமல் போனேமே என்று வருத்தப்படுவது ரொம்பவும் மேலானது."

### Advising Others.

பிறத்தியாருக்கு வாத்யார்.—ஓர் மாது ஒரு பத்திரிகையை வெகு ஸாமர்த்யமாய் நடத்திவந்தாள். ஒரு நாள் ஒரு வ்யாஸம் எழுதிக்கொண்டிருக்கும்போது அவள் புருஷன் வெளியிலிருந்து வந்து "சமையல் ஆய்விட்டதா?" என்றான். அதற்கு அவள் "எனக்குத் தெரியாது, வேலைக்காரியைக் கேட்கவேண்டு" மென அதற்கவன் "பிள்ளைகள் சாப்பிட்டுப் பள்ளிக்கூடம் போனார்களா?" வென்று கேட்டார். அதற்கவள் "அதை கவனிக்க இன்றையதினம் எனக்கு நேரமில்லை" யென்றாள். "நல்லது, எனக்கு அதிக பசி, எழுந்துவா" என்றதற்கு, அவள், "நான் எழுதிவரும் வ்யாஸம் முடிய இரண்டுமணி நேரமாகும், இடையில் எழுந்திருக்க ஸாத்யமில்லை" யென்றாள். "அவ்வளவு ச்ரத்தையாக நீ எழுதிக்கொண்டிருக்கும் வ்யாஸம் யாதென்றதற்குப் பின் வரும் பாட்டிற்கு அர்த்தம் எழுதுவதாகத் தெரிவித்தாள். அப்பாடல் பின்வருமாறு:"

> "பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையுண்டானால்
> எத்தாலும் கூடியிருக்கலாம்—சற்றேனும்
> ஏறுமாறாக யிருப்பாளே யாமாகில்
> கூறாமற் சந்நியாசங்கொள்."

கணவன் வாயை மூடிக்கொண்டான்.

# CURIOSITIES.
## விநோதங்கள்.

**A Three-Horned Sheep.**

மூன்று கொம்பு ஆடு:—மதுரை ஜில்லா வட மதுரை ரயில் ஸ்டேஷனுக்கு தென் பாரிசம் 5-மைல் தூரத்திலிருக்கும் அச்சரப்பட்டி கிராமத்தில் ஒரு செம்மறி ஆட்டுக்கு மூன்று கொம்புகளிருக்கின்றன. அவைகள் 4அங்குல நீளமாயும், உறுதியாயும், அழகாயு மிருக்கின்றனவாம்.

**Cost of War.**

யுத்தச் செலவு:—தற்காலத்தில் நடக்கும் யுத்தங் களுக்கு அபரிமிதமாக செலவு பிடிக்கிறதாம். ப்ரொப சர் ஜோர்டன் என்பவர் யுத்தத்தில் ஒரு மனிதனைக் கொல்ல மூவாயிரம் பவுன் அதாவது 45 ஆயிரம் ரூபாய் பிடிக்கிறதென்று சொல்கிறூர்.

**Expense for a Lunatic.**

ஒரு பைத்யக்காரிக்குப் பிடித்த செலவு:—இங்க்லாந்தின் ஒரு மாகாணமாகிய நார்பக் (Norfolk) கில் ஒரு பைத்ய ஆஸ்பத்ரியிருக்கிறது. அதற்கு 1869 வருஷம் பைத்யக்காரி ஒருவள் வைத்யத்துக்கு வந்தாள். அவள் ஸமீபத்தில் இறந்து போய் விட்டாள். அவள் சாகிற வரையில் அவளை வைத்து காப்பாற்ற பிடித்த செலவு ஆயிரம் பவுனும்.

**A Monstrous Rat.**

ப்ரமாண்டமான ஒரு எலி:—சில காலத்துக்கு முன் ஒரு வலையன் (மீன் பிடிக்கிறவன்) ஒரு தீவில் ப்ரமாண்டமான ஒரு எலியைக் கொன்றூனும். அதன் வாலைச் சேர்க்காமல் அது 16 அங்குலமிருந்ததாம். இத்தீவில் அதைத் தவிர வேறெலிகிடையாதாம். இது தன் வளையில் மழைகால ஆகாரத்துக்காக 6 அங் குலமுள்ள 115 சேன்ட் ஈல்ஸ் என்ற மணல் மலங் குகள், 9 அங்குலமுள்ள 9 காட்மீன்கள், 32 பக்ஷிகள் இவைகளைத் தனித்தனியே பத்ரப்படுத்தி வைத்திருந் ததாம். கேவலம் அசேதனமான ஒரு எலிக்கு .முன் ஜாக்ரதையும் புத்தியும் எவ்வளவு இருக்கிறது!

**28 Days Without Food.**

28-நாள் பட்டினி;—ப்ரான்ஸ் தேசத்து பட்டாளத்தைச் சேர்ந்த உத்யோகஸ்தனெருவன் ஒருநாள் கால் தவறி 100 அடி ஆழமுள்ள ஒரு சுரங்கத்தில் விழுந்து விட்டானும். பிறகு 28நாள் கழிந்தபின் அவ் வழியாய்ப் போய்க் கொண்டிருந்த ஒருவன் அழு கைக் குரல் கேட்டுத் தேடிப்பார்த்ததில், உத்யோகஸ்தன் பேசவும் சக்தியில்லாத கேவலஸ்திதியிலிருந்தானும். அவனுக்கு ஆகாரம் கொடுத்து விசாரித்ததில் அன்ன ஆகாரமில்லாமல் 28-நாள்களாக அங்கே மீட்பவர்களின்றி இருப்பதாகச் சொன்னானும். பிறக, பட்டினியைக் குறித்த மற்றொருவிஷயம். இங்கிலாந்து கடற்கரைப்பட்டணமாகிய டோவரில் சாக்கு (Chalk) குன்றுகளுண்டு. ஒரு குன்றிலிருந்து சாக்குப் பாரை யொன்று சரிந்து அதன் கீழ் ஒரு பன்றி அகப்பட்டுக் கொண்டதாம். 160 நாட்களுக்குப் பின்பு அந்த சாக்குப் பாரையை அப்புறப்படுத்த பன்றி உயிருடனிருந்ததாம். ஆனல் அப்பன்றி 160 பவுனிலிருந்து 40 பவுனுகளுக்குறைந்திருந்ததாம்.

**Marriage Incidents in Bioscope.**

பயாஸ்கோப்பில் கல்யாண சம்பவம்:—அமெரிக்கா ஐக்கிய நாடுகளி (United States) லுள்ளடென்வர் என்ற ஊரில் ஸமீபத்தில் ஒரு கல்யாணம் நடந்தது. வதூவினுடைய பெற்றோர்கள் பெரிய வ்யாபாரிகள். வரனும் பெரிய வ்யாபாரி. வதூவரன்களின் கல்யாணம் நடக்கவேண்டுமானல் ஒன்று பெண் வீட்டார் மாப்பிள்ளை ஊருக்குப் போக வேண்டும். அல்லது மாப்பிள்ளை பெண் வீட்டுக்கு வரவேண்டும். இரண்டும் ஸாத்யமில்லை. அவர்களின் வ்யாபார ஜோலி ஊரை விட்டுப்போகவே முடியாது. கல்யாணமும் நடக்கவேண்டும். வதூவரர்கள் ரொம்ப காலம் இன்ன செய்வதென்று தெரியாமல் மலைத்துக் கொண்டிருந்தார்கள். கடைசியாக பையாஸ் கோப் கம்பெனிக்கார ரொருவரால் அவர்களின் மனக்கவலை நீங்கிற்று. அவர் மாப்பிள்ளை ஊரில் கல்யாணம் நடக்கட்டுமென்று முடிவுசெய்து, கல்யாணப் பெண் மாப்பிள்ளை ஊர் ரயிலடிக்கு வந்திறங்கினது முதல், மாதா கோவிலுக்குச் சென்று கல்யாணம் முடித்து வீட்டுக் குத் திரும்பும் பரியந்தம் ஸகல ஸமாசாரங்களையும் படம் பிடித்து விட்டார். இதைப் பெண் வீட்டுக்காரர் கண்டு, கல்யாணத்துக்கு வந்தது போல் களிப்படைந்தார்கள். பையாஸ்கோப்புக் காட்சியில் பேச்சுமட்டு மில்லை. கையாட்டம், தலையசைப்பு, நடத்தல், உட் கார்தல் எல்லாம் தத்ரூபமாயிருக்கும். காலத்துக்கேற்ற கோலம். நினைக்காத காரியங்களென்னென்னவோ மஹா அற்புதமாய் நடக்கின்றன.

# HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

### Removal of Tartar from Teeth.

பல்பாசியைப் போக்கவழி.—பல்லை ப்ரதிதினமும் காலையில் ஸரியாய்த்தேய்த்து சுத்திசெய்யத் தவறுவதால், பல்லிடுக்குகளிலுள்ள ஊத்தை சேர்ந்து அழுகிப்போய் வாயில் துர்நாற்றமுண்டாகிறது; பல்லிடுக்குகளில் பாசிபிடித்து விடுகிறது. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் "பாசிப்பல்லன்" என்று மறுபெயர் வைத்து ஒருவனை கேலிசெய்வதுமுண்டு. மக்னீஷியா என்ற பஸ்மம் மருந்துக் கடைகளில் அகப்படும். பல்ப்ரஷை வெந்நீரில் நனைத்து பஸ்மத்தில் ஒத்தி, மூன்றுமுறை பாசிமேல் தேய்த்து விட்டால், பாசி நீங்கி பல் சுத்தமாய்விடும்.

### Removing Paint from Glass.

கண்ணுடிமேல் தடவியிருக்கும் வர்ணத்தை எடுத்துவிடுதல்.—ஜன்னல் அல்லது அலமாரிக் கண்ணுடிகள்மேல் வர்ணத்தால் எழுதிய சித்ரங்களை யாவது, எழுத்துக்களையாவது கலைத்து விடவேண்டுமானால் வெகு ஸுலபமாய்ச் செய்து விடலாம். அஸெடிக் ஆஸிட் என்னும் அமலவஸ்துவில் துணியை நனைத்து வர்ணமிருக்கிற இடங்களில் தேய்த்தால் வர்ணம் உடனே விட்டுப்போகும்; கண்ணுடி சுத்தமாய் விடும். இந்த அஸெடிக் ஆஸிட் கையை ஒன்றும் செய்யாது. ஆகையால் துணியை தாராளமாய் பிடித்துக் கொள்ளலாம். ஆனால் அஸெடிக் ஆஸிட் வர்ணம் பூசின மரத்தின்மேலே படவேகூடாது.

### Refractory Collar Button.

காலர் ஒட்டையில் போத்தான்போடும் கஷ்டம்.—ஷர்ட்கள், காலர்கள்,ஸலவை செய்து இஸ்திரியாய் வரும்பொழுது ஷர்ட்டின் கழுத்துப்பொத்தான் தொண்டியும், ஸ்லீவ்ஸ் தொண்டிகளும், காலரென்னும் கழுத்துப் பட்டியின் தொண்டியும் விரைத்திருப்பதால் பொத்தான் போடுவது கஷ்டமாயிருக்கும். இந்த உபத்ரவத்துக்காக சிலர் ம்ருதுவான கழுத்துப் பட்டையும், ட்வில் ஷர்ட்டும் போட்டுக்கொள்கிறார்கள். இவைகளால் உபத்ரவமில்லை. ஸாதாரண காலர்கள் கழுத்தைத் திருப்பமுடியாதபடி விரைத்துக் கொண்டு இருக்கின்றன. இருந்தாலும் சிலருக்கு இந்தகாலர் மேலுள்ள ப்ரியம் மாறுவதில்லை. இவர்கள் பொத்தான் போடும் தொண்டிகளில் பரபின் மெழுக்கைத் தடவிவிட்டு பொத்தான்போட்டால் ச்ரமமிருக்காது. பரபினகப்படாதுபோனால், காலரையோ, ஷர்ட்டையோ தொண்டியிலுள்ள கஞ்சியிளகும்படி வாயில் வைத்து நாக்கால் அழுத்தி 3 ஸெகண்டுகள் வைத்திருந்தோமானால், பொத்தானை லகுவாய்ப் போடலாம்.

### Nuisance of Garden Rats.

காட்டெலி உபத்ரவம்.—தோட்டம், வயல் ஆகிய இடங்களில் வளை செய்துகொண்டு எலிகள் பயிராகும் ஸமயத்தில் விதைகளைத்தின்று உபத்ரவம் செய்கின்றன. இந்த உபத்ரவத்தை ஸுலபமாக நீக்கிக்கொள்ளலாம். எலி வளைகளையெல்லாம் மண்ணால் மூடிவிட்டு மறுநாள் பார்த்தோமானால்,எதெல்லாம் மறுபடியும் திறந்திருக்கிறதோ அதிலெல்லாம் எலி இருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம். மருந்து ஷாப்புகளில் கார்பன் பைஸல்பைட் என்ற த்ராவகம் விற்கிறது. இதை வீசாவில் வாங்கிவந்து ஒவ்வொரு வளையிலும் அரைஅரை ஸ்பூன் ஊற்றி, சில நிமிஷங்கள் பொறுத்து ஒரு நெருப்புக்குச்சியைக் கொளுத்திப்போட்டு விட்டால், மண்ணெண்ணெய்போல் எரியும். வெடிக்கவும் வெடிக்கும். உடனே அவ்வளையிலெல்லாம் விஷவாயு பரவிக்கொள்ள சில நிமிஷங்களுக்குள்ளாக எலிகளெல்லாம் அப்படியே யிறந்துபோகும். 200 எலிகளைக்கொல்ல ஒரு பவுன் த்ராவகமிருந்தால் போதும். இப்படிச்செய்து முட்பன்றி உபத்ரவங்கூட நிவர்த்தியா யிருக்கிறதாம். கார்பன்பைஸல்பைட் புகைரொம்பவும் விஷமானதால் மேற்சொன்ன முறையைத் தெரிந்தவர்களே ஜாக்ரதையாய்க் கையாடவேண்டும்.

### Removing Onion Odour.

வெங்காய நாற்றத்தைப் போக்க:—வெங்காயத்தை உரித்த பிறகு கையிலுள்ள நாற்றத்தைப்போக்க வேண்டுமானால், கடுகை ஜலம் விட்டரைத்து அதனால் கையைத்தேய்த்துக் கழுவினால் நாற்றம் போய்விடும். கையிலுள்ள மீன் நாற்றத்தைப்போக்கவும் இப்படிச் செய்யலாம். காரமான காடியைக் கொண்டு கையைச்சுத்தம் செய்வதால் இரண்டு நாற்றமும் போய்விடும். கையை ஸோப்பால் தேய்த்துக் கழுவி கடுதாசியைக் கொளுத்தி அதன் புகையில் காட்டினாலும் இரண்டு நாற்றமும் போய்விடும்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Velir Varalaru.

வேளிர் வரலாறு.—இப்பெயர் பூண்ட ஒரு புஸ்தகம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது 'செந்தமி'ழின் பழைய பத்ராதிபராகிய மு. ராகவையங்கார் எழுதியது. வேளிர் என்பவர்கள் வடக்கே த்வாரகையிலிருந்து தமிழ் நாட்டுச்குக் குடியேறிச் சென்ற ஒரு கூட்டாத்தாராவர். இவர்கள் யாதவகுலத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கூட்டத்தாரின் அரசர்கள் ரொம்ப காருண்யமும், தர்ம சிந்தனையும் கொண்டவர்கள். ஆசிரியர் இவர்களுடைய காலம், ஆட்சி, குணதிசயம் முதலியவைகளைப்பற்றிய விஷயங்களை பழைய நூல்களிலிருந்து ஆராய்ச்சி செய்து தெளிவாய் எழுதியிருக்கிறார். இது சரித்ர ஸம்பந்தமான புஸ்தகங்களில் ஒன்றாகும். தென்னிந்தியா சரித்ர ஸம்பந்தமான பல விஷயங்கள் இதை வாசிப்பதால் தெரியவரும். இதன் விலை 8 அணா. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### Gnana Sambanda Narchabai.

ஞானசம்பந்த நற்சபை.—கோனப்பட்டிலுள்ள இந்த ஸபையின்முதல் வருஷத்து ரிபோர்ட் பத்ரம் ஒன்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது. அந்த ஸபையார் முதல் வருஷத்தில் 11-தடவை கூடி அநேக விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் வாசித்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

### Tamil Grammar in School.

பாடசாலைகளில் தமிழ் இலக்கணம்.—அ. கோபாலய்யர் என்பவர் "தமிழின் தற்கால நிலைமை" என்ற ஒரு வ்யாஸத்தில் பின் வருமாறு எழுதுகிறார்.--

"இனி அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களில் தமிழ்க்கல்வி திருத்தமாக போதிக்கப்பெறினும் அவர்கள் இலக்கணத்தைப் பிரதானமாகக் கொள்ளாமையால் அடிப்படையில்லாத கட்டடம்போலாகிப் பள்ளிக்கூடத்தை விட்ட சிலநாளைக்கெல்லாம் பிள்ளைகள் மனதிற் நில்லாமற் போய் விடுகிறது. "எழுத்தறியார் கல்விப் பெருக்கமனைத்தும் எழுத்தறிவார் காணினிலையாம்" என்று இலக்கணத்தின் பெருமையை ஆன்றோர் கூறியிருக்க, இக்காலத்துச் சிலர் 'இலக்கணமென்பது வேண்டியதே இல்லை; வாக்கியங்கள் சந்திசேர்த்து எழுதக் கூடாது; இலகுவாக எழுதவேண்டும் என்பன ஆதியாகப் பல திருத்தங்கள் கூறுகிறார்கள். செந்தமிழும் நாப்பழக்கம் என்றபடி, ஒரு பாஷையில் எவ்வளவுக்கெவ்வளவு பயிலுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அது இலகுவாகத் தோன்றும். ஆங்கிலத்தை அதிகமாகப் பயின்றவர்களுக்கு அது இலகுவாகத் தோன்றுகின்றது. தமிழை அவ்வாறு பயின்றவர்களுக்குத் தமிழும் இலகுவாகத் தோன்றுகிறது. தமிழில் புணர்ச்சி விதி கடினமாயிருக்கிறதென்றால், ஆங்கிலத்தில் எழுத்துக்கூட்டுதல் கடினமாயிருக்கின்றது. இவ்வாறே ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொன்று கடினமாயிருக்கும். பழகினால் எல்லாம் இலகுவாம்"

### The South Indian Trade Journal.

சென்னை வியாபாரி.—இப்பெயர் கொண்ட வ்யாபாரப் பத்ரிகை யொன்று தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸின் ஆதரவின் கீழ் மெஸ்ஸர்ஸ் மௌலானா அப்துஸ்ஸுபான், வி. துரைஸாமி அய்யங்கார், இவர்களால் ப்ரசுரம் செய்யப்பட்டு வருகிறது. அது மாஸம் ஒருமுறை வெளிவரும். அதில் சென்னை வ்யாபார நிலைமையைப்பற்றி பல முக்யமான விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இதன் வருஷ சந்தா தபால் சார்ஜ் உள்பட ரூ. 5 ஆகும். இது வேண்டுவோர் மானேஜர், சென்னை வ்யாபாரி, இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ், நார்த்பீச் மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### Gnanamritam.

ஞானமிர்தம், முதற்பாகம்:—இந்த நாவல் வி. எஸ். ராமஸ்வாமி அய்யரால் இயற்றப்பட்டது. இது பக்திமார்க்கத்தை நன்றாய் விளக்கிக்காட்டுகிறது. இதன் நடை ஸுலபமாயிருக்கிறது. இதை யாவரும் வாசித்துப் பயனடையலாமென்று நினைக்கிறோம். இதன் விலை அணா 10. வேண்டுவோர் வி. எஸ். ராதாக்ருஷ்ணய்யர், ஆர்யன் ப்ரெஸ், கும்பகோணம் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### Scientific Manuring.

சாஸ்திரீய உரம்.—நிலங்களின் தன்மைக்கும், பயிர்களின் தேவைக்கும் தகுந்தபடி உரமிடுதல் விவஸாயம் வ்ருத்தியாவதற்கு ரொம்பவும் அவசியமானது. இதைப்பற்றிய விவரங்கள் கொண்ட மேலே சொன்ன பெயருடைய பத்ரிகை ஒன்று பாரி அண்ட் கம்பெனியாரால் ப்ரசுரிக்கப்பட்டு வருகிறது. இது எல்லா விவஸாயிகளுக்கும் ரொம்ப உபயோகமாயிருக்கும் என்று எண்ணுகிறோம். இது வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் பாரி அண்ட் கம்பெனி, தபால் பெட்டி நெ. 12, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

# DIARY OF THE MONTH.
## மாஸ வர்த்தமானம்.

### பால்கன் யுத்தம்.

1913ஹு ஜூலைமீ 1-தேதி.—

ஸலோனிக்காவிலுள்ள பல்கேரியர்கள் க்ரேக்கர்களோடு 2-மணி நேரம் சண்டைசெய்து பிறகு தோற்றுப்போய் க்ரேக்கர்வசமானூர்கள். பல்கேரியர்களுக்கும் ஸெர்வியர்களுக்கும் யுத்தம் பலமாய் நடக்கிறது.

2-தேதி.—

பல்கேரியருக்கும் ஸெர்வியருக்கும் நடந்த யுத்தத்தில் பல்கேரியர்களுக்கு ஸுமார் 6000 பேர் சேதம் என்று தெரியவருகிறது. ஸெர்விய ஸைன்யங்கள் பல்கேரிய ஸைன்யத்தை புறங்காட்டி யோடச் செய்தன. பல்கேரியா, ஸெர்வியா, க்ரீஸ் இந்த மூன்று நாட்டு அரசர்களில் ஒவ்வொருவரும் மற்ற நாட்டார் செய்யும் அக்ரமத்தைப்பற்றி வல்லரசுகளுக்குத் தெரிவித்திருக்கிறுர்கள். வல்லரசுகள், அந்த நாடுகள் யுத்தத்துக்குப்போகாமல் தங்கள் மனஸ்தாபங்களை மத்யஸ்தர்களால் ஒழித்துக்கொள்வது நலமென்று தெரிவித்திருக்கின்றன.

3-தேதி —

கொசாஞ என்னுமிடத்தில் இன்று சண்டை நடந்தது. ஸலோனிகாவுக்கு வெளியில் பல்கேரியாவுக்கும் க்ரீஸுக்கும் யுத்தம் நடந்தது. இதில் பல்கேரியர்களுக்கு ரொம்ப சேதமாம். பால்கன் நாடுகள் சண்டை போடுவதை அப்படியே விட்டிருப்பது நல்லதென்றும், சிறிது பலமான சண்டை நடந்த பிறகு ஸமாதானம் செய்வது ஸுலபமாயிருக்கும் என்றும் வல்லரசுகள் நினைப்பதாகச் சொல்லப்படுகிறது.

4-தேதி.—

ஒரு ஸெர்வியசேனை க்ரிவ்ம் லாக் என்னுமிடத்தில் பல்கேரியர்களால் தோற்கடிக்கப்பட்டது.

பல் கேரியர்கள் 3000 ஸெர்வியர்களையும், 8 பீரங்கிகளையும் பிடித்து விட்டதாக ஸமாசார மெட்டுகிறது.

5-தேதி.—

இன்றையதினம் ஸெர்வியர்களும் மாண்டிநிக்ரர்களும் சேர்ந்து கொசான்ஞ என்னுமிடத்தைப் பிடித்து விட்டார்கள். ஒரு பல்கேரிய ஸைன்யம் நிர்மூலமாக்கப்பட்டது.

7-தேதி.—

ஸெர்வியா முன்பு பல்கேரியாவுடன் செய்திருந்த உடன்படிக்கையை ரத்துசெய்து விட்டதாக பல்கேரியாவுக்குத் தெரிவித்து விட்டது.

இதுவரையில் பால்கன் நாடுகளுக்குள் நடந்த சண்டையில், 10,000 க்ரேக்கர்கள் சேதமானுர்கள். (அதாவது இறந்தும் காயமடைந்தும் போனுர்கள்.) ஸெர்வியாவுக்கு 15,000 பேரும், பல்கேரியாவுக்கு 20,000 பேரும் நஷ்டம்.

8-தேதி.—

துருக்கியர்கள் தங்களுக்கு ஒரு பாகம் பூமி சேர வேண்டும் என்றும், அதை பல்கேரியர்கள் சீக்ரம் விட்டுவிடவேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறுர்கள்.

11-தேதி.—

ரொமானியா பல்கேரியாவுடன் யுத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டது. கொசான்ஞவுக்குப் பக்கத்தில் ஸெர்வியர்களுக்கும் பல்கேரியர்களுக்கும் பலமான சண்டை நடந்தது. இரண்டு பக்கத்திலும் ரொம்பசேதம்.

பல் கேரியாவுக்கு ஸொந்தமான ஸிலிஸ்ட்ரியா என்னும் ப்ரதேசத்தை ரொமானியா கைப்பற்றிக் கொண்டுவிட்டது.

ஸமீபத்தில் நடந்து வந்த யுத்தங்கள் ரொம்ப கடுமையாக நடந்தனவாம். காய மடைந்தவர்களை, இறந்தவர்களின் குவியலிலிருந்து எடுப்பது கூட முடியாதபடி அவ்வளவு கொடூரமாக சண்டை நடந்ததென்று, அந்தச் சண்டைகளில் காயமடைந்து வந்தவர்கள் சொல்லுகிறுர்கள்.

12-தேதி.—

யுத்தஸமாதான விஷயமான பேச்சுகள் ரஷ்யாவின் தலை நகராகிய ஸெண்ட் பீடர்ஸ்பர்க்கில் நடக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனுல் அந்தப் பேச்சுகள் தொடங்குவதற்கு முன்னுல் சில விஷயங்கள் யுத்த களத்திலேயே பேசி முடித்துக்கொள்ளப்படும் என்று க்ரீஸ் தேசத்தில் சொல்லப்படுகிறது.

14-தேதி.—

துருக்கியர்கள் த்ரேஸ் என்னும் ப்ரதேசத்தைப் பிடித்ததை பல்கேரியர்கள் தடுக்க முடியாமல் போய் விட்டதாம்.

துருக்கியர்கள் அட்ரியாநோபிளைப்பிடிக்க முயல மாட்டார்கள் என்று சொல்லுகிறார்கள்.

17-தேதி.—

பல்கேரியர் வசமிருந்த ஸாலி பர்கஸ், விஸா, என்னும் ஊர்களை துருக்கியர்கள் பிடித்துக்கொண்டார்கள்.

பல்கேரியர்கள் நாலாபக்கத்திலும் சூழப்பட்டுத் தோற்கடிக்கப்படுகிறார்கள். ரொமானியர்கள் பல்கேரியாவின் ரெயில் போக்கு வரத்துகளையும், தந்தி மார்க்கங்களையும் பிடித்துக்கொண்டு விட்டார்கள். இதனால் பல்கேரியாவுக்குச் சென்ற பத்து நாளாக வெளியூர்களிலிருந்து ஸமாசாரங்கள் வரவில்லையாம்.

19-தேதி.—

பல்கேரிய ஸேனாதிபதி ஒருவர் ஸொபையாவுக்கு அருகில் ரொமானியரால் தோற்கடிக்கப்பட்டு அவர்களிடம் சரணமடைந்தார்.

21-தேதி.—

துருக்கி அட்ரியானோபிளையும் இன்னம் சில இடங்களையும் பிடித்துக்கொண்டதைப்பற்றி வல்லரசுகள் ஆச்சர்யமடைகின்றன. லண்டன் ஸமாதான உடன்படிக்கைக்கு விரோதமாக இப்படி துருக்கி செய்வது தகாது என்று வல்லரசுகள் அபிப்ராயப் படுகின்றன.

துருக்கியர்கள் அட்ரியானோபிளைப்பிடித்ததும் பல்கேரியர்கள் தமது தேசத்துக்கு ஓடிவிட்டார்களாம்.

24-தேதி.—

துருக்கி அட்ரியானோபிளைப்பிடித்ததை பல்கேரியா ஆக்ஷேபித்திருக்கிறது.

26-தேதி.—

பால்கன் நாடுகள் பல்கேரியாவை முற்றிலும் தோற்கடித்து அவமானப்படுத்துவதை வல்லரசுகள் தடுத்துவிடும் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

யுத்தஸமாதானத்தின் பொருட்டு கூடிப்பேச பால்கன் நாட்டு ப்ரதிநிதிகள் ரொமானியாவின் தலைநகராகிய புகாரஸ்ட்டுக்குப் போயிருக்கிறார்கள்.

பல் கேரியாவின் ஸைன்யங்களில் சில யுத்தகளத்தில் சண்டைபோட ஸம்மதப்படாமல் மறுக்கின்றனவாம்.

27-தேதி.—

துருக்கியர்கள் அட்ரியானோபிளைப்பிடித்ததில் அவர்களுக்கு 150 பீரங்கிகள், (இவைகளில் 75 பல்கேரியருக்கு ஸொந்தமானது), பத்து லக்ஷம் சாக்கு தான்யம், 2000 சாக்கு மாவு ஆகிய இவைகள் இவர்கள் வசமாயினவாம்.

28-தேதி.—

ஸமாதானப் பேச்சுகள் நடப்பதற்காக 3-நாள் சண்டையை நிறுத்தி வைக்கவேண்டுமென்ற ப்ரேரணையை க்ரீஸ் அரசர் ஒப்புக்கொள்ளவில்லை. ரொமானியாவின் தலை நகராகிய புகாரஸ்டில் ஸமாதானப் பேச்சுகள் நடைபெறும்.

29-தேதி.—

ரொமானிய சேனையின் ஒருபாகம் பல்கெரியாவின் தலை நகராகிய ஸொபையாவுக்குப் பக்கத்துக்குப் போய்விட்டது. ரொமானியர்கள் இரண்டு கோட்டைகளை இடித்து விடவேண்டு மென்கிறார்கள்.

30-தேதி.—

புகாரஸ்டில் ஸமாதான கானபரென்ஸ் இன்று கூடிற்று. யுத்தமானது 5-நாள்களுக்கு நிறுத்திவைக்கப்பட வேண்டுமென்று ப்ரதிநிதிகள் தீர்மானித்தார்கள்.

31-தேதி.—

துருக்கி அட்ரியானோபிளைப் பிடித்ததை ஆக்ஷேபிக்கிறதற்காக ரஷ்யகப்பற் படை பாஸ்பரஸ் ஜலஸந்தியை முற்றுகை போட்டிருக்கிறது.

1-தேதி.—

**ஒரு புதிய ஸெகண்டரி ஸ்கூல்.**—இன்றையதினம் விஜயநகரத்தில் முனிஸிபல் ஸெகண்டரி ஸ்கூல் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அந்தப் பட்டணத்து மகாராஜா காலேஜின் ப்ரின்ஸ்பல் அதைத் திறந்து வைத்து ப்ரஸங்கம் செய்தார். இந்தியாவுக்கு தற்போது அவச்யம் வேண்டியது கல்வி யென்றும் ரொம்ப விசாலமான இந்த தேசத்தில் எத்தனை காலேஜ்களும் பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டாலும் தகுமென்றும் சொன்னார்.

3-தேதி.—

**பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்.**—இங்க்லாந்தில் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் பகிரங்கமாய் விசாரணை செய்யும். இன்று சிலர் கமிஷனால் விசாரணை செய்யப்பட்டார்கள்.

**டெல்லி நகர அமைப்பு.**—டெல்லி நகரத்தை எப்படிக் கட்டலாமென்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய நிபுணர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

அவர்கள் தங்களுடைய ஆராய்ச்சியை செய்து முடித்து ரிபோர்ட்டை கவர்ன்மெண்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

ஒரு தோட்டக் கச்சேரி.—திருவாங்கூரின் ரெஸிடெண்டவர்களும், அவரது மனைவியும் ஒரு தோட்ட விருந்துக்கச்சேரி நடத்தினார்கள். திருவாங்கூர் மகாராஜா முதலியவர்கள் அந்தவிருந்துக்கு வந்திருந்தார்கள்.

4-தேதி.—

ஒரு வெடி மருந்து விபத்து.—பங்களூரில் ஒரு மகம்மதியன் வீட்டில் ஒரு ஸ்த்ரீயும் ஒரு சிறு பையனும் வாணங்கள் முதலியவை செய்வதற்காக, வெடி மருந்துகள் அரைத்துக் கொண்டிருக்கையில் மருந்து வெடித்து அவர்கள் இரண்டுபேரும் இறந்து போனார்கள். கட்டிடத்தின் மேல்தளம் ஒரு பாகம் இடிந்து போய் விட்டது.

எல்லா இந்தியா வைத்ய மிஷன்.—பால்கன் யுத்தத்தில் காயமடைந்த துருக்கியர்களுக்கு வைத்யம் செய்வதற்காகப் போயிருந்த ஷை மிஷன் இன்று பம்பாய்க்குத் திரும்பி வந்து விட்டது.

தோட்டக்கச்சேரி.—இன்று ஸாயந்திரம் திருவாங்கூர் மகாராஜா திருவநந்தபுரத்தில் ஐரோப்பியர்களுக்கு ஒரு தோட்ட விருந்துக் கச்சேரிநடத்தினார்.

5-தேதி.—

இட்டாலியின் யுத்த செலவு.—கொஞ்ச காலத்துக்குமுன் நடந்த துருக்கி இட்டாலி யுத்தத்தில் இட்டாலிக்கு நேர்ந்த செலவு 20 கோடியே 80 லக்ஷம் லையர் என்று தெரியவருகிறது. இந்திய நாணயத்தில் இது 13 கோடி ரூபாயாகும்.

7-தேதி.—

தற்கொலை செய்ய யத்தனித்தது.—தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த ஆலக்குடியிலுள்ள ஒரு சூத்ர ஸ்த்ரீ தன் புருஷன் தன்னை ஹிம்ஸை செய்து வந்தது பொறுக்காமல் இன்று காலையில் ட்ரெயின் வரும் ஸமயத்தில் ரெயில்வே தண்டவாளத்தில் மேல் வரும் வண்டியால் அரைக்கப்பட்டு சாகும்படி படுத்துக் கொண்டிருந்தாள். ட்ரைவர் அவள் படுத்துக் கிடப்பதைக் கண்டு வண்டியை நிறுத்தி அவளை வண்டியிலேற்றி தஞ்சாவூருக்குக் கொண்டு போனார். அங்கே அவள் தற்கொலை செய்ய யத்தனித்ததற்காக ப்ராஸிக்யூட் செய்யப்பட்டாள்.

9-தேதி.—

நோட்டுகள் திருட்டுப் போயின.—கல்கத்தாவிலுள்ள ஈஸ்டர்ன் பாங்கியில் 2000 ரூ. பெறுமான நோட்டுகள் திருட்டுப் போய்விட்டனவாம்.

பைத்யங்கொண்ட ஒரு வ்யாபாரி.—இன்றைய தினம் வடக்கே நெய்னிடாலில் ஒரு குதிரை வ்யாபாரி பைத்யங்கொண்டு அநேகரைக் காயப்படுத்தித் தொந்தரை செய்தான் என்று தெரியவருகிறது. அவன் மனைவியை அவனுடைய பந்து ஒருவன் மோசம் செய்து கூட்டிப் போய்விட்டதாக அந்த பந்துவின் மேல் கோர்ட்டில் ப்ராது கொடுத்திருந்தான். ஆனால் ஜட்ஜாகிய மிஸ்டர் ட்யூகாப் கார்டன் என்பவர் குற்றவாளியை விடுதலை செய்து விட்டார். அதன்மேல் குதிரை வ்யாபாரி அன்று ஸாயந்திரம் அந்த பந்துவின் வீட்டுக்குப் போய் அங்கிருந்த இரண்டு குழந்தைகள், ஒரு கிழவன் இவர்களை அடித்துக் காயப்படுத்தி, வெளியே வந்து ஜட்ஜ் போவதைக் கண்டு, அவரையும் அடித்துக் காயப்படுத்தினான். அவன் சீக்ரம் கைது செய்யப் பட்டான். ஒரு குழந்தை இறந்து போய் விட்டது. மற்றவர்கள் அபாயகரமான நிலைமையில் இருக்கிறார்கள்.

12-தேதி.—

கோயம்புத்தூர் விவஸாயக் கூட்டம்.—கோயம்புத்தூர் விவஸாய காலேஜின் தினம் இன்று கொண்டாடப்பட்டது. விவஸாய கான்பரென்ஸ் ஒன்று நடந்தது. ஆனரபில் ஸர் ஹாரெல்ட் ஸ்டுவர்ட் ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

விவஸாயமானது தேச க்ஷேமத்துக்கு அவச்யமான ஒரு தொழில் என்றும், விவஸாயத்தை வ்ருத்திசெய்ய அநேக வாலிபர்கள் முன் வரவேண்டுமென்றும், விவஸாய காலேஜில் மாணவர்களுக்கு ரொம்ப ஸௌகர்யங்கள் இருக்கின்றன வென்றும், இன்னம் பல விஷயங்களைப் பற்றியும், ப்ரஸங்கம் செய்தார்.

13 தேதி.—

இந்தியன் கரன்ஸி கமிஷன்.—இந்தியன் கரன்ஸி கமிஷன் அடுத்த ஆகஸ்டு மீ 6உ விசாரணையை நிறுத்தி மறுபடியும் அக்டோபர் மீ 26உ விசாரிக்கத் தொடங்கும். இது வரை நடந்த விசாரணையைப் பற்றி ஒரு ரிபோர்ட் கமிஷன் ப்ரசுரம் செய்யும்.

14-தேதி.—

விவஸாய கான்பரேன்ஸ்.—இன்றையதினம் விவஸாய கான்பரென்ஸ் கோயம்புத்தூரில் இரண்டாவது நாளாகக் கூடிற்று. தென் கன்னடம் கலெக்டர் மிஸ்டர் கௌச்மன் ப்ரெஸிடெண்டாக இருந்தார். விவஸாயத்தில் கோவாபரேஷன்; நிலத்தில் பாக்டீரியாக்கள் செய்யும் வேலை; விவஸாயக் கால் நடைகளை வ்ருத்தி செய்தல் முதலியவைகளைப்பற்றி வ்யாஸங்கள் வாசிக்கப்பட்டன.

15-தேதி.—

காலஞ்சென்ற மதுரைப் பிள்ளை.—ரங்கூன் முனிஸிபல் கமிஷனரும் ஆனரரி மாஜிஸ்ட்ரேட்டும் பெரிய வ்யாபாரியுமாயிருந்த ராய் பகதூர் பி. எம். மதுரைப் பிள்ளையவர்கள் இன்று இரவு 12-மணிக்கு ரங்கூனில் காலகதியடைந்தார்.

16-தேதி.—

சீனுவில் கலகம்.—சீனுவில் கலகம் நடக்கும் போலிருக்கிறது. கையாங்ஸி என்னுமிடத்தில் தென் ஸைன்யத்துக்கும் வடஸைன்யத்துக்கும் யுத்தம் நடந்தது. கலகக்காரர்களுடைய ஸைன்யம் ஸமீபத்தில் ராஜாங்கத் துருப்புகளால் தோற்கடிக்கப்பட்டது.

17-தேதி.—

சீனுவில் கலகம்.—சீனுவில் கலகம் பலமாக இருக்கிறது. குடியரசின் ப்ரெஸிடெண்டாகிய யு-வான்-ஷிகேயை அநேகர் தூஷித்து துண்டுப் பத்ரிகைகள் வெளியிட்டிருக்கிறார்கள். வடபாகத்துத் துருப்புக்கும், தென்பாகத்துத் துருப்புக்கும் சண்டை நடந்து வருகிறது.

19-தேதி.—

சீனுவில் கலகம்.—குடியரசின் தலைவராகிய யு-வான்-ஷிகேயை அநேகர் வெறுக்கிறார்களாம். காண்டன் ப்ரதேசத்துகவர்னர் ஜெனரல் தமது ப்ரதேசம் பெக்கின் குடியரசுக்குக் கீழ்ப்பட்டதல்லவென்று விளம்பரம் செய்துவிட்டார். மேலும் அவர் யு-வான்-ஷிகேயின்மேல் யுத்தம் செய்யத் தொடங்குவார் என்றும் தெரிகிறது.

20-தேதி.—

ஸாந்தூர் ஸமஸ்தானம்.—ஸாந்தூர் ஸமஸ்தானத்தின் ராஜா இன்றையதினம் பொலிடிகல் ஏஜெண்டால் ஸமஸ்தானத்து ஸிம்மாஸனத்தில் அமர்த்தப்பட்டார். அந்த ஸமயம் ஜாத், ஜமகிந்தி, இந்த ஸமஸ்தானத்து ராஜாக்கள் வந்திருந்தார்கள். பொலிடிகல் ஏஜெண்டவர்கள் ஸாந்தூர் ஸமஸ்தானத்துக்கும் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டுக்கும் உள்ள ஸ்நேகத்தைப் பற்றிப் பேசினார்.

22-தேதி.—

சீனுவில் கலகம்.—சீனுவின் ஒரு மாகாணமாகிய பூசின் என்பது குடியரசுக்குக் கீழ்ப்படாமல் தன்னரசு நாடாகிவிட்டது.

இந்தியன் நாஷனல் காங்க்ரேஸ்.—இந்த வருஷம் நடக்கும் காங்க்ரெஸுக்கு, பம்பாய் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஒரு மெம்பரும், கராச்சி முனிஸிபாலிடி ப்ரெஸிடெண்டுமாகிய ஆனரபில் மிஸ்டர் ஹரிச்சந்த்ர விஷ்ணுதாஸ், உபசரணைக் கமிட்டி சேர்மனாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

22-தேதி.—

ஒரு பெரிய தீவிபத்து.—ந்யூ யார்க்கில் ஒரு பெரிய கட்டிடத்தில் தீப்பிடித்து, 20 நிமிஷ நேரத்தில் கட்டிடம் நாசமாய் விட்டது. அதில் 125 பெண்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். நெருப்புப் பிடித்ததாகக் கூச்சலிட்டும் அவர்கள் கவனிக்காமலிருந்து விட்டார்கள். கடைசியில் சிலபேர் வந்து அவர்களை வெளியே போகும்படி துரத்தினார்கள். அவர்களில் 50 பேர் நெருப்புக்கிரையானார்கள். அநேகம் பேர் ரொம்ப காயமடைந்தார்கள்.

24-தேதி.—

க்ருஷ்ண தாஸ்பால்.—வங்காளத்தில் ஒரு ச்ரேஷ்டராக விளங்கி வந்த பாபு க்ருஷ்ணதாஸ்பால் என்பவர் இப்போதைக்கு 29 வருஷங்களுக்கு முன்னால் இறந்து போனார். அவர் இறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது. டாக்டர் ராஷ்விகாரி கோஷ் ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். ராஜரீக ஸம்பந்தமான விஷயங்களில் விவாதம் செய்கையில் ஒருவர்க்கொருவர் மனஸ்தாபம் இல்லாமல் விவாதம் செய்யலாம் என்னும் விஷயம் க்ருஷ்ணதாஸருடைய சரித்ரத்தால் தெரிகிறதென்று டாக்டர் கோஷ் சொன்னார்.

25-தேதி.—

பாடியாலா ஸமஸ்தானம்.—பாட்டியாலா ஸமஸ்தானத்து ப்ரதான மந்த்ரியும், உள் நாட்டு மந்த்ரியும் தங்களுடைய வேலையை ராஜீநாமா செய்துவிட்

டார்கள். மகாராஜா அவர்களுடைய ராஜீநாமாவை அங்கீகாரம் செய்து விட்டார்.

25-தேதி.—

சீனவில் கலகம்.—கலகக்காரர்கள் கவர்ன்மெண்டினுடைய யுத்தாயுத சாலையைப் பிடிக்க ப்ரயத்தனப்பட்டார்கள். கவர்ன்மெண்டு துருப்புகள் அவர்களைத் தோற்கடித்துத் துரத்தி விட்டன.

26-தேதி.—

அலகபாக்கில் ஒரு மீட்டிங்.—இன்று அலகபாத்தில் ஒரு பொது ஜன மீட்டிங் கூடி ஐக்ய மாகாணங்களின் கவர்ன்மெண்டுக்கு ஒரு நிர்வாகஸபை வேண்டும்; அந்த ஸபையில் ஒரு இந்தியரை நியமிக்கவேண்டும்; நிர்வாகத்தையும், ந்யாய அதிகாரத்தையும் பிரிக்கவேண்டியது அவச்யம் என்று பல தீர்மானங்கள் செய்தது.

27-தேதி.—

சீனவில் கலகம்.—ஹூஸங் கோட்டையில் உள்ள ஸைன்யங்கள் முதலில் கவர்ன்மெண்டுபக்ஷமாக இருந்தன. இப்போது கலகக்காரருடன் சேர்ந்து விட்டன. இதனால் அதன் ஸேனாதிபதி அவர்களுக்குப் பயந்து ஓடிவிட்டார். துருப்புகள் வேறு தலைவரை நியமித்துக் கொண்டன.

28-தேதி.—

ஒரு திருட்டு.—பம்பாயிலுள்ள மெஸர்ஸ் வைடேவே லெய்ட்லா கம்பெனியில் ஒரு திருட்டு நடந்தது. 400 ரூ பெருமான ஸாமான்கள் திருட்டுப் போயிருக்கின்றன. வெளிக் கதவுகள் பூட்டினவை பூட்டினபடியே யிருக்கின்றன. போலீஸார் திருட்டைக் கண்டு பிடிக்க ப்ரயத்தனப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

29-தேதி.—

சீனவில் கலகம்.—ஷாங்கேயினருகில் யுத்தம் நடந்து வருகிறது.

30-தேதி.—

எமிக்ரேஷன் சட்டம்.—இன்று லார்ட்ஸ் ஸபையில் தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் நிலைமையைப் பற்றி பேச்சுகள் நடந்தன. இமிக்ரேஷன் சட்டத்தை மாற்ற வேண்டும் என்றும், மாற்றும் வரையில் அதை சட்டமாகாமல் நிறுத்திவைக்க வேண்டுமென்றும் லார்ட் ஆம்ப்தில் பேசினார். தென்னாப்பிரிக்க குடியேற்ற மசோதா (இமிக்ரேஷன்பில்) ஆகஸ்ட்மீ [illegible] சட்டமாகப் போர்ட்படியால் அதை சட்டமாகாமல் நிறுத்திவைக்கும்படி தந்திமூலமாய் தென்னாப்பிரிக்கா கவர்ன்மெண்டுக்கு தெரிவிக்கவேண்டுமென்றும் சொன்னார். லார்ட் க்ரூ அப்படி சட்டத்தை நிறுத்திவைப்பது ஸரியல்ல, வென்றும், ஷை சட்டமானது எந்த விடத்திலாவது ரொம்ப நிர்ப்பந்தமாக இருக்குமானால் அதை சிறிது நிறுத்திவைக்கக் கூடுமென்றும் சொன்னார்.

## SEASON.

## காலஸ்திதி.

### Rainfall.

மழை.—1913ஆ ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1913ஆ ஜூலைமீ 31உவரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 18·20 | 15·86 |
| வால்டேர் | 16·55 | 11·76 |
| காக்கினடா | 14·72 | 12·43 |
| மசூலிப்பட்டணம் | 6· 16 | 12·51 |
| நெல்லூர் | 6· 42 | 5· 11 |
| மதராஸ் | 5. 40 | 7. 68 |
| கூடலூர் | 2· 44 | 6· 42 |
| நாகப்பட்டணம் | 1. 87 | 5· 82 |
| பாம்பன் | 2· 95 | 3· 20 |
| கொழும்பு | 30.63 | 33·64 |
| திருவனந்தபுரம் | 31·39 | 33·52 |
| கொச்சி | 69·98 | 67.61 |
| கள்ளிக்கோட்டை | 66·27 | 77·04 |
| மங்களூர் | 68·23 | 83·14 |
| மெர்க்காரா | 74·69 | 76·41 |
| ஐதராபாத் | 12·72 | 12·72 |
| பல்லாரி | 6· 16 | 6· 64 |
| கர்நூல் | 8· 42 | 9· 72 |
| கடப்பை | 5· 52 | 9· 07 |
| ஹாஸ்ஸான் | 16·55 | 16·86 |
| பெங்களூர் | 9· 88 | 12·75 |
| கொடைக்கானல் | 15·89 | 19·01 |
| உதகமண்டலம் | 22·99 | 25·36 |
| கோயம்புத்தூர் | 5· 48 | 7· 09 |
| வேலூர் | 5· 35 | 11·73 |
| சேலம் | 11·34 | 13·93 |
| திருச்சினாப்பள்ளி | 8· 63 | 7· 76 |
| புதுக்கோட்டை | 6· 12 | 8· 80 |
| மதுரை | 4· 48 | 8· 45 |
| திருநெல்வேலி | 3· 15 | 8· 32 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | லக்ன பாக்கி | அசு | துலு | இங் | தமி | வா | 47-ப்ரமாதீசஞு ஆவணிமூ தக்ஷிணயனம்-வருஷருது } கொல்லம்-1089 பஸலி-1323 \| இங்கிலீஷ்- 1913ஞு ஆகஸ்டு-செப்டம்பர்மீ \| ஹிஜரி-1331 ஷாபான்-ரம்ஜான் |
|---|---|---|---|---|---|---|---|
| யோகம். | நா வி | நா வி | உ | உ | உ | | யஜுருபாகர்ம, பவித்ராரோப, ஸர்ப்பபலி, விருத்யர்க்கம், சிரவணகர்ம ருத்ரஸ்சந்தபாஷ்யப்படிஸாமோ பாகர்ம |
| சி | 5 4 | 30 55 | 13 | 16 | 1 | ச | ○ 49-41, திருவோ 12-5, ஸவு 10-54, பத் 17-5, தி 23-10, சிம்மபூர்ணிமாதி, விஷ்ணுபதி, புண்யகால, ருக் |
| மசி | 4 54 | 53 | 14 | 17 | 2 | ஞா | ப்ர 55-28, அவி 18-52, சோ 12-42, பால 22-30, ரர 8-10, காயத்ரீஜபம், சிராவணபகுள, இஷ்டி கரிநாள் |
| சி | 44 | 52 | 15 | 18 | 3 | தி | த்வி 60-0, சத 26-19, அதி 15-1, தை 28-35, ரா 13-31, திரிதினஸ் பிருக், அசூன் யசயனவிரு |
| மஅ | 34 | 51 | 16 | 19 | 4 | செ | த்வி 1-47, பூட் 34-9, சுக17-42, வணி 35-3, [பகுளா கல்பாதி } |
| சிஉ | 24 | 50 | 17 | 20 | 5 | பு | த்ரி 8-19, உட் 42-1, திரு 20-27, பவ 41-33, தி 1-18, மகாசங்கடஹாசதுர்த்தீ, } |
| சிஅ | 15 | 48 | 18 | 21 | 6 | வி | சது 14-41, ரே 49-32, சூல 22-58, கவு 47-41, தி 15-51, பஞ்சமீதி |
| அசி | 5 | 47 | 19 | 22 | 7 | வெ | பஞ் 20-35, அசு 56-12, கண் 25-9, கர 53-0, ரா 14-23, அதிதி, |
| சி | 3 55 | 45 | 20 | 23 | 8 | ச | ஷஷ் 25-11, பர 60-0, விரு 26-22, பத் 56-59, தி22-33, ஷஷ்டீதி, கன்யாயன 45-9, |
| பிசி | 45 | 44 | 21 | 24 | 9 | ஞா | ஸப் 28-22, பர 1-37, துரு 26-25, பால 59-18, ரா 2-58, மித்ரஸப்தமி, கோகுலாஷ்டமி, காலாஷ்டமி, கிருத்திகை கரிநாள் |
| மஅ | 35 | 43 | 22 | 25 | 10 | தி | அஷ் 29-45, கிரு 5-21, வியா 24-54, தை 59-40, ரா 16-4, ஸ்ரீஜபந்திமன்வாதி இராமா |
| அசி | 25 | 41 | 23 | 26 | 11 | செ | நவ 29-5, ரோ 7-11, ஹர் 22-7, வணி 57-59, தி 21 19, திவாமா |
| சி | 16 | 40 | 24 | 27 | 12 | பு | தச 26-23, மிரு 7-0, வஜ் 17-31, பவ 54-16, தி 27-26, தசமீதி |
| மஅ | 6 | 39 | 25 | 28 | 13 | வி | ஏகா 21-42, திரு 4-48, ஷித் 11-18, கவு 48-47, ரா 2-27, திதிதுவய வியசிரா ஸர்வஜீவவாரஏகா |
| சிஉம | 2 56 | 37 | 26 | 29 | 14 | வெ | த்வா 15-31, புன 1-0, உட 54-33, விய 3-50, உப 51-15, கர 41-51, தி 19-22, திரயோதசீதி, பிரதோஷ |
| மஅ | 46 | 36 | 27 | 30 | 15 | ச | த்ர 7-53, உப 51-24, ஆயி 49-16, பரி 45-27, பத் 33-41, தி 24-21, மாஸசிவராத்ரி, அவம [திரு |
| மசி | 36 | 34 | 28 | 31 | 16 | ஞா | ● 50-8, மக 42-13, சிவ 35-15, சது 24-45, தி 15-47, ரா 29-13, ஸர்வஅமா, தர்ப்பாஹரணம் பிண்டபி |
| சி | 27 | 33 | 29 | 1 | 17 | தி | ப்ர 40-48, பூர 34-56, சித் 24-48, கிம் 15-28, சே 3-47, ரா 20-13, பாத்ரபதசுத்த, இஷ்டி [கிஜயந்தி |
| அசி | 17 | 32 | 30 | 2 | 18 | செ | த்வி 31-44, உத் 27-51, சாத் 14-27, பால 6-13, தை 57-23, ரா 15-58, த்விதீயாதி, சந்திரதர்சனம் கர்க் |
| மசி | 7 | 30 | 1 | 3 | 19 | பு | த்ரி 23-15, ஹஸ் 21-21, சுப 4-30, உப 50-48, வணி 49-23, ரா 8-53, திதிதுவய, மன்வாதி, ஹரிதாளிகாவிருத, இம்மீ இரண்டு பூர்ணிமையால் இங்கே ஸாமோபாகர்மஇல்லை. [அபீஷ்ட கணபதி உத்ஸவாதி |
| சிஅ | 1 57 | 29 | 2 | 4 | 20 | வி | சது 15-48, சித் 15-48, பிரா 47-4, பவ 42-32, தி 28-42, பஞ்சமீதி விநாயகர்துர்த்தீ ரிஷிபஞ்சமீ திருவாதி |
| சி | 47 | 27 | 3 | 5 | 21 | வெ | பஞ் 9-39, சுவா 12-39, மா 40-2, கவு 37-8, தி 24-53, ஷஷ்டியுபவா, சூர்யஷஷ்டீ, குமாரதர்சனம் இராமா |
| சி | 37 | 26 | 4 | 6 | 22 | ச | ஷஷ் 5-1, விசா 8-59, வை 34-20, கர 33-20, தி 18-42, வைசிரா, முக்தாபரணவிருத, திவாமா |
| ம | 28 | 24 | 5 | 7 | 23 | ஞா | ஸப் 2-6, அனு 8-1, விஷ் 30-1, பத் 31-18, தி 22-3, தூர்வாஷ்டமீ, ஜ்யேஷ்டாஷ்டமீ, மித்ரஸப்தமீ |
| சி | 18 | 23 | 6 | 8 | 24 | தி | அஷ் 0-57, கேட் 8-46, பிரீ 27-7, பால 31-2, தி 29-27 |
| சி | 8 | 22 | 7 | 9 | 25 | செ | நவ 1-32, மூல 11-16, ஆயு 25-32, தை 32-27, தி 7-3, ரா 6-21 |
| அ | 0 58 | 20 | 8 | 10 | 26 | பு | தச 3-44, பூரா 15-16, ஸவு 25-9, வணி 35-23, ரா 6-35, |
| சி | 48 | 18 | 9 | 11 | 27 | வி | ஏகா 7-22, உரா 20-36, சோ 25-48, பவ 39-31, ரா 1-17, ஸர்வஜீவவார ஏகா சிரவணம்ப, வாமன ஜயந்தீ |
| மசி | 39 | 17 | 10 | 12 | 28 | வெ | த்வா 12-8, திரு 26-59, அதி 27-15, கவு 44-52, ரா 7-50, சிரவணத்வாதசீ, பிரதோஷ பரிவர்த்தனோத்ஸவ |
| சிஅ | 29 | 16 | 11 | 13 | 29 | ச | த்ர 17-46, அவி 34-7, சுக 29-18, கர 50-49, ரா 24-7, சதுர்த்தசீதி [பயோவிருதம் கரிநாள் |
| சி | 19 | 14 | 12 | 14 | 30 | ஞா | சசி 23-59, சுக 41-43, திரு 31-44, பத் 57-13, ரா 29-34, அதிதி, அனந்தவிருத |
| சி | 0 9 | 30 12 | 13 | 15 | 31 | தி | ○ 30-29, பூட் 49-32, சூல 34-22, பவ 30-29, சே 3-48, கன்யாரவி 55-55, சந்திரகிரஹணம், சிம்மசூன்யதி உமாமகேசுவரவிரு, பிரௌஷ்டபதி சிராத்தம் அலப்யம் |

| | | | |
|---|---|---|---|
| ரா | | செ சு | சு |
| | 11-கட, சு<br>16-சிம், பு<br>19-மி, செ | | பு |
| | | | ர |
| குரு | | | கே |

# சாஸ்திரீய உரங்கள்.

## எங்கள் ராணிப்பேட்டை உரக்கிடங்கு.

## விசேஷ உரங்கள்.

பொடாஷ் உரங்கள் (Potassic Manure).

ஸல்பேட் ஆப் பொடாஷ் (Sulphate of Potash). எங்கள் கிடங்கில் விற்பனையாகிற இந்த சரக்கு முதல்தரமானது. இதில் 100-ல் 50 பங்கு சுத்த பொடாஷ் உத்திரவாதம் செய்யப்படுகிறது.

ம்யூரியேட் ஆப் பொடாஷ் (Muriate of Potash). இதில் கொஞ்சம் சாதாரண உப்பு (Common Salt) இருக்கிறது. இதில் 100-ல் 80 பங்கு க்ளோரைட் ஆப் பொடாஷ் (Chloride of Potash) இதற்கு சரியான 50 பங்கு சுத்த பொடாஷ் உத்திரவாதம் செய்யப்படுகிறது.

கெயினிட் (Kainit). இது அசுத்தமான பல உப்புகளடங்கியது. இது பயிர்களுக்குண்டாகிய நோவுகளை நிவர்த்தி செய்யக்கூடியது. இதில் பொடாஷோடுகூட 100-ல் 30-முதல் 40-வரை சாதாரண உப்பும், க்ளோரைட் ஸல்பேட் ஆப் மாக்னிஷியா (Chloride Sulphate of Magnesia) உப்புகளும் அடங்கியுள்ளது. இதில் 100-ல் 12-முதல் 13-வரை சுத்த பொடாஷ் உத்திரவாதம் செய்யப்படுகிறது.

எங்கள் உரங்களை உபயோகித்து நற்பலன் பெற்றவர்களின் நற்சாட்சிப் பத்திரங்கள் சென்னையில் பிரசுரமாகும் "பிழைக்கும் வழி" முதலிய தமிழ் பத்திரிகைகளிலும் இங்கிலீஷ் பத்திரிகைகளிலும் வெளியாகின்றன.

***The Presidency Manure Works, Ltd.,***

***Ranipet.***

***Managing Agents: Parry & Co., Madras.***

**இராஜதானி ரஸாயன உரக்கிடங்கு, இராணிப்பேட்டை,**

மானேஜிங் ஏஜண்டுகள்:—


**பாரி அண்டு கம்பெனி,**

மதராஸ்.

# KHADER AND YOUSUFF BROS

Watch Dealers, P. L., MADRAS, E. C.

## "ஸர்தார்"



இது மேல் சாவியுள்ளதும், கனத்த கண்ணாடியால் மூடிபோட்டதும் மிகவும் சரியான காலத்தைக் காட்டக் கூடியதும் வெகு நாளைக்கு ஓடக்கூடியதுமான வெகு நேர்த்தியான கை கடியாரம். தென் இந்தியா ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்கு ஸப்ளை செய்யப்படுகிறது. மிகவும் சிறந்த "லீவர்" கடியாரம்.

விலை ரூ. 12.


## "உத்தியோகஸ்தர்"

இது உத்யோகஸ்தர்களுக்குஸ்பெஷலாக செய்யப்பட்ட கடியாரம். மேல்சாவியுள்ளது. ஒருபக்கம் கனத்த கண்ணாடியால் மூடியுள்ளது. சரியான காலம் காட்டும். முரட்டுத்தனமாயுபயோகித்தாலும்கெட்டுப்போகாது. கொஞ்சம் சிறிய சயிஸ். அழகாயும் திருப்திகரமாயு மிருக்கும்.



தபாற்கூலியுள்பட விலை ரூ. 10

## கோல்ட் மெடல் "யாங்கீ" ஸர்க்யூட் கட்டில்.



இது மிகவும் சிறந்த அமெரிக்கன் மரத்தினால் செய்யப்பட்டு, வெளியே போகிறவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இது $6\frac{1}{2}$ அடி நீளம் $2\frac{1}{2}$ அடி அகலம் $1\frac{1}{2}$ அடி உயரம். அதனுடைய நிறை 15 பவுண்டுதான். 1000 பவுண்டு எடை தாங்கும், கோடை காலத்தில் நிலா வெளிச்சத்தில் மிகவும் லகுவாய்த் தூக்கிக்கொண்டுபோய், வேண்டுமான இடத்தில் போட்டுக்கொண்டு தூங்கலாம். கொசுவலை யுள்பட ரூ. 20 இதற்கு எழுதும்போது, சமீபத்திலுள்ளரயில் ஸ்டேஷனை எழுதுவதுடன் ரூ.5 அட்வான்ஸ் அனுப்பவேணும்.

## காதர் அண்டு யூஸப் பிரதர்ஸ்,

கடியார வர்த்தகர்கள், கவர்மெண்டு ஸப்ளையர்கள்,

பி. எல். சென்னை, E. C.

MADRAS: Printed by Thompson & Co. at the Minerva Press
Published by G. A. VAIDYARAMAN & Co., Sunkurama Chetty Street, Georgetown, Madras.

இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

# PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி.எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. ப்ரமாதீச ஆவணி —AUGUST 1913. ஸஞ்சிகை 8. No. 8.

பொருளடக்கம்.

| | பக்கம். |
|---|---|
| வ்யாஸங்களுக்கு வெகுமதிகள் | ... 394 |
| விசேஷ வ்யாஸங்கள்.— | |
| ஜுலைமாஸத்து வ்யாஸப் போட்டி விஷயம். | ... 394 |
| நமது விவஸாயிகள் ஏழைகளாயிருப்பதற்குக் காரணங்கள் என்ன? —பி. வி. வாமனமூர்த்திராவ் | ... 395 |
| மூங்கில் பயிர்செய்யும் விதம், —தி. ப. ஸுப்பராயர் | ... 399 |
| பாக்டீரியாவும் பாலும் | ... 400 |
| இந்தியாவில் பாக்டரிகளும் தொழிலாளிகளும் | ... 402 |
| கதையும் ஜீவ்ய சரித்ரமும்.— | |
| ஆனரபிள் டாக்டர் ராஷ் விஹாரி கோஷ் | 403 |
| விசேஷத்திரட்டு.— | |
| இன்ஷுரென்ஸால் உண்டாகும் பயன் | ... 409 |
| எருக்கம் தழை எரு | ... 410 |
| ஸ்கூல்களின் ஸுகாதாரம் | ... 413 |
| தேங்காய் வெண்ணெய் | ... 414 |
| வீட்டுக் கல்வி | ... 414 |
| குறைந்தவட்டிக்கு பணம் கிடைப்பதின் கெடுதிகள் | ... 415 |
| பத்ரிகை ஆராய்ச்சி. | ... 417 |
| பையன்கள் பகுதி. | ... 421 |
| ஸ்த்ரீகள் பகுதி. | ... 423 |
| பகுதிக்குறிப்புகள்.— | |
| விவஸாயம்—வ்யாபாரம்—கைத்தொழில்—பொருளாதாரம் — கோவாபரேஷன்—பாங்கி வ்யாபாரம் — இன்ஷ்யூரென்ஸ்—வித்யாவிஷயம்—விலையுள்ளபொருள்கள்—வ்யாபார முறைகள்—சாஸ்த்ரமும், யந்த்ரங்களும், நூதன கற்பிதமும்—சட்டம்—வைத்யம்—வேடிக்கையும் திக்கடாக்கதைகளும்—விநோதங்கள்—யுக்திகளும் முறைகளும்—தமிழ்க் கல்வி | ...425—442 |
| மாஸ வர்த்தமானம் ... 443. காலஸ்திதி | ... 447 |
| பஞ்சாங்கம். | ... 448 |

CONTENTS.

| | PAGE |
|---|---|
| **Prize Essay Competition** | ... 394 |
| **Special Articles—** | |
| The July Prize Essay Competition | ... 394 |
| Why are our Agriculturists Poor? —P. V. Vamanamurti Row, *Accountant, P.W.D., Kurnool* | ... 395 |
| Raising Bamboo —T. P. Subbarayar | ... 399 |
| Bacteria and Milk | ... 400 |
| Factories and Works in India | ... 402 |
| **Story and Biography—** | |
| Hon. Dr. Rash Behari Ghosh | ... 403 |
| **Selections—** | |
| Benefits of Insurance | ... 409 |
| Yerukkam Leaf Manure | ... 410 |
| Sanitation in Schools | ... 413 |
| Cocoa-Butter | ... 414 |
| Home Training | ... 414 |
| Danger of Cheap Money | ... 415 |
| **Review of the Press** | ... 417 |
| **Boys' Section** | ... 421 |
| **Ladies' Section** | ... 423 |
| **Departmental Notes—** | |
| Agriculture ... ... ... | ... 425 |
| Commerce ... ... ... | ... 427 |
| Industry ... ... ... | ... 428 |
| Economics ... ... ... | ... 429 |
| Co-operation ... ... | ... 430 |
| Banking ... ... ... | ... 431 |
| Insurance ... ... ... | ... 432 |
| Education ... ... ... | ... 433 |
| Economic Products ... ... | ... 434 |
| Business Methods ... ... | ... 435 |
| Science, Machinery and Invention | ... 436 |
| Law ... ... ... | ... 437 |
| Medicine ... ... ... | ... 438 |
| Fun and Anecdote ... ... | ... 439 |
| Curiosities ... ... ... | ... 440 |
| Hints and Recipes ... ... | ... 441 |
| Tamil Literature ... ... | ... 442 |
| **Diary of the Month** ... ... | ... 443 |
| **Season** ... ... ... | ... 447 |
| **Calendar** ... ... ... | ... 448 |

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.

ஜி. எ. வைத்யராமன் அண்டு கம்பெனி, 3 & 4. சுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

# வைத்யர்களுக்குள் அபிப்ராய பேதமில்லை.

"வைத்யர்களுடைய அபிப்ராயங்கள் பலவாறாயிருக்கின்றன" என்னும் வாக்யம் ரொம்ப ஸாமான்யமானது. ஆனால் அதை எத்தனைதடவை திருப்பிச் சொன்னாலும் தகும். இந்த பூமியில் உள்ள எந்த வ்யாதியைப்பற்றியும் வைத்யர்கள் ஒரேவிதமான அபிப்ராயங் கொடுக்கவில்லை. ஆனால் உஷ்ண ப்ரதேசங்களில் உடுத்திக்கொள்வதற்கேற்ற துணி என்னவென்பதைப்பற்றி மாத்ரம் அவர்களுடைய அபிப்ராயம் ஒரேவிதமாயிருக்கிறது. ஒருவர் பாக்கியில்லாமல் எல்லா வைத்யர்களும் உஷ்ண ப்ரதேசத்தில் உடுத்திக்கொள்ள ரொம்பவும் ஏற்ற உடை கலப்பில்லாத கம்பளிதான் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.


ஆகையால் நீங்கள் உடுத்திக்கொள்வதற்கு வாங்கும் கலப்பில்லாத கம்பளித்துணியாகிய லாலிம்லியை வாங்கவேண்டுவது அவச்யமாகும்.

மாதிரித் துணிகளுக்கும், விலை விவரங்களுக்கும் எழுதிக் கேளுங்கள். அவை இனாமாக அனுப்பப்படும்.

கான்பூர் உல்லன் மில்ஸ் கம்பெனி, லிமிடெட், கான்பூர்.

**CAWNPORE WOOLLEN MILLS Co., Ld.**

**Cawnpore.**



**Dr. RASH BEHARY GHOSH.**

டாக்டர் ராஷ் பிஹாரி கோஷ்.